விலை ரூபா 20.00



சீனா போர் ஒத்திகை
பக்கம் 09



ஐரோப்பிய நாடுகள் கதவடைப்பு
பக்கம் 10



இலங்கைக்கு எச்சரிக்கை
பக்கம் 21



கரவெட்டி வெற்றி
பக்கம் 22

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 119

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 11 சனிக்கிழமை (24/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஐ.நாவின் தீர்மானத்துக்கு தமிழ் மக்கள் வரவேற்பு
## உரிமை மீறல்களை இனித் தடுக்கும் எனக் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கை மீதான தீர்மானம் நிறைவேறியிருப்பது குறித்து தமிழ் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இனிவரும் காலங்களிலாவது இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதற்கு இந்தத் தீர்மானம் ஊக்கியாக அமையும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

''அமெரிக்கா, இந்தியா ஆகியன இணைந்து தமது நலன்களுக்காக இயற்றியதாக இருந்தாலும் இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கும் பயனுள்ளதாகவே இருக்கிறது. இனி வரும் காலங்களிலாவது மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு இது துணை புரியும் என்று நம்பலாம்'' என்கிறார் கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ்.மால்மருதன்.

விவசாயத்தை முழு நேரத் தொழிலாகக் கொண்டுள்ள 48 வயதான மருதன், பகுதிநேரமாக வர்த்தகத்திலும் ஈடுபடுகிறார்.

இந்தத்தீர்மானம் போன்றே, இறுதிப் போரின் போது உயிரிழந்தவர்கள் விவரங்களைக் கணக்கெடுக்கவும் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப் 04

# அடுத்த வாரம் பீரிஸ் அமெரிக்கா பயணம்



## ஹிலாரி கிளின்டனின் அழைப்பை ஏற்று

கொழும்பு, மார்ச் 24

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான அமெரிக்கப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று வாஷிங்டனில் நடைபெறவுள்ளது.

இதற்காக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் 04



### மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி கொழும்பு வருகை

கொழும்பு, மார்ச் 24

மாலைதீவில் தற்போது நிலவும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கையின் மத்தியஸ்தத்தை வரவேற்பதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள உயர் மட்டக் குழுவினரிடம் கலந்துரையாடுவதற்காக நஷீட் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வருகைத்தந்திருந்தார். அவர் நேற்று முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஷபீக் ரஜாப்தின் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத் சாலி உட்பட பல்வேறு முக்கிய அரசியல்வாதிகளை நேற்று நஷீட் சந்தித்துள்ளார். (த)

# தமிழருக்கான அதிகாரப் பகிர்வை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்
## அமெ.தீர்மானத்தை ஆதரித்தமை குறித்து இந்திய அரசு விளக்கம்

புதுடில்லி, மார்ச் 24

இலங்கை அரசு நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நாம் ஏற்கனவே வரவேற்றுள்ளோம். இலங்கையின் பல்வேறு மத ரீதியான, இன ரீதியான குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தி, அரசியல் தீர்வு காண இந்தத் தீர்மானம் நல்ல வாய்ப்பு என்று நாம் கருதுகிறோம் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது பற்றி இந்திய மத்திய 04

# இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைக்க வேண்டும்
## இந்தியப் பிரதமர் மன்மோகன்

புதுடில்லி, மார்ச் 24

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தனது நிலைப்பாட்டுக்கு இணங்கியே இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது எனவும் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்காகக் கரிசனைகள் வெளிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென விரும்பியதாகவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இலங்கையின் இறைமையை இந்தியா மீற விரும்பவில்லை எனவும் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது ஏன்? என செய்தியாளர்கள் வினவியமைக்குப் பதிலளிக்கும் போதே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறினார்.

''சாதக பாதகங்களை சீர்தூர்க்கிப் பார்க்க வேண்டும். நாம் செய்தது இலங்கை தொடர்பான எமது நிலைப்பாட்டிற்கிணங்கியதே. இலங்கையின் இறைமையை மீற நாம் விரும்பவில்லை. ஆனால் கரிசனைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனால் தமிழ் மக்கள் நீதியையும் கௌரவமான வாழ்க்கையையும் அடைய முடியும்'' என அவர் தெரிவித்தார். (த)

# நாட்டுக்கு எதிராக எழுதும் ஊடகவியலாளர்களின் கை, கால் உடைக்கப்படும்



கொழும்பு, மார்ச் 24

வெளிநாடுகளுக்குச் சென்று எமது நாட்டுக்கு எதிராகக் கருத்துகளைக் கூறும் ஊடகவியலாளர்கள் நாட்டுக்குள் கால்வைத்தால் அவர்களின் கை, கால்களை உடைப்பேன் என்று பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

போத்தல ஜயந்த என்னும் ஊடகவியலாளரை நான் தான் இந்த நாட்டிலிருந்து துரத்தினேன். இத்தகைய ஊடகவியலாளர்கள் நாட்டுக்குள் கால்பதித்தால் அவர்களின் கை, கால்கள் அடித்து உடைக் 04

### இந்தியாவாலேயே இலங்கைக்கு தோல்வி

கொழும்பு, மார்ச் 24

மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர், இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியதால், 04

# அரசின் நடவடிக்கைகளை உளவறிய கனடா முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் ஏதேனும் ஒன்றையாவது அரசு கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தியுள்ளதா என்பதை அறிவதில் யாழ்ப்பாணத்துக்கு வந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் காட்டினர். அரச அதிபர் திருமதி இமெல்டா 04

### வாகன சந்தை பெரும் வீழ்ச்சி

ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக மோட்டார் வாகனச் சந்தையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தத் தகவலை இலங்கை மோட்டார் வாகன வர்த்தக சங்கத் தலைவர் திலக் குணசேகர வெளியிட்டுள்ளார். ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக சகலவிதமான மோட்டார் வாகனங்களும் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை மோட்டார் வாகனங்களுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் மோட்டார் வாகன வர்த்தகச் சங்கத் தலைவர் திலக் குணசேகர தெரிவித்துள்ளார்.

### கட்டுவன்வில கிராமத்தில் மோதல்

கல்முனை பிரதேசத்திலிருந்து சமய நடவடிக்கைகளுக்காக சென்ற சிலருக்கும் வெலிகந்த கட்டுவன்வில கிராம மக்களுக்கும் இடையில் நேற்று மதியம் மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் போது 15 வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் பின்னர் அந்தப் பகுதியில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மோதலில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### வாகரையில் வெடிபொருள் மீட்பு

வாகரை - கட்டுமுறி வனப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாமொன்று இருந்ததாக வாகரைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தப் பகுதியில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றை அடுத்து வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

### நீதிமன்றத்தின் முன் பதற்றநிலை

பௌத்த பிக்குகள் இருவரை கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர்கள் நுகேகொடை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட போது நீதிமன்றுக்கு வெளியே பதற்ற நிலை ஏற்பட்டது. சந்தேக நபரையும் அவரின் சட்டத்தரணியையும் அங்கிருந்த மக்கள் தாக்க முற்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராக வேண்டாம் எனக்கூறி சட்டத்தரணியைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. எனினும் சந்தேக நபரையும் சட்டத்தரணியையும் நீதிமன்றுக்குள் பொலிஸார் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். சந்தேக நபர்கள் இருவரையும் ஏப்ரல் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

### ஓமானிலிருந்து மசகு எண்ணெய்

ஓமானிலிருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. (விரிவான விவரம் 2 ஆம் பக்கத்தில்)

# விரைவாக செயற்படுங்கள்

## அரசிடம் வலியுறுத்துகிறது அமெரிக்கா

வொஷிங்ரன்,மார்ச் 24

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றியதன் ஊடாக சமரசம் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்த விரிவான செயல் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என இலங்கையிடம் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் ஊடகப் பேச்சாளர் டொமி விட்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.



உலகம் முழுவதும் பரந்த ஆதரவை பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் கௌரவத்தினை முன்னெடுத்து ஒரு நீண்ட சிக்கலான வழிமுறைகளைத் தீர்ப்பதற்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை வரவேற்கத்தக்க விடயமாகவே கூற வேண்டும்.

எவ்வளவு விரைவாக செயற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக இலங்கை செயற்பட வேண்டும்.

இலங்கை அரசு தனது சொந்த மக்களுக்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு நாங்கள் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து கேட்டுக் கொண்டுவருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார். (த)

# ஓமானிடமிருந்து மசகு எண்ணெய்

கொழும்பு,மார்ச் 24

அமெரிக்காவின் அழுத்தத்தைத் தொடர்ந்து, ஓமானிடமிருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு உடன்படிக்கை ஒன்றில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளுக்கு உட்பட்டு இருக்கும் 12 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

உலக மசகு எண்ணெய் சந்தையில் ஈரானிடமிருந்து குறிப்பிடத்தக்களவு எண்ணெய்யை இலங்கை வாங்குகிறது.

**உலக மசகு எண்ணெய் சந்தையில் ஈரானிடமிருந்து குறிப்பிடத் தக்களவு எண்ணெய்யை இலங்கை வாங்குகிறது.**

மசகு மற்றும் பெற்றோலியப் பொருள்களை ஓமானிடமிருந்து இறக்குமதி செய்வதற்குக் கைச்சாத்திட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கை 93வீதமானமசகுஎண்ணெய்யை ஈரானிடமிருந்தே இறக்குமதி செய்கிறது. (த)

### எரி வாயு விலை எகிறும்

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு தமக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பிரதான இரண்டு சமையல் எரிவாயு நிறுவனங்களான லிற்றரோ மற்றம் லாவ் ஆகியன எரிவாயுவின் விலை அதிகரிக்கும்படி கோரிக்கை விடுத்திருப்பதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

இதன்படி 12.3கிலோகிராம் நிறையுடைய லாப் சமையல் எரிவாயுவின் விலையை 209 ரூபாவாலும் லிற்றரோ எரிவாயுவின் விலையை 175ரூபாவாலும் அதிகரிக்குமாறு அந் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தடையைத் தளர்த்தியது அமெ.

## பாதுகாப்புத் தளபாடங்களை இலங்கை இறக்குமதி செய்யலாம்

வொஷிங்ரன்,மார்ச் 24

இலங்கைக்குப் பாதுகாப்புத் தளபாடங்களை ஏற்றுமதி செய்வதற்கான தடையைத் தளர்த்தி, வான் வழி மற்றும் கடல் வழி கண்காணிப்புக்கான கருவிகளின் ஏற்றுமதியை அனுமதித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.

**சிறிய ரக வானூர்திகள், கமெராக்கள் மற்றும் அவற்றுக்கான பாகங்கள் போன்றவற்றுக்கு தனித்தனியாக தடையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

சிறிய ரக வானூர்திகள், கமெராக்கள் மற்றும் அவற்றுக்கான பாகங்கள் போன்றவற்றுக்கு தனித்தனியாக தடையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் நேற்று முன்தினம் வியாழக்கிழமையிலிருந்து நடைமுறைப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்தத் தடை தளர்த்தப்பட்டதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டமைக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்தது.

இந்த ஏற்றுமதி தடை 1980ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளது. (த)

# தேயிலைக் கைத்தொழில் பெரும் அச்சுறுத்தலில்

கொழும்பு,மார்ச் 24

மேற்குலக நாடுகள் ஈரானுக்கு எதிராக விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாக இலங்கையின் கீழ்நாட்டுத் தேயிலைக் கைத்தொழில் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கான பணத்தை செலுத்துவதில் ஈரான் எதிர்நோக்கும் பிரச்சினைகளே இதற்குக் காரணம் என சங்கத்தின் தலைவர் கலன தஹநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் கீழ்நாட்டு தேயிலைக்கான கேள்வி குறைந்துள்ளதாகவும் இலங்கைத் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கூறியுள்ளார்.

தேயிலை உற்பத்தியின் 25 வீதம் ஈரானுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வழமையான பெறுமதிமிக்க தேயிலை வகைகளே ஈரான் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலையில் ஈரானின் தேயிலைச் சந்தையை இலங்கை முற்றாக இழக்க வேண்டிய அபாயமும் காணப்படுவதாகவும் கலன தஹநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)




அமெரிக்க உற்பத்திப் பொருள்களை பகிஷ்கரிக்குமாறு பொதுமக்களைக் கோரும் செயற்பாட்டில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# அமெரிக்கா பெற்ற வெற்றியை நடைமுறைப்படுத்த இடமளியோம்

## சீறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு,மார்ச் 24

ஜெனிவாவில் அமெரிக்கா பெற்ற வெற்றியை அமுல்படுத்த இலங்கை மக்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு நிர்மாண பொறியியல் துறை அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் வாக்களிப்பு முடிந்து விட்டது. ஆனால் இது இலங்கையில் நடக்கும் ஒரு சாதாரண தேர்தலல்ல. உலகில் மிகச் சிறிய நாடான எமது இலங்கையை எதிர்த்து உலகிலே மிகப் பெரிய வல்லரசான அமெரிக்கா பெற்ற வாக்கு விகிதம் ஒப்பீட்டளவில் மிக குறைந்ததேயாகும்.



எமது நாட்டிலே பலர் மது விற்பனைக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ள போதும் அவர்கள் விரும்பிய இடங்களில் மது விற்பனைக் கடைகளைத் திறக்கப் பொது மக்கள் அனுமதிப்பதில்லை.

அதுபோல் இன்று அமெரிக்காஉட்பட மேற்குலம் ஜெனிவாவில் பெற்ற அனுமதிப் பத்திரத்தை நடைமுறைப்படுத்த இலங்கை மக்களான நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம்.

உலகுக்கே பயங்கரவாதத்தைக் கொண்டு சென்ற விடுதலை புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் ஒரு நடவடிக்கையையே இன்று அமெரிக்காமேற்கொண்டுள்ளது.

அன்று ஒரு பிரபாகரனை உருவாக்கியது போல் அடுத்து ஒரு உருத்திரகுமாரனை உருவாக்கும் ஒரு நிகழ்ச்சிநிரல் தான் இது.

மூன்று தசாப்த காலம் நாம் இழந்திருந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுத்தந்த எமது போர் வீரர்களை உலக நீதி மன்றத்தின் முன்நிறுத்த இந் நாட்டு மக்கள் அனுமதிக்கப் போவதில்லை. சிறிய நாடான கியூபாவால் அமெரிக்காவை எதிர்த்து வாழ முடியுமாயின் ஏன் எம்மால் முடியாது?- என்றார். (த)

### வெளிநாட்டு முதலீடு 100 கோடி டொலர்

வரலாற்றில் முதற் தடவையாக நாட்டில் வெளிநாட்டு முதலீடு 100 கோடி டொலரைக் கடந்துள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அதன்படி 2010ஆம் ஆண்டில் 516 மில்லியன் டொலராக காணப்பட்ட வெளிநாட்டு முதலீடு 2011இல் 1066 மில்லின் டொலராக அதிகரித்துள்ளது. நாட்டின் ஏற்றுமதி வருமானம் 27 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதன்படி 2010இல் 5.175 மில்லியன் டொல்ராக இருந்த ஏற்றுமதி வருமானம் 2011இல் 6.571 மில்லியனாக அதிகரித்துள்ளது. (த)

# சர்வதேச அழுத்தங்கள் எமக்குப் புதியவையல்ல

கொழும்பு,மார்ச் 24

சர்வதேச அழுத்தங்கள் ஒன்றும் எமக்கு புதிதல்ல எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச அழுத்தங்களை வெற்றிகரமாக முறியடிக்கக் கூடிய இயலுமை காணப்படுகின்றது. பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமையினால் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் கிரமமான பொருளாதார கொள்கைகள் போன்றவற்றினால் எந்தவொரு சவாலையும் எதிர்நோக்க முடியும்.

**இலங்கை காலத்திற்குக் காலம் இவ்வாறான சர்வதேச அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது.**



இலங்கை காலத்திற்குக் காலம் இவ்வாறான சர்வதேச அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஜி.எஸ்.பி பிளஸ் உள்ளிட்ட பல்வேறு சவால்களை இந்த அரசு வெற்றிகரமாக எதிர்நோக்கியது.

ஜெனிவாப் பிரேரணை மூலம் நாட்டுக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கப்படுகின்ற போதிலும், அவ்வாறான அழுத்தங்களை முறியடிக்க எம்மால் முடியும் -என்றார். (த)

# சுகாதார பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்துப் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் நேற்றுக் காலை தொடக்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நான்கு பிரதான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதாக இலங்கைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் உபசெயலாளர் சமன் ஜயசிங்க தெரிவித்தார்.

சீருடைக்கான கொடுப்பனவை அதிகரித்தல், பயணக் கொடுப்பனவை 7,500 ரூபாவாக அதிகரித்தல், 10,000 பேருக்கு ஒரு சுகாதார பரிசோதகர் என்ற அடிப்படையில் அதிகாரிகளைச் சேவைக்கு அமர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்வைத்துள்ளனர். (த)

## கல்லெறியில் முடிந்த சீட்டு

வலி வடக்கு, மார்ச் 24

சீட்டுப் பிரச்சினையால் எழுந்த சண்டையைத் தொடர்ந்து ஐந்துக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கற்களின் எறிகாயங்களுடன் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள சபாபதிப்பிள்ளை முகாமில் இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் இரு தரப்பினரையும் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர். (ம-86)

## அவல நிலையில் ஆடியபாதம் வீதி

வலி வடக்கு, மார்ச் 24

நல்லூர் செம்மணி வீதியில் இருந்து திருநெல்வேலிச் சந்தை வரையான ஆடியபாதம் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்த வீதி சேதமடைந்து காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட வீதியை திருத்துவதற்கு எந்த விதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய குன்றும் குழியுமாக காணப்படும் இந்த வீதி ஒரு முக்கிய போக்குவரத்து வீதியாகக் காணப்படுகின்றபோதும் இது குறித்து எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளாந்தம் தென்மராட்சியில் இருந்து வருபவர்கள் மற்றும் கண்டி வீதிக்குச் செல்பவர்கள் என ஆயிரக் கணக்கான வாகனங்கள் நாளாந்தம் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குறித்த வீதிக்கு உரிய வகையில் வெளிச்சம் இன்மையால் வாகனங்களை பெரும் சிரமத்தின் மத்திய செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-86)

### வடமராட்சி கற்கோவளம்

# ஐஸ் தொழிற்சாலைக்கு அமெரிக்கா மானியம்

### 2 லட்சத்து 75ஆயிரம் டொலர் அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்து

*வடமராட்சி, மார்ச் 24*

*மீன் வகைகளைக் கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களில் சந்தைப்படுத்துவதற்கு வசதியாக ஐஸ் உற்பத்தியை அதிகரிக்க ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அபிவிருத்திக்கான முகவராண்மை நிறுவனம் வடமராட்சி கற்கோவளம் ஜெயந்தா கைத்தொழில் பூங்கா ஐஸ் தொழிற்சாலைக்கு இரண்டு லட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்க முன்வந்துள்ளது.*

*இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கற்கோவளம் ஜெயந்தா கைத்தொழில பூங்கா ஐஸ் தொழிற்சாலையில் அண்மையில் நடைபெற்றது.*




ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தின் ஆசிய பணியகத்துக்கான சிரேஷ்ட பிரதி உதவி நிர்வாகஅதிகாரிதிருமதிடெனிஸ் ரோலின்ஸ், ஜெயந்தா கைத்தொழில் பூங்கா நிர்வாக இயக்குநர் திருநாவுக்கரசு சேந்தன், திருமதி சேந்தன் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்தத் திட்டம் தொடர்பாக ஐக்கிய அமெரிக்க ராஜ்ஜியங்களின் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையானது நிலையான வேலைவாய்ப்புக்களூடாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வருமானத்தை அதிகரிக்கும் முகமாக 'பிஸ்' பிளஸ் (BIZ +) திட்டத்தின் கீழ் முதலாவது மானியத்தைக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலைக்கு வழங்கியது.

மீட்சி பெறும் பகுதிகளில் உள்நாட்டு வியாபாரிகளுக்கும் அதிகரித்துவரும் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் தொழில் தொழில் உருவாக்கப்படுவதற்கும் ஆதரவளிக்கின்றது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்குத் தொழிற்நுட்ப மற்றும் நிர்வாக ரீதியிலான உதவியுடன் சேர்த்து மானியங்களை இந்தத் திட்டம் வழங்குகின்றது.

கொழும்புக்கும் வேறு எங்கும் உடன் மீன்களை ஏற்றி இறக்கும் மீனவர் களிடமிருந்தும் வர்த்தகர்க ளிடமிருந்தும் வளர்ச்சி யுறும் தேவையை நிறைவேற்றுவதில் நாளொன்றுக்கு 6 தொன்களிலிருந்து 26 தொன்களுக்கு ஐஸ் உற்பத்தியை அதிகரிக்க ஜெயந்தா பூங்கா ஐஸ் தொழிற்சாலைக்கு இந்த அமெரிக்க மானியம் உதவியளிக்கும்.

பிராந்தியத்தின் ஐஸ் கட்டிக்கான தேவையை நிறைவேற்றுவதன் மூலம் மீனவர்களினதும் மீன் வர்த்தகர்களினதும் வருமானங்களை இந்த மானியம் அதிகரிக்கும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவல நிலையை அடைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் உதவுவதே பிஸ் பிளஸ் இன் இறுதியான குறிக்கோளாகும்.

புதிய மத்திய வசதி ஒன்றில் சூழல் ரீதியில் நட்புறவிலான குளிரூட்டலின் கொள் வனவுக்கும் நிறுவுகைக்கும் இந்த மானியம் உதவும். அத்துடன் உள்ளூர்மயப்படுத்தப்பட்ட குளிரூட்டல் மற்றும் ஐஸ்கட்டி பங்கிடும் நிலையங்களுக்கு ஆதரவளிக்கும் நிறுவனத்தின் செயற்பாடுகளின் வடிவமைப்பை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்ட குளிர் நீரின் ஆகு செலவுகளைக் குறைப்பதற்காக உதவுதற்கும் தொழில்நுட்ப உதவியையும் பிஸ் பிளஸ் திட்டம் வழங்கும்.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகள் மீதான முன்னேற்றத்தை அவதானிப்பதற்கு இலங்கைக்கான மூன்று நாள் பயணத்தின் அங்கமாகவே ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தின் ஆசிய பணியகத்துக்கான சிரேஷ்ட பிரதி உதவி நிர்வாக அதிகாரி திருமதி டெனிஸ் ரோலின்ஸ் பருத்தித்துறை கற்கோவளத் துக்கு வருகைதந்து ஜெயந்தா பூங்கா ஐஸ் தொழிற்சாலையை நேரில் பார்வை யிட்டு இந்த மானியத்தை வழங்கினார்.

(ம-8)

## குளங்களையும் உரிமை கோருகின்றனர்

### யாழ். மாநகர முதல்வர் விசனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று ஆண்டுக் கணக்காக வெளியிடங்களில் வசித்துவிட்டு தற்போது இங்கு வந்துள்ள நிலையில் குளங்களைக் கூட உரிமை கொண்டாடுகின்றனர்.

வெளியிடங்களில் வசித்த இவர்கள் இங்கு வந்து சில பகுதிகள் தங்களது உடமை எனச் சொந்தம் கொண்டாடுகின்றார்கள். குளங்கள் உள்ள பகுதிகளைக் கூட அது தமது என்கிறார்கள்.

குளங்கள் தனியாருக்கு உரியதல்ல. யாழ். மாநகர சபைப் பகுதியில் நாற்பத்தி ஒரு குளங்களில் பதினைந்து குளங்கள் முற்றாகவே மூடப்பட்டுள்ளன.இவற்றில் சிலவற்றை பொதுமக்கள் தமது காணி என கூறுகின்றனர். இன்று 32 நீர்த் தேக்கங் களே உள்ளன.

தனியாரால் சட்டத்துக்குப் புறம்பான வகையில் கையகப்படுத்திக் கொண்ட குளங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையில் நடைபெற்ற செய்தியாளர் களுடனான சந்திப்பில் இந்த விடயத்தைஅவர்குறிப்பிட்டுள்ளார்.

குளங்களைச் சுற்றி மூன்று அடி பாதை இருக்க வேண்டும். சில குளங்களைச் சுற்றியுள்ள பாதைகளும் தனியாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி இவற்றின் மீது கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நகரில் உள்ள குளங்கள் உரிய வகையில் உரிய முறையில் சுத்தமாக்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தண்ணீருக்கு ஒரு லட்சம் ரூபா

நவாலி, மார்ச் 24

ஆனைக்கோட்டையில் திறந்து வைக்கப்பட்டுள்ள முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் தண்ணீர் வசதிக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிலையத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக்கு தண்ணீர் வசதி, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்று அண்மையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்த உதவி வழங்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில நலன் விரும்பிகள் தற்போது காலையில் தேநீர், சிற்றுண்டி வகைகளையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

(ம-100)

## நகரில் பிச்சை எடுத்த ஆறுபேருக்கு எச்சரிக்கை

### இவர்களில் 4 பேர் சிறுவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். நகரில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த கைக் குழந்தைகள், சிறுமிகள் உட்பட 6 பேர் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மொனராகலையில் இருந்து வந்த இவர்களே இங்கு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தபோது பிடிக்கப்பட்டனர் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அவர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் பின்னர் அவர்களது ஊருக்குச் செல்லும் படி கூறி உத்தரவிட்டு விடுதலை செய்தார்.

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும், யாழ். பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தரும் இணைந்து 6 பேரையும் பிடித்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இரண்டு கைக்குழந்தைகளுடன் இரண்டு தாயாரும் இரண்டு சிறுமிகளுமே இவ்வாறு மன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர் அவர்களை சொந்த ஊருக்கே திரும்பிச் செல்லும் படி கூறி விடுதலை செய்தார்.

(ம-4)

## நிகழ்வுகள் இன்று

**வெளியீட்டு விழா**

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் 'நகுலநாதம்' மகாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா பிற்பகல் 3மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலயப் பிரதம குரு இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**சேவை நலன் பாராட்டு**

வடமராட்சி கல்வி வலய அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்வி வலயத்தில் கடமையாற்றிச் சென்ற கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு விழா முற்பகல் 11 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் கே.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-190-8)

**பொதுக்கூட்டம்**

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசப் பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சமாசத் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-9)

# அடுத்த வாரம் பீரிஸ் அமெரிக்கா பயணம்

01 ஜி.எல். பீரிஸ் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் வொஷிங்டனுக்குப் புறப்படவுள்ளது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கை விடயம் குறித்தான பிரேரணையைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் கொழும்புடன் பேச்சு நடத்துவதற்கு வாஷிங்டன் விரும்பியிருந்தது. வெளிவிவகார அமைச்சர் பீரிஸுக்குக் கடிதம் எழுதியிருந்த ஹிலாரி அம்மையார் அதனூடாகவே அழைப்பு விடுத்திருந்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, இலங்கை அரசின் பொறுப்புக்கூறும் விடயம் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து ஆழமாக ஆராய்ந்து கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கு அமெரிக்கா வருமாறு பீரிஸுக்குப் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்த ஹிலாரி அம்மையார், அதற்கான பதிலைத் தான் எதிர்பார்க்கின்றார் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அந்தக் கடிதத்திற்குப் பதில் எதுவும் அனுப்பாத வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஹிலாரியின் அழைப்பை சாதகமான முறையில் பரிசீலித்துப் பார்க்கும் நிலைப்பாட்டில்இருக்கவில்லை.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி சுவிஸ் தலைநகர் ஜெனிவாவில் ஆரம்பமானது. எனவே, ஜெனிவா விடயத்தில் அமைச்சர் பீரிஸ் தீவிரமாக இருந்தார். அதனால் ஜெனிவா மாநாடு முடிவடையும் வரை அவருக்கு அமெரிக்க அமைச்சரின் கடிதத்திற்குப் பதிலளிக்க முடியாமல் போனது.

அமெரிக்கா வலிந்து வந்து வழங்கிய சந்தர்ப்பத்தைப் புறக்கணிக்கும் போக்கில் செயற்பட்ட கொழும்பு அரசு, வொஷிங்டனின் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியது. எனினும், இறுதிக்கட்டத்தில் இலங்கை எதிர்பார்த்த முடிவு கிட்டவில்லை. அமெரிக்காவின் பிரேரணை 09 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து, அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை அரசு, வெள்ளைமாளிகை விடுத்த அழைப்பை அவசர அவசரமாக மீள்பரிசீலனை செய்து அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசும் நிலைப்பாட்டையும் எடுத்தது.

இதற்கமையவே ஜெனிவாத் தீர்மானம் குறித்தும் இலங்கை அரசின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் முக்கியமான பதில்களுடன் பீரிஸ் தலைமையிலான உயர்மட்டக்குழு வாஷிங்டனுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் செல்கிறது.

குறிப்பாக இலங்கைத் தேசத்தின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை ஆகியவற்றைக் கருத்திக்கொள்ளாமல் ஜெனிவாவில் அமெரிக்கா பிரேரணையைத் தாக்கல் செய்து அதனை நிறைவேற்றிக் கொண்டமை அநீதியான செயல் என அமெரிக்காவிடம் சுட்டிக்காட்டவுள்ள பீரிஸ் அதற்கான நியாயப்பாடுகளையும் முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்தபடியாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள சிபாரிசுகளை இலங்கை அரசு எவ்வாறு ஒருவருட காலத்திற்குள் அமுல்படுத்தும் என்பது தொடர்பிலான விசேட செயற்றிட்டம் குறித்து தெளிவுபடுத்தியுள்ள பீரிஸ், மேலும் பல முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுவார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாட்டுக்கு எதிராக எழுதும் ஊடகவியலாளர்களின் கை, கால் உடைக்கப்படும்

01 கப்படும் எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்தார். சுனந்த தேசப்பிரிய, நிமால் பெர்னாண்டோ, பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோரைப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லி அவர் இந்த அச்சுறுத்தலை விடுத்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் கிரிபத்கொடையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிகிரியாவிலிருந்து சுனாமி வந்தாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து எனக்கெதிராகச் சுனாமி வராது. மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே என்னைப் பதவியிலிருந்து விலக்க முடியும். வேறு எவரும் என்னில் கை வைக்க முடியாது. அது நடக்கும்வரை நான் களனியிலிருந்து செல்ல மாட்டேன்.

டீ.ஏ. ராஜபக்ஷவின் புதல்வர்களை அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்தில் இருந்தே நான் அறிவேன். நாட்டின் மன்னரை நான் நேசிக்கின்றேன். இந்த நாட்டின் மன்னர் என்னை நம்புவார்.

நான் இறப்பதற்கு அஞ்சவில்லை. கொழும்பிலுள்ள போதைப்பொருள் விற்பனையாளர்கள் இருவர் என்னை துரத்துவதற்கு முயற்சித்தனர். எனது உயிருக்கு ஏதேனும் நடந்தாலும் எனது மனைவியும் இரு பிள்ளைகளும் அங்கேயே இருப்பர். இன்று முதல் எனது மகனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். - என்றார் மேர்வின் சில்வா.

இதேவேளை, மேர்வின் சில்வா வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்துவர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (த)

## இந்தியாவாலேயே இலங்கைக்கு தோல்வி

01 இலங்கைக்கு ஆதரவான வாக்குகள் வழங்கப்படுவதில், பாதிப்பு ஏற்பட்டதாக பிரான்ஸுக்கான இலங்கை தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் இந்த நிலைப்பாடு மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். இந்தியாவின் இந்தத் தீர்மானம் காரணமாக இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்க இருந்த நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அத்துடன் ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்திருந்த நாடுகள் அமெரிக்காவுக்கு ஆதரவாக வாக்களித்தன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அப்பால் சென்ற விடயங்கள் அமெரிக்காவின் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சர்வதேசச் சட்டத்தை மீறியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு, மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் அந்த தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் ஓரளவு பயங்கரமான நிலைமையைக் காண முடிகிறது. இலங்கை மீதான இந்தத் தீர்மானம் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இறுதி நடவடிக்கை என்ன என்ற முடிவுக்கு வரமுடியவில்லை.

இதில் இருந்து மீள முடியும் என்ற போதிலும் தீர்மானம் மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்படமாட்டாது என்று கூறமுடியாது என்றார் அவர். (த)

# அரசின் நடவடிக்கைகளை உளவறிய கனடா முயற்சி

01 சுகுமாரிடம் அவர்கள் இதுபற்றித் துருவித் துருவி விசாரித்துள்ளனர். நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான கிரிஸ் அலெக்ஸ்சாண்டர், செனட்டர் வேர்னன் வைற் உள்ளிட்ட குழுவினர் யாழ். அரச அதிபரை நேற்றுமாலை சுமார் அரைமணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இந்தக் கலந்துரையாடலின் போது கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஏதாவது யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதை அறிவதில் ஆர்வம் காட்டினர்.

குறிப்பாக ''யாழ். மாவட்டத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவம் மற்றும் பொலிஸாரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா?'' என்று அவர்கள் வினவியுள்ளனர். நடைமுறைப்படுத்த எந்தளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் நிறைவடைந்துள்ளனவா. என்பன உள்ளிட்ட விடயங்களிலும் கனேடியக் குழுவினர். ஆர்வம் காட்டினர்.

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுவந்து வெற்றிபெற்ற தீர்மானத்துக்கு கனடாவும் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறு சிங்கவையும் கனேடிய குழுவினர் நேற்று மாலை சந்தித்துப் பேசினர். (உ-3)

# தமிழருக்கான அதிகாரப் பகிர்வை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்

01 வெளியுறவு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நாங்கள் ஏற்கனவே வரவேற்றுள்ளோம். இலங்கையின் பல்வேறு மதரீதியான இனரீதியான குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தி, அரசியல் தீர்வு காண இது நல்ல வாய்ப்பு என்று நாங்கள் கருதுகிறோம்.

கடந்த 2009-ஆம் ஆண்டு இதே குழுக் கூட்டத்தில் இலங்கை, இதை செய்வதாக உறுதி அளித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுடன் பேச்சுக்கள் தொடங்கப்பட வேண்டும் என்று நாங்களும் வலியுறுத்தினோம்.

போரின்போது காணாமல்போன நபர்கள், சிறைவைக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகளைத் தடை செய்தல், தனியார் நிலங்களை திரும்ப ஒப்படைத்தல், இராணுவமயமாக்கலைக் குறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை உறுதியான சிபார்சுகளை முன்வைத்துள்ளது.

இந்தச் சிபார்சுகளை அமுல்படுத்த எடுத்து வரும் நடவடிக்கைகளை இந்தக் குழுக் கூட்டத்தில் இலங்கை அரசு விளக்கிக் கூறியுள்ளது. இந்த அறிக்கையை அமுல்படுத்துவது, உண்மையான நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியாவும், வடக்கு இலங்கையில் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்குக் கணிசமான உதவிகளைச் செய்துள்ளது. வீடுகள் அமைத்தல், கண்ணிவெடிகளை அகற்றுதல், கல்வி, பொது சுகாதாரம், தொலைத்தொடர்பு வசதி ஆகியவற்றை நாங்கள் அளித்துள்ளதால், அங்கு இயல்பு நிலைமை திரும்ப வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இலங்கை அரசு விரிவான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இலங்கை அரசியல் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துதல், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மனித உரிமை மீறல் விடயத்தில், சம்பந்தப்பட்ட நபர்களைப் பொறுப்பாளி ஆக்குவதுடன், மனித உரிமைகளை மேம்படுத்த வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள், இலங்கையின் சிறுபான்மை இனமாகிய தமிழர்கள் உட்பட அனைத்து இன மக்களிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானத்தின் செய்தியையும், நோக்கத்தையும் இந்தியா ஆதரிக்கிறது. அதே சமயத்தில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அளிக்கும் எத்தகைய உதவியும், இலங்கை அரசுடன் கலந்தாலோசனை நடத்தி, அதன் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதெல்லாம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாம் ஒப்புக் கொண்ட விதிமுறைகள்.

நல்லிணக்கத்தையும், அமைதியையும் நிலைநாட்டுவதில் ஜனநாயக நாடான இலங்கைக்குப் போதிய காலஅவகாசம் அளிக்கப்பட வேண்டும். நாம் எடுக்கும் முடிவுகள், இந்த நோக்கத்துக்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, இடையூறாக இருக்கக் கூடாது. அண்டை நாடான இலங்கையுடன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கலாசார மற்றும் ஆன்மிக உறவு, இந்தியாவுக்கு இருக்கிறது.

இந்த நிலையில், இலங்கை நிகழ்வுகளில் இருந்து நாங்கள் ஒதுங்கி இருக்க முடியாது. இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவம், கண்ணியம், நீதி, சுயமரியாதை ஆகியவற்றுடன் கூடிய எதிர்காலம் அமைவதற்காக, நல்லிணக்க நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் இலங்கை அரசுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கும் - என்றுள்ளது. (த)

# ஐ.நாவின் தீர்மானத்துக்கு தமிழ் மக்கள் வரவேற்பு உரிமை மீறல்களை இனித் தடுக்கும் எனக் கருத்து

01 படுத்தவும் சர்வதேச அழுத்தங்கள் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கேட்கின்றார்.

இந்த விடயத்தில் அமெரிக்காவுக்குக் கிடைத்த வெற்றி என்பது தமிழர்களுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் என்று வர்ணிக்கின்றார், பெயர் குறிப்பிட விரும்பாத முல்லைத்தீவு வலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர்.

பொதுவாகத் தமிழ் மக்கள் இந்தத் தீர்மானத்தை வரவேற்றாலும், இறுதிப் போரில் நிகழ்ந்தப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து அறுதியான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் காணமுடிகின்றது.

''முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய இனப்படுகொலை, இன்று சர்வதேச சமூகம் முன்னிலையில் பார்வைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறி இருப்பதை அப்படித்தான் பார்க்கவேண்டும். காலம் கடந்தாயினும் சர்வதேசம் அந்தப் படுகொலைகள் பற்றிய உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளது'' என்கிறார் துணுக்காயைச் சேர்ந்த ஆசிரியர். அச்சம் காரணமாக அவரும் தனது பெயரை வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

வழக்கமாகப் பேச்சோடு முடிந்துவிடும் விடயங்கள் இந்த முறையே தீர்மானம் வரைக்கும் வந்துள்ளது என்று நிம்மதி அடைகிறார் சீலன். 38 வயதான சீலன் இப்போது கனரக வாகன ஓட்டுநராகப் பணியாற்றி வருகிறார். ''இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சொல்ல முடியாத துன்பங்களையும் சித்திர வதைகளையும் அனுபவித்திருக்கிறார்கள். இவையெல்லாம் இப்போதுதான் உலகின் கண்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. முதல் தடவையாகத் தமிழர்களின் பிரச்சினையை இந்த உலகம் ஏற்றுக்கொண்டது போல நடந்த குற்றங்கள் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும்'' என்கிறார் அவர்.

தமக்கு ஒருபோதும் நீதி கிடைகாதா என்று ஏங்கிக் கிடந்த தமிழர்களுக்கு இந்தத் தீர்மானம் ஒரு மன நிம்மதியை அளித்திருப்பதாகக் கூறுகிறார் கொக்குவிலைச் சேர்ந்த மஞ்சுளா. ''ஆனாலும் இத்தகைய தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஓர் ஆபத்து வந்துவிடுமோ என்ற பயமும் அடிமனதில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது'' என்றும் அவர் கூறினார்.

இதேபோன்று, இந்தத் தீர்மானத்தால் தமிழ் மக்களுக்குப் பயன் ஏதும் இல்லை என்று கூறி நிராகரிக்கும் தமிழர்களும் இருக்கவே செய்கிறார்கள். அமெரிக்கத் தீர்மானம் முழுக்க முழுக்க சுயநலமிக்கது என்கிறார் அருள்நேசரத்தினம் ரவிக்குமார். யாழ்.மாவட்ட தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவரான அவர், ''சீனாவைச் சமாளிப்பதற்காகவே அமெரிக்க இந்தத் தீர்மானத்தை இலங்கை மீது கொண்டு வந்தது'' என்று வாதிடுகிறார்.

''இந்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமை இல்லை. ஆசியாவில் அதற்கு இடமில்லை. இங்கு சீனாவே பிரதான சக்தி. அதை அறிந்து ஆசியாவில் தனது மூக்கை நுழைக்க இடம்பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கா தமிழர்களின் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டது. அது தவிர அதற்குத் தமிழர்கள் மேல் எந்த அக்கறையும் இல்லை'' என்றார் அவர்.

எப்படி இருந்தாலும் பெரும்பாலான தமிழர்களின் கருத்துக்கள் தீர்மானத்துக்கு ஆதரவாகவே இருக்கின்றன. கடந்த காலங்களைவிட எதிர்காலத்திலாவது இப்படி நடக்காமல் இருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்தத் தீர்மானம் உதவ வேண்டும் என்று அவர்களில் அதிகமானோர் விரும்புகின்றனர்.

''தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை நல்லது. எதிர்காலத்தில் அது ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரலாம். ஒரு வருட காலத்தினுள் அவர்கள் (அரசு) ஏதாவது செய்துதானே ஆகவேண்டும். குறிப்பாக வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவத்தையாவது குறைக்கவேண்டும். இந்தத் தீர்மானம் இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்த உதவ வேண்டும்'' என்கிறார் திருகோணமலையைச் சேர்ந்த அரச அதிகாரியான பிரணவன். (உ-3, 4, 16)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மன வெதும்பல்களை ஓரங்கட்ட முனையும் பக்குவம் தேவை

ஈரானிடம் இருந்து எரிபொருள்களைத் தொடர்ந்து இறக்குமதி செய்யும் நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது. இன்னும் மூன்று மாத காலத்திற்குள் - அதாவது எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் - தான் பட்டியலிட்டுள்ள நாடுகள், தமது எரிபொருள் இறக்குமதியில் ஆகக் குறைந்த கணிசமான அளவையேனும் குறைக்காவிடில், அவற்றின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முந்திய அறிவித்தலின் பிரகாரம், ஈரானிடம் இருந்து எரிபொருள் இறக்குமதியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்த பதினொரு நாடுகளின் பட்டியலை வெளியிட்டுப் பேசும் போதே, ஏனைய நாடுகளுக்கு மூன்று மாத கால அவகாசம் விதித்தும், பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று எச்சரித்தும் ஹிலாரி கிளின்ரன் அறிவித்தல் செய்தார்.

ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, கிரீஸ், செக்கோசிலவாக்கியா, பெல்ஜியம், போலந்து, ஸ்பெயின் ஆகியனவும் ஆசிய நாடுகளில் ஜப்பானுமே அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று இதுவரை ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதியை கணிசமான அளவு குறைத்துள்ளன என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து, இந்தியா, சீனா, பாகிஸ்தான், இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகள் பலவும் ஆபிரிக்க நாடுகள் பலவும், அமெரிக்காவின் சொற்கேட்டு, அதன் அறிவித்தலை ஏற்று, ஈரானிடமிருந்து தமது எரிபொருள் இறக்குமதியைக் குறைக்கவில்லை என்பது வெளிப்படையாகி விட்டது.

ஈரான் வகுத்துள்ள அணுசக்தித் திட்டங்களே, அந்நாட்டின் மீதான எரிபொருள் இறக்குமதித் தடைக்குக் காரணம் என்பது தெரிந்ததே. தனது அணுசக்தித் திட்டங்கள் அமைதிப் பணிகள், வளர்ச்சிப் பணிகளுக்கானவை என்று ஈரான் தெரிவித்தாலும், அமெரிக்காவோ ஏனைய மேற்கு நாடுகளோ அதனை ஏற்கத் தயாரில்லை.

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள், மேற்கு நாடுகளைக் குறிவைக்கும் நோக்கம் கொண்டவை. எனினும், உலகின் ஏனைய பிராந்தியங்களையும் அழிவுக்குள்ளாக்கும் அபாயம் உண்டென்பதால், அனுமதிக்க முடியாது; முளையிலேயே கிள்ளப்பட வேண்டும் என்ற சமன்பாட்டுடனேயே அமெரிக்கா, பொருளாதாரத் தடை குறித்து தீவிர நிலைப்பாட்டைக் கையில் எடுத்துள்ளது என்று கொள்ளலாம்.

மொத்தத்தில், தனது வேண்டுகோளை, நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாத நாடுகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கவே செய்யும் என்பது மீண்டும் மீண்டும் உறுதியாகிறது.

ஈரான் பல காலமாகவே அணு ஆயுத உற்பத்தியில் இறங்கி உள்ளதாகவும் அதனால் அந்த நாட்டின் முதலாவது இலக்காகத் தன்மீதே குறி வைக்கப்படும் என்றும் இஸ்ரேல் குழப்பமடைந்துள்ளது. அதன் நிமித்தம் இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற முனைப்புடன் உள்ளதும் இரகசியமல்ல.

சர்வதேச அணுசக்தி நிறுவனம் கடந்த சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில், ஈரானில் அணு ஆயுத உற்பத்தி நடைபெறுவதாகக் கண்டறியப்பட்டது. ஈரானிய ஜனாதிபதி அஹமதி நிஜாதின் அண்மையில் தமது நாடு அணு உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருப்பதை ஒப்புக்கொண்டார்.

அத்தகைய பின்னணியில், இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளுக்கு ஈரான் ஆபத்தாக மாறியுள்ளது என்பதனை உலக நாடுகள் பலவும் உள்ளூர உணர்ந்துள்ளன.

அதேவேளை, ஈரானின் பிரதான வருமானம் எண்ணெய் ஏற்றுமதியே என்பதாலும், அதன் வருமானத்தில் எண்பது சதவீதம் எண்ணெய் ஏற்றுமதி மூலமே கிடைக்கிறது என்பதனாலும், அமெரிக்க - ஈரான் நாடுகளுக்கு இடையேயான பனிப்போர், உலகளாவிய ரீதியில் பெரும்பாலான நாடுகளில் மிகப்பெரிய அளவில், பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் பேராபத்து உண்டு.

குறிப்பாக, ஓமானுக்கும் ஈரானுக்கும் இடையே உள்ள நான்கு மைல் அகலமான ஹோர்மஸ் நீரிணை (HORMUZ STRAIT), ஈரான் எச்சரிப்பது போன்று மூடப்பட்டால், உலக நாடுகளுக்கான எண்ணெய் விநியோகம் முப்பத்தைந்து சதவீதம் (35%) தடைப்பட்டுப் போகும் ஆபத்து உருவாகும். அதன் விளைவாக, எண்ணெய் விலை, இருநூறு வீதத்தால் (200%) அதிகரிக்கும் பேராபத்து உண்டு. உலக நாடுகள் அனைத்தையும் அது மிகப் பெரிய அளவில் பாதிக்கும்.

உத்தேசிக்கப்பட்டுள்ளது போன்று, அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்தால், சொந்தத்தில் எண்ணெய் வளம் இல்லாத இலங்கை போன்ற நாடுகள் மிக மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படும்.

இவற்றுக்கிடையே, ஈரானின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ள அளவுக்கு, ஆதாரம் கிடைக்கவில்லை என்றும் -

உரிய உறுதியான ஆதாரம் கிடைத்தால் மட்டுமே ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்ள முடியும், நியாயப்படுத்த முடியும் என்றும் அமெரிக்கத் தலைமைப் பீடம் கருதுகிறது. அதனால், அவசரப்படுவதில் இரண்டு கருத்துக்கள் நிலவுவதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்ட காரணங்கள், பின்னர் நிரூபிக்கப்படாமை, அமெரிக்காவிடம் ஒருவகையான குற்ற உணர்வைத் தோற்றுவித்திருப்பதாகவும் அனுமானிக்க முடிகிறது.

இத்தகைய ஓர் இடியப்பச் சிக்கலான வடிவத்தில் அமெரிக்க-ஈரான் தகராறு - பிரச்சினை - உருவெடுத்துள்ள சந்தர்ப்பத்தில் -

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் - அமெரிக்க - இலங்கை உறவில் நலிவு ஏற்படும் நிலையும்,

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசலையும், வேண்டாத கசப்புணர்வுகளையும் உண்டாக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

எனினும், ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதனால், நாட்டுக்கு எந்த நட்டமும் வந்துவிடாது; நல்லதையே செய்கிறோம் என்ற உணர்வோடு, எமது நாடும் அரசும் செயற்பட்டால், பகைத்துக்கொள்ளுதல் என்ற மன வெதும்பல்களை ஓரங்கட்ட இயலும். இன்றைய தேவையும் அதுவே.

## கல்வி நிர்வாக சேவை முதற் கட்டத் தேர்வில் 173 பேர் தெரிவு - 13 தமிழர்கள்; 2 முஸ்லிம்கள்

அச்சுவேலி,மார்ச் 24

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கான திறந்த போட்டி பரீட்சையில் முதல் கட்டத் தேர்வில் உயர் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 173 பேரில் 13 தமிழர்களும் 2 முஸ்லிம்களும் சித்தியடைந்துள்ளனர்.

போட்டிப் பரீட்சையின் உயர் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம்களின் விவரம் வருமாறு:

ஜி.ஆதவன், ஜே.எஸ்.சிந்தாமணி, வி.தர்சினி, ரி.கோமாதேவி, கே.அபிராமி, எம்.சுதாகர், எவ்.ஏ.எவ்.பர்ஸானா, பீ.சுரேஸ்குமார், கே.விக்னரூபன், எம்.பிரதீப், எஸ்.கிருஷ்ணவாணி, பி.கப்தீபன், ரி.பிரியந்தி, எஸ்.தனிக்குமார், ஏ.முஹம்மட் ரௌசாட்.

முதலாம் கட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஏப்ரல் 29 ஆம் திகதி மேலும் ஒரு பரீட்சை நடைபெறவுள்ளது. அதில் உயர்புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதில் இருந்து தேவையானோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்படவுள்ளவர்களின் 40 வீதத்தினரும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சேவையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பதில் கடமையில் உள்ளவர்களை உள்ளடக்கி நடைபெற்ற போட்டிப்பரீட்சையில் இருந்தும் 35 வீதத்தினரும் இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களிடையே நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் இருந்தும் மிகுதி 25 வீதத்தினரும் திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள் ளது.

இந்த வருடம் 400 பேர் மட்டும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர். மூன்று நிலையிலும் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு நேர்முகப் பரீட்சையும் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-11)

## 13 வீதிகள் நெல்சிப் நிதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நெல்சிப் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பதின் மூன்று வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

குருநகர் மத்திய கிழக்கு வீதி, மத்தியூஸ் வீதி, கோயில் வீதி குன்றும் குழியும் நிரவுதல், கச்சேரி நல்லூர் வீதி குன்றும் குழியும் நிரவுதல், மூத்தவிநாயகர் வீதி குன்றும் குழியும் நிரவுதல், பாஷையூர் 2 ஆம் குறுக்குத் தெரு, சிராம்பியடி வீதி குன்றும் குழியும் நிரவுதல், மணல் தறை வீதி, ஓடக்கரை மேற்கு ஒழுங்கை, பாலுடையார் வீதி, குரு நகர் 3ஆம் குறுக்குத் தெரு, ஆசிர்வாதப்பர் லேன் போன்றன விரைவில் திருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தாலிக்கொடி திருட்டு வழக்கு; மன்னார் பெண்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம்,மார்ச் 24

வீடு புகுந்து தாலிக்கொடியைத் திருடிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மன்னாரைச் சேர்ந்த இரண்டு பெண்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன் போதே ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். நகரை அண்டியுள்ள உறவினர் வீடு ஒன்றிலேயே தாலிக் கொடியைத் திருடிச் சென்றிருந்தனர்.

அது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு ஒரு வாரமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் மீட்கப்பட்ட தாலிக்கொடியும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை உருமாற்றம் செய்யவோ, விற்கவோ முடியாது என்று உத்தரவிட்டு ஒப்படைக்கப்பட்டது. (ம-4)

## திருப்பாடுகளின் காட்சி

குருநகர், மார்ச் 24

இளவாலை திருமறைக் கலா மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட யேசுக்கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றை சித்திரிக்கும் திருப்பாடுகளின் காட்சி இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இரவு 7.15 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

(ம-51)

## தேசிய கலை இலக்கிய விழா; இரு பிரிவுகளில் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

தேசிய கலை இலக்கிய விழாவை முன்னிட்டு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய இலக்கிய விழா தொடர்பான போட்டிகள் பாடசாலை மாணவர்கள், திறந்த போட்டியாளர்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் நடத்தப்படவுள்ளன.

கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்தப் போட்டிகளுக்கான ஆக்கங்களைக் கோரியுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்கள் 16 வயதுக்குக்கீழ் கனிஷ்ட பிரிவுக்கான கட்டுரை, கவிதை, பாடல், கையெழுத்துப் போட்டிகளும் 16 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டோர் சிரேஷ்ட பிரிவுக்கான கட்டுரை, கவிதை, பாடல் கையெழுத்துப் போட்டிகளும் 19 வயதுக்கு மேல் திறந்த பிரிவுக்கான பாடலாக்கம், நாட்டார்கலை, கற்றல் இலக்கிய விவரணம், சிறுகதை, கவிதை, சிறுவர் கதை, ஆக்கப் போட்டிகளுக்குமான ஆக்கங்களை அனுப்பலாம்.

ஆக்கங்களை பிரதேச கலாசார அபிவிருத்தி உதவியாளரிடம் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

(ம-7)

## கடந்த 3 மாத காலத்தில் 50 பேர் காச நோயால் பாதிப்பு

### மருத்துவர் ஜமுனானந்தா தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 3 மாத காலத்தில் மட்டும் 50 பேர் வரையில் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய நிபுணர் மருத்துவர் என். ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் காசநோய் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

காசநோயால் அதிகளவு சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுவர்களில் நோயின் அறிகுறிகள் கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இருந்து அநேகமான நோயாளிகள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர். இவர்களுக்குரிய சிகிச்சை நிலையங்களை அந்தந்த மாவட்டங்களில் ஏற்படுத்துவதோடு மருத்துவர்களையும் நியமிக்கவேண்டும்.

உலகெங்கிலும் மார்ச் 24 ஆம் திகதி உலக காசநோய் தினம் அனுட்டிக்கப்படுகிறது. 2012 இற்குரிய காசநோய் தொனிப்பொருள் எம் வாழ் நாளில் காசநோயை இல்லாது ஒழிப்போம் என்பதாகும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வும், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களின் நாடக நிகழ்வும் விழிப்புணர்வுப் பாடல்களும் இடம்பெற்றன.

(ம-13)

# மன்னார் மாணவர்களின் செல்பேசிகளில் ‘ஆபாசம்’

## கண்டும் காணாமல் பெற்றோர், ஆசிரியர்

பாடசாலை மாணவ, மாணவிகள் கையடக்கத் செல்பேசிகளைப் பாடசாலைக்கும் கொண்டு செல்லுகின்றனர். அத்துடன் மறைமுகமாகப் பாவனைக்கும் அவற்றை உட்படுத்துகின்றனர்.

மன்னார்,மார்ச் 24

மன்னாரில் தவறான கையடக்கத் செல்பேசிப் பாவனையால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இங்குள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் கையடக்கத் செல்பேசிகளைப் பாடசாலைக்கும் கொண்டு செல்லுகின்றனர். அத்துடன் மறைமுகமாகப் பாவனைக்கும் அவற்றை உட்படுத்துகின்றனர்.

இத்தகைய தொலைபேசிகளில் ஆபாசப் படங்கள், சினிமாப்படங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்து இவர்கள் பார்க்கின்றனர்.

தரம் 9 இல் கல்வி கற்கின்ற மாணவர்கள் தொடக்கம் உயர்தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் வரை தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் இவர்களுடைய கல்விச் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

எனவே இதில் பாடசாலை நிர்வாகம், தனியார் கல்வி நிலையங்கள், பெற்றோர் ஆகியோர் அக்கறையுடன் செயற்பட்டால் மாணவர்கள் மத்தியில் பரவியுள்ள இந்தத் தவறான பழக்கத்தைத் தடுக்க முடியுமென்றும் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (க-12)



கிளிநொச்சி எடிசன் கல்லூரியின் கல்வியாளர்கள் கௌரவிப்பின்போது முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா மங்கள விளக்கேற்றுகின்றார். அருகில் முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், முன்னாள் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா மற்றும் அதிபர்கள் நிற்கிறார்கள். (426)

## 1,215 ஏக்கரில் நெற்செய்கை

துணுக்காய்,மார்ச் 24

வவுனிக்குளத்தின் வலது கரைக்குக் கீழுள்ள ஆயிரத்து 215 ஏக்கரில் இந்த முறை சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வாறு பாண்டியன் குளம் விவசாயப் போதனாசிரியர் செல்வி இ.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.

பாண்டியன்குளம் இடது கரைக்கான நெற்செய்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனிக் குளத்தின் பெருங்குளப் புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாகச் சிவபுரம், செல்வபுரம், பாண்டியன்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை இடம்பெறாதெனவும் அவர் மேலும் கூறினார். (க-415)

## ஜனாதிபதியின் ‘கட்அவுட்’ மீது மன்னார் நகரில் கல்வீச்சு

மன்னார்,மார்ச் 24

மன்னார் பஸார் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் ‘கட்அவுட்’ மீது இனம் தெரியாத நபர்கள் கல் வீசித் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படம் அடங்கிய ‘‘கட்அவுட்’’ கண்ணாடியால் பாதுகாப்புச் செய்யப்பட்ட நிலையில் மன்னார் பஸார் பகுதியில் தொங்கவிடப்பட்டிருந்தது.

ஜெனிவாவில் அமெரிக்காவால் பிரேரிக்கப்பட்ட பிரேரணை சூடுபிடித்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இனம் தெரியாத நபர்கள் ஜனாதிபதியின் ‘‘கட்அவுட்’’ மீது கல்வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதன்போது குறித்த கட்டவுட்டில் உள்ள கண்ணாடி உடைந்துள்ளது. இந்தப் பகுதியில் இராணுவம், பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள நேரத்தில் குறித்த சம்பவம் துணிகரமாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## பல நாள் மரத்திருடன் வகையாக மாட்டினான்

வவுனியா,மார்ச் 24

நெடுங்கேணிப் பகுதியில் பல நாள்களாகக் களவாக மரங்களைக் கடத்தி வந்த ஆசாமி நேற்று முன்தினம் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

தென்பகுதியைச் சேர்ந்த றொசான் என்பவர் பல நாள்களாகவே நெடுங்கேணியிலிருந்து களவாக மரங்களைக் கடத்தி வந்துள்ளார்.

முன்னொரு தடவை மரங்களை ஏற்றிச் சென்றபோது நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இந்த நபரைத் துரத்திச் சென்ற போது எல்லை தாண்டியதாகக் கூறி இடமாற்றம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நெடுங்கேணிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் கடத்திச் செல்லப்பட்ட மரங்களுடன் வாகனத்தைக் கைப்பற்றியுள்ளனர். தற்போது இந்த நபர் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த காலங்களில் பதவியா ஊடாக மரங்களைக் கடத்திச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-435)

## பெண்களுக்குப் பயனில்லாத சைக்கிள்கள்

முல்லைத்தீவு,மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் ஆண்களுக்குரிய சைக்கிள்கள் வழங்கப்பட்டதால் இவற்றைப் பெண்கள் உபயோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

அண்மையில் ஐ.சி.சி.யின் நிதியுதவியுடன் இராணுவத்தினர் அனுசரணை வழங்கி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாணவ, மாணவிகள், கணவனை இழந்தவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. ஆனால் இவை ஆண்களுக்குரியன என்பதால் பெண்கள் உபயோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. (க-500)

## வாசிப்பு மேம்பாட்டு கருத்தரங்கு

துணுக்காய்,மார்ச் 24

முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கான வாசிப்பு மேம்பாட்டுக் கருத்தரங்கொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நேற்றுக் காலை 8.45 மணியளவில்பாடசாலைஅதிபர்த.யோகானந்தராசா தலைமையில் இடம் பெற்றது.

இதில் துணுக்காய் பிரதேச சபையின் நூலகத்தில் பிரதம நூலகராகப் பணிபுரியும் வே.லவேந்திரா வளவாளராகக் கலந்து கொண்டார்.

இங்கு சிறப்புரையாற்றிய அவர், நவீன அறிவியல் வளர்ச்சியில் துணுக்காய்ப் பிரதேசம் பின் தங்கிக் காணப்படுகின்றது. வாசிப்பை மேம்படுத்துவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ள முடியும். ஆசிரியர்களும், மாணவர்களும் தத்தமது பிரதேசங்களிலுள்ள நூலகங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

மேலும் பாடசாலைகளிலுள்ள நூலகங்களில் சர்வதேச நூலக ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நூல்களை ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (க-415)

## போதையில் ஓட்டம் வேண்டாம் விழிப்பூட்டுவதற்கு விளம்பரங்கள்



மன்னார்,மார்ச் 24

டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனியால் வாகன ஓட்டுநர்களை விழிப்பூட்டும் வகையில் மன்னாரில் விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் தீவுப் பகுதியில் உள்ள சாலைகளில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் விழிப்புடன் செயற்படும் வகையில் இந்த விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்தும் முகமாக மன்னார் மாவட்டப் பொலிஸ் அதிகாரி லக்சிறி விஜயசேனவிடம் இவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மதுபானம் அருந்திவிட்டு வாகனம் செலுத்தவேண்டாம், முறையான சாரதிகளை அன்புடன் வரவேற்கின்றோம் உள்ளிட்ட வசனங்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எழுதப்பட்டுள்ளன.

இந்த விளம்பரப் பலகைகள் மன்னார் நகர் மற்றும் மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் காட்சிப் படுத்தப்பட்வுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸார தலுவத்த தெரிவித்தார். (க-12)

## கிளிநொச்சியில் திருடப்பட்ட வாகனம் 6 வருடங்களின் பின் தெற்கில் மீட்பு

கிளிநொச்சி,மார்ச் 24

கிளிநொச்சிப் பகுதியில் ஆறு வருடங்களுக்கு முன்பு திருடப்பட்ட ‘பிக்கப்’ வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சியில் வைத்துக் கடந்த 2006 ஆம் ஆண்டு காணாமல் போன சுமார் 45 லட்சம் ரூபா பெறுமதியான பிக்கப் வாகனத்துடன் அதனை வைத்திருந்த நபர் கிளிநொச்சி உப பொலிஸ் பரிசோதகர் சரத் தெனியாய தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த ஒருவருடைய சுமார் 45 லட்சம் ரூபா பெறுமதியான பிக்கப் வாகனம் களவாடிச் சென்றமை தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சரத் தெனியாய தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டதன் பிரகாரம் இந்த வாகனம் அம்பாந்தோட்டைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. அதனை வைத்திருந்த நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவிசாவளை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

குறித்த சந்தேக நபரையும் வாகனத்தையும் கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபரை 30 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையில் செல்ல மன்று அனுமதித்துள்ளது.

இந்த வாகனம் கடத்தப்பட்டு ஆறு வருடங்களின் பின்னர் பொலிஸ் அதிகாரியின் அயராத முயற்சியினால் மீட்கப்பட்டுள்ளமை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (க-6)

## மிளகாய்ப் பொடி தூவி பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

முள்ளியவளையில் வயோதிபப் பெண்ணின் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளது.

முள்ளியவளையிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிலேயே கடந்த புதன் கிழமை பகல் இந்தத் திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆசிரியரும் அவரது மனைவியும் காலையில் பணிக்குச் சென்று விட்டனர். வீட்டிலே ஆசிரியரின் வயது முதிர்ந்த தாயார் மட்டுமே இருந்துள்ளார். இதனை நன்கு அவதானித்த திருடர்கள் நண்பகல் வேளையில் வீட்டினுள் புகுந்து அங்கே தனியாக இருந்த வயோதிபப் பெண்ணின் கண்களில் மிளகாயப் பொடியைத் தூவி விட்டு அவர் அணிந்திருந்த மூன்று பவுண் கொண்ட தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். ஆரம்ப கட்ட விசாரணையின் போது மூன்று பேர் இந்தத் திருட்டில் ஈடுபட்டனர் என்று தெரியவருகின்றது.

சங்கிலியைப் பறிகொடுத்தவரின் அலறலைக் கேட்டு அயலவர்கள் ஓடி வந்த போதும் திருடர்கள் வேலிகளைப் பிய்த்துக் கொண்டு ஓடித்தப்பி விட்டனர்.

இதேவேளை திருடர்களால் மிளகாய்ப் பொடி பொதி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது ஒரு கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் என்பது தெரியவந்துள்ளது. இது யாழ்ப்பாணத்தில் அண்மையில் இறந்த ஒருவருக்கு அஞ்சலி செய்வதற்கு வெளியிடப் பட்டமையும் தெரியவந்துள்ளது.இதனைக் கைப்பற்றிய பொலிஸார் திருடர்களைக் கைது செய்யும் பொருட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-433)

# யாழ். திருநகரில் வீடு புகுந்து அடாவடி உடைமைகளுக்கு பெரியளவில் சேதம்

## காயமுற்ற மூவர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அத்துமீறி வீடு புகுந்த 10 பேர் கொண்ட கும்பல் ஒன்று வீட்டின் கதவுகள், ஜன்னல் கண்ணாடிகள், என்பவற்றை அடித்து நொருக்கிவிட்டு வீட்டாரையும் தாக்கியுள்ளது. பின்னர் அங்கிருந்த இரண்டு சைக்கிள்களையும் தூக்கி கிணற்றினுள் போட்டு விட்டுச் சென்றது அந்தக் கும்பல்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன்போது மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மூன்று பவுண் நகைகள் என்பனவும் காணாமல் போயுள்ளன என்று வீட்டு உரிமையாளர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம், திருநகர், இராஜசிங்கம் வீதியில் புதன்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமுற்ற அதே இடத்தைச் சேர்ந்த மடித்தீன் சகாயராஜா (வயது-50), சற்குணம் லூசியா (வயது-48), நோபேட் கபிஸ்கா (வயது-10) ஆகிய மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

கடந்த 26ஆம் திகதி இரவு மடித்தீன் நோபேட் தமது வீட்டுக்குச் சென்ற சமயம் (வீட்டு) ஒழுங்கையிலுள்ள சிலர் அவரைக் கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கியுள்ளனர். அதனால் அவர் 3 நாள்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

வைத்தியசாலைப் பொலிஸார் அதுபற்றிய அறிக்கை தயாரித்து இரண்டு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறியிருந்தனர். கடந்த 19 ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற போது காயப்பட்டவரை மறுநாள் யாழ். நீதிமன்றுக்கு வருமாறு கூறிவிட்டு அவரைத் தாக்கிய சந்தேக நபர்கள் இருவரும் தடுப்பில் வைக்கப்பட்டனர். மறுநாள் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

அன்றைய தினம் இரவு பாதிக்கப்பட்டவரின் (நோபேட்) வீட்டுக்கு அருகில் வசிக்கும் சிலர் வந்து முறைப்பாட்டாளர்களைத் திட்டித் தீர்த்தனர். அவ்வேளை முறைப்பாட்டாளர்கள் அதனைக் கமராவில் பதிவு செய்து வைத்திருந்துள்ளனர்.

மறுநாள் (21ஆம் திகதி) காலை 6.30 மணியளவில் நோபேட் என்பவரது வீட்டினுள் சுமார் 10 பேர் கொண்ட கும்பல் அத்துமீறிப் பிரவேசித்தது. அவர்கள் வீட்டின் 3 கதவுகளை உடைத்துப் பிரித்து வேறாக்கினர்.

ஜன்னல் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து நொருக்கி வீட்டிலிருந்த கதிரை, மேசைகள் மற்றும் படங்களின் கண்ணாடி பிறேம்கள் அடித்துச் சேதமாக்கப்பட்டன. மின்மானிப் பெட்டியும் அடித்து உடைக்கப்பட்டது.

அதேசமயம் முதல்நாள் இரவு சம்பவத்தைப் பதிவு செய்த காமரா பயன்படுத்த முடியாதளவுக்குப் பிரிக்கப்பட்டுள்ளது. மெமரி காட் காணாமற் போயுள்ளது. அவர்களின் இரண்டு சைக்கிள்கள் கிணற்றினுள் தூக்கி வீசப்பட்டுள்ளன. வீட்டின் முன் 'கேற்' கழற்றி வேறிடத்தில் வீசப்பட்டுள்ளது. முன் வேலியும் கீழே சாய்க்கப்பட்டுள்ளது. வீடு அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது.

இந்தத் தாக்குதல் குறித்து யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் நிலைமையைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் நேற்று முன் தினம் மாலை வரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கற்பித்தல் சாதனக் கண்காட்சியை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம-9)

## சைக்கிளைத் தொலைத்த அக்கா

யாழ்ப்பாணம், மார்ச் 24

தம்பியின் விளையாட்டைப் பார்ப்பதற்காகப் பாடசாலைக்குச் சைக்கிளில் சென்ற அக்காவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

வகுப்பறையில் விட்டுப் பூட்டிவிட்ட சைக்கிள் மாயமாய் மறைந்ததே இதற்குக் காரணம்.

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பங்கு பற்றிய தம்பியின் விளையாட்டைப் பார்த்து ரசிப்ப தற்காக சைக்கிளில் சென்ற அக்கா சைக்கிளை விட்டுப் பூட்டிய பின் விளையாட்டைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டார்.

விளையாட்டுப்போட்டி முடிந்தவுடன் சைக்கிளை எடுப்பதற்காக வகுப்பறைக்குச் சென்றபோது அங்கு சைக்கிள் இல்லை. தம்பியுடன்வீட்டுக்குநடந்தே சென்றார் அவர். (ம-115)

## குடிதண்ணீர்க் கிணறு படையினரால் புனரமைப்பு

வலி.மேற்கு, மார்ச் 24

சாவற்கட்டு கிராமத்தில் பல வருடங்களாகப் பாவிக்க முடியாதவாறு குப்பைகளை நிரவி மூடப்பட்டிருந்த குடி தண்ணீர்க் கிணறு, படையினரால் துப்புரவு செய்யப்பட் டுள்ளது.

தற்பொழுது இந்தக் கிணறு பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது.

சாவற்கட்டு கிராமத்தில் குடும்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து மக்கள் குடியிருப்புகள் மிகவும் நெருக்கமாகி வருகின்றன.

இடவசதி இல்லாத காரணத்தால் பல வீடுகளில் கிணற்று வசதிகள் இல்லை.

இதனால் பொதுக் கிணறுகளையும் அயல் கிணறுகளையும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

சாவல்கட்டு முருகமூர்த்தி ஆலயத்துக்கு அருகில் காலம் காலமாக மக்களின் பாவனையில் இருந்து வந்த குடிதண்ணீர்க் கிணறு நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக பாவனையின்றி நாளுக்கு நாள் குப்பைகளால் மூடப்பட்டுள்ளது.

இதனால் தற்பொழுது நிரந்தரமாக வசித்து வரும் கிணற்றைச் சுற்றி வாழும் குடும்பங்கள் தண்ணீர் இல்லாமல் பெரும் சிரமங்களுக்கு ஆளாகினர்.

இந்தக் குடும்பங்களின் நிலையை உணர்ந்த இந்தக் கிராமத்துக்கு அண்மையில் நியமனம் பெற்று வந்த கிராம உத்தியோகத்தர் வை.சந்திரராசா கூழாவடியிலுள்ள இராணுவ முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுஇந்தக் கிணற்றைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து கிணற்றைத் துப்புரவு செய்வதற்கு முன்வந்த பாதுகாப்புப் படையினர் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி அதனைத் துப்புரவு செய்துள்ளனர். (ம-115)

## எரிபொருள் விநியோகம் இனி 10 நிலையங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானிய முத்திரைக்கு எரிபொருள் விநியோகம் செய்வதற்கான நிலையங்கள் பத்தாக அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களுக்கு மானிய முத்திரைக்கு தற்போது நான்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாகவே எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நான்கு நிலையங்கள் ஊடாக எரிபொருள் விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியால் தொடரும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கு மேலும் ஆறு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆறு மேலதிக எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக எரிபொருள்களை கடற்றொழிலாளர்களுக்கு சிரமம் இன்றி விநியோகிப்பதற்கு கடற்தொழில் நீரியல் வள அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதியை அடுத்து குடாநாட்டில் மொத்தம் பத்து எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக மீனவர்களுக்கான மானிய முத்திரைக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

## கடும் வெப்பக் காலநிலையால் அழியும் நிலையில் சிறுதானியம்

அளவெட்டி, மல்லாகம், கந்தரோடை விவசாயிகள் இம்முறை மேற்கொண்ட சிறு தானியப் பயிர்கள் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக அழிந்து போகும்நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் உள்ள தண்ணீர் நாளுக்கு நாள் வற்றிக் கொண்டு போவதால் பயிர்களுக்கு இறைப்பதற்கு போதிய தண்ணீர் இல்லை. இதன் காரணமாக இந்த நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மழை பெய்தால் மட்டுமே சிறு தானியப் பயிர்கள் நல்ல பயனைத் தரும் என்றும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-36)



யாழ். மாநகரசபை வளாகத்தில் புதன்கிழமை சேதனப் பசளைகள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. யாழ். சுற்றுச் சூழல் மத்திய சுற்றாடல் திணைக்கள பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் விற்பனை நிலையத்தைத் திறந்து வைக்கிறார். (ம-7)

## கணேசபுர கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட இரண்டாவது சந்தேகநபருக்கும் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 24

அளவெட்டி கணேசபுரத்தில் 2010 ஆம் ஆண்டு துப்பாக்கியைக் காட்டி 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடினார்கள் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நான்கு பேரில் இரண்டாவது சந்தேகநபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று முன் தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மூன்றாம் நான்காம் சந்தேக நபர்கள் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி வீடு புகுந்து துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியமை, கொள்ளையில் ஈடுபட்டமை, கொள்ளைக்காக வீட்டுக் கதவு உடைக்கப்பட்டமை, கொள்ளையடித்த நகைகளைத் தம்வசம் வைத்திருந்தமை, மற்றும் அவற்றை பிறருக்கு விற்றமை ஆகிய ஐந்து குற்றச்சாட்டுக்கள் நால்வர் மீதும் சுமத்தப்பட்டிருந்தன.

சம்பவத்தையடுத்து தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரும் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின்படி அந்த வழக்குப் பின்னர் யாழ். மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது விசாரணையின் பின்னர் இரண்டாவது சந்தேக நபரான றமணன் என்று அழைக்கப்படும் பாலசுப்பிரமணியம் சிவரூபன் என்பவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் இவர் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் மாதத்தில் 15 ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். அரச தரப்பில் வி. திருக்குமரனும் எதிரி தரப்பில் சர்மினி விக்னேஸ்வரனும் ஆஜராகியிருந்தனர். (ம-4)

## வலி.கிழக்கில் கட்டடங்கள் அமைக்க முன் அனுமதி

வலி.கிழக்குப் பகுதி யில் கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு மதில்கள் அமைப் பது குறித்து பிரதேச சபையிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்று பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தப் பகுதியில் அனேகமானோர் பிரதேச சபையின் முன் அனுமதி பெறாமல் கட்டடங்கள் மற்றும் சுற்று மதில்களை அமைத்து வருகின்றனர்.

இவ்வாறு முன் அனுமதி பெறாமல் கட்டடங்கள் அமைத்தால் அதற்கு எதிராக பிரதேச சபை கடும் நடவடிக்கையை மேற்கொள்ளும்.

சிலர் பிரதேச சபையின் முன் அனுமதி பெறாமல் வீதியோர சுற்று மதில்களையும் அமைத்துள்ளனர். இவ்வாறு மதில்கள் அமைப்போர் மீதும் மற்றும் முன் அனுமதி இன்றி கட்டடங்களை நிர்மாணிக்கும் குடியிருப்பாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (வ-17)

## மறவன்புலோ பகுதியில் வீதிப் புனரமைப்பு மந்தகதியில்

தென்மராட்சி, மார்ச் 24

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மறவன்புலோ பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்தநிலையில் அவற்றுக்கான பணிகள் இன்னும் மந்தகதியில் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் ஒரு சில வீதிகளுக்கு கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் வேலைகள் மேற்கொள்ளாமல் நீண்ட காலம் இழுத்தடிப்பதாக இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போர்ச்சூழலின் போது சேதமடைந்துள்ள வீதிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் என்று நம்பியிருந்த மக்கள் வீதிப் புனரமைப்புக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (வ-9)

## தென்மராட்சியில் 2ஆம் கட்டக் கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 24

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சுயதொழில் உதவியின் முதலாம் கட்டக் கொடுப்பனவு பெற்ற 27 பேருக்கான இரண்டாம் கட்டக்கொடுப்பனவுத்தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து கொடுப்பனவுக் காசோலையைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறு வியாபாரம், தையல் போன்றவற்றுக்காக இக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் விவரம் வருமாறு:-

க.சுபத்திரா (கைதடி தெற்கு), சி.கிருஷ்ணகரன் (கைதடி மத்தி), ச.பாலேஸ்வரி (கைதடி தெற்கு), ஜெ.கலைமகள் (கைதடி நாவற்குழி), பொ.பரமேஸ்வரி (மறவன்புலோ), இ.சிவகுமார் (சங்கத்தானை), க.ரவிசங்கர் (கோவிற் குடியிருப்பு), பி.நவநாயகி (கோவிற்குடியிருப்பு), நி.சுபாசினி (கோவிற் குடியிருப்பு), ச.சௌந்தினி (கோவிற்குடியிருப்பு), செ.சந்திரசேனன் (கொடிகாமம்), அ.ஜீவராணி (கல்வயல்), நா.சுந்தரலிங்கம் (நுணாவில் கிழக்கு), பா.லில்லி (நுணாவில் மத்தி), ஜீ.ஞானசோதி (நுணாவில் மேற்கு), இ.தங்கம்மா (நுணாவில் மேற்கு), த.சுரேஷ்குமார் (நுணாவில் மேற்கு), ம.மோகன் (மட்டுவில் தெற்கு), பி.உதயதர்சினி (மீசாலை வடக்கு), சி.கிரிசா (கச்சாய் தெற்கு), சி.நாகமுத்து (துவசிகுளம்), க.சரோஜா தேவி (கொடிகாமம்), க.ஞானகுரு (கெற்பேலி), ஜ.நி.அன்ரனீற்றா (மிருசுவில் தெற்கு), நா.நாக ரஞ்சன் (மந்துவில் கிழக்கு), ந.சசிகலா (மந்துவில் கிழக்கு), து.மதிவதனி (மந்துவில் கிழக்கு). (வ-9)

## பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

கொழும்புத்துறை, மார்ச் 24

கோப்பாய் பகுதியில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கிளுவானை வீதியில் 'ரியூசன்' கொடுத்துவிட்டு தனியாக வந்துகொண்டிருந்த பெண்ணின் 2 பவுண் சங்கிலி கடந்த திங்கட்கிழமை அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

## வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்றோர்

வலி. தெற்கு மார்ச் 24

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலைகளுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி என்.இ. செல்வகுமாரி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான வீட்டுத் தோட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் ஏழாலை மகா வித்தியாலய மாணவர்களான ரி.விதுர்சன், எஸ்.கிசோகரி, எஸ்.அரவிந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலை மட்டத்திலான போட்டியில் முதலாம் இடத்தை சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் மூன்றாம் இடத்தை ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (வ-86)

## அஞ்சல் அலுவலர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 24

அஞ்சல் விநியோகத்துக்காக வீதியைக் கடக்க முயன்ற அஞ்சல் அலுவலரை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலை ஐயா கடை அருகில் இடம்பெற்றது.

மீசாலை உப அஞ்சல் அலுவலகத்தில் பணிபுரியும் சரசாலை வடக்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நாகபாஸ்கரன் (வயது 56) என்ற அஞ்சல் அலுவலரே விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பகுதியிலுள்ளோர் கவனத்துக்கு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீளக் குடியமர்வு செய்யப்படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தமது விவரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வு செய்ய அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக வதியும் குடும்பங்களையே பதிவு செய்யுமாறு பச்சிலைப் பள்ளி உதவி அரச அதிபர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (வ-14)

## திராட்சை செய்கையாளர்களின் சங்கம் அமைக்கத்திட்டம்

வலி. வடக்கு, மார்ச் 24

வலி. தெற்கு உடுவில் பிரதேச திராட்சை செய்கையாளர்களின் நன்மை கருதி பிரதேச திராட்சை செய்கையாளர் சங்கம் அமைக்க நடவடிக்கைகள் விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த பல வருடங்களாக உடுவில் பிரதேச செயலர் பிரிவில் திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் திராட்சை செய்கையாளர்கள் சங்கம் அமைக்கப்படாமையால் திராட்சை செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட விதை இல்லாத திராட்சை கொடிகளை வழங்கும் செயல்பாடுகளைத் தொடர்ந்து விவசாயிகளின் நன்மை கருதி விவசாயப் போதனாசிரியரால் உடுவில் பிரதேச திராட்சை செய்கையாளர்களை ஒன்றிணைத்து சங்கம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-86)

## இலங்கை நிர்வாக சேவைக்கு பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்றவர்கள் (பட்டதாரிகள்) விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி 2011.12.31 ஆம் திகதியில் 28 வயதைப் பூர்த்தி செய்யாதவராக இருக்கவேண்டும்.

இது குறித்த விவரங்கள் 2012 மார்ச் 23 ஆம் திகதிய வர்த்தமானியில் உள்ளன.

இதேவேளை இலங்கை கணக்காளர் சேவை தரம் III இற்கு நடத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

2012.03.23 ஆம் திகதியன்று 22 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட வர்த்தகம்/ முகாமைத்துவ/ கணக்கியல்/ பொருளியல் பட்டதாரி அல்லது-

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி/ இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் கணக்கியல் அல்லது உயர் டிப்ளோமாதாரர் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (ஒ)

## அனுமதிபெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச்24

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வண்டில்கள் மூலம் உணவுகளை விற்பனை செய்பவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த வருடத்துக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரத்தை பெறத் தவறியவர்கள் மீது ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என்றும் கூறப் பட்டுள்ளது. (ம-14)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பாடசாலை அபி விருத்திச் சங்கக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத் தால் எதிர்வரும் 31 ஆம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார். (ம-14)

## அரசியல் கட்சிகள் மன்னிப்பு கோரவேண்டும்

கொழும்பு, மார்ச் 24

பிரதான அரசியல் கட்சிகள் அனைத்துமே தமிழ் மக்களுக்கு சம உரிமையுடன் வாழக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் சகல அரசியல் கட்சிகளும், பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் அறுபதாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன வன்முறைகளுக்கு நாட்டை ஆட்சி செய்த சகல அரசியல் கட்சிகளுமே பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் உள்ளிட்ட நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் - என்றார். (ச)

**இன வன்முறைகளுக்கு நாட்டை ஆட்சி செய்த சகல அரசியல் கட்சிகளுமே பொறுப்புக் கூற வேண்டும்.**

## கீரை விற்பனை இடத்தை மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்24

திருநெல்வேலி பொதுச் சந்தையின் இரண்டாம் மாடியிலுள்ள கீரை விற்பனை இடத்தைக் கீழ்தளத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கீரை உற்பத்தி செய்யும் விவசாயிகள் தரப்பில் வேண்டுகோள் விடப்படுகிறது.

இரண்டாவது மாடியில் சந்தையின் விற்பனைச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அங்கேதான் கீரை விற்பனையும் இடம்பெறுகிறது. கீரையை சந்தைப் படுத்துவதற்கு என சந்தையின் இரண்டாவது மாடிக்கு எடுத்துச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாகக் கீரை உற்பத்தி செய்யும் விவசாயிகள் கூறுகின்றனர்.

கீரையை எடுத்துச் செல்லும்போது கீரைக்கு தெளிக்கப்பட்ட தண்ணீர் மாடிப் படிகளில் சிந்தப்படுகிறது. இதனால் விவசாயிகள் தமது விளை பொருள்களை சந்தைப் படுத்து வதற்கு மாடிப்படிகளில் ஏறும்போது கால் சறுக்கி விழும் நிலைமை அவர்களுக்கும் ஏற்படுகிறது.

அதுமட்டுமன்றி, கீரையுடன் பெட்டியை இரண்டாம் மாடிக்கு எடுத்துச் செல்வதற்கு பெட்டிக்கு ஐம்பது ரூபா அறவிடப்படுகின்றது. இவ்வாறு கீரையை மேல் தளத்துக்கு எடுத்துச் செல்ல பணம் அறவிடப்படுவது கீரை விலைக்கு மேல் செல்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

சாவகச்சேரி, மார்ச் 24

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதியில் உள்ள வியாபார, வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு இந்த வருடத்துக்குரிய முத்திரையிடும் பணிகள் நான்கு நாள்கள் நடைபெறவுள்ளன.

நகரசபைக் கட்டடத்தில் எதிர்வரும் 26, 27, 29, 30 ஆகிய திகதிகளில் முத்திரையிடும் பணிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து வியாபார, வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டு எதிர் காலத்தில் இடம்பெறும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசாகயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம-9)

# சீனா போர் ஒத்திகை

## திபெத் மலைப்பகுதியில்



இந்த ஒத்திகையில் சீனாவின் ஜெ–10 ரக குண்டு வீச்சு விமானங்கள் ஈடு படுத்தப்பட்டன. இந்த ரக போர் விமானங்கள் உயர மான மலைப்பகுதிகளுக்கும் சென்று குண்டு வீசும் திறன் படைத்தவை.

பீஜிங், மார்ச் 24

இந்திய எல்லைப் பகுதியில் உள்ள திபெத் மலைப் பிரதேசத்தில் சீன விமானப் படையினர் குண்டுகளை வீசி போர் ஒத்திகை நடத்தி வருகிறார்கள். இந்த ஒத்திகையில் சீனாவின் ஜெ-10 ரக குண்டுவீச்சு விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

திபெத்தில் 3,500 அடி உயரமுள்ள பீடபூமியில் ஒத்திகை நடைபெறுகிறது. இது போன்ற ஒத்திகை நடைபெறுவது இதுவே முதல் தடவை என்று சீன செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இரவு பகலாக நடைபெற்ற இந்த ஒத்திகையின் போது கதிர்வீச்சுத் துணையுடன் கூடிய குண்டுகளை குறிப்பிட்ட இலக்கில் வீசி வெற்றிகரமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த ரக போர் விமானங்கள் உயரமான மலைப் பகுதிகளுக்கும் சென்று குண்டு வீசும் திறன் படைத்தவை என்று கூறப்படுகிறது.

## கனடாவில் பனிச்சரிவு; இருவர் மரணம்

கனடாவில் நெல்சனில் ஏற்பட்ட பனிச்சரிவில் இருவர் உயிரிழந்தனர். இவர்கள் உச்சிப்பனிச் சறுக்கு விளையாடிய ஐந்து பேர் கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள்.

கடந்த புதன்கிழமை ஏற்பட்ட பனிச்சரிவினால் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இன்னொருவர் பெண், இவர் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி மரணமானார். பிரிட்டிஷ் கொலம்பியாவின் பலி வெட்டுக்கு அருகே உள்ள போனிங்டன் மலைத்தொடரில் உச்சிப்பனிச்சறுக்குவிளையாட ஐந்துபேர் கொண்ட குழு வந்தது. பனிச்சரிவில் ஆள்கள் புதைந்ததும் வழிகாட்டியான குழுத் தலைவர் பனியிலிருந்து வெளிவந்து மற்றவர்களையும் வெளியே கொண்டுவர உதவினார். பனியிலிருந்து வெளியே கொண்டு வந்த பின் இரு விளையாட்டு வீரர்கள் மூச்சுத் திணறி இறந்தனர்.

## அணுத்திட்ட நோக்கத்தை ஈரான் உறுதிப்படுத்தட்டும்

ஜெனிவா, மார்ச் 24

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள், அந்த நாட்டின் முன்னேற்றத்துக்குத் தான் என்பதை உறுதி செய்யும் வகையில் சர்வதேச அணுசக்தித் தொடர்பகத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஈரான் அணுசக்தித் திட்டங்கள் தொடர்பாக ஐ.நா. பிரேரணை மீது இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதர் ஹர்தீப் சிங் பூரி இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

உலக நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை ஈரான் செயற்படுத்தி வருகிறது. இதற்காக அந்தநாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஐ.நா பிரேரணை மீதான விவாதம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நடைபெற்றது. அதில் பங்கேற்றுப் பேசிய ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதர் ஹர்தீப் சிங் பூரி மேலும் தெரிவித்ததாவது: -

ஈரான் அணுசக்தித் திட்டங்கள் மக்கள் மேம்பாட்டுக்கானவை, அமைதியான பயன்பாட்டுக்குத் தான் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

சர்வதேச நாடுகளின் நம்பிக்கையைப் பெறும் வகையில், சர்வதேச அணுசக்தி அமைப்புடன் முழுமையாக ஈரான் ஒத்துழைக்க வேண்டும்.

சர்வதேச ஒப்பந்தங்கள் அடிப்படையில் அணுசக்தியை அமைதி வழியில் பயன்படுத்த அனைத்து நாடுகளுக்கும் இருக்கும் உரிமையை இந்தியா எப்போதுமே ஆதரிக்கிறது - என்றார். (ந)

## ஒல்லியான அழகிகள் 'போஸ்' கொடுக்கத் தடை

### இஸ்ரேலில் புதிய சட்டம்

ஒல்லியாக இருக்கும் அழகிகளின் விளம்பரங்களைத் தடை செய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்றை இஸ்ரேல் அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

இஸ்ரேல் மக்களிடம் உணவு பழக்க வழக்கங்கள் திட்டமிட்டபடி இல்லை. நினைத்த நேரத்தில் சாப்பிடுவது, கண்டதையும் சாப்பிட்டுவதால் பலர் உடல் நலம் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தடுக்க இஸ்ரேல் அரசு பல்வேறு சுகாதார திட்டங்களை நடை முறைப் படுத்தி வருகிறது.எனினும் மக்களிடம் உணவுப் பழக்க வழக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவில்லை.

இதையடுத்து மெல்லிய உடல் தோற்றத்துடன் கூடிய அழகிகளுடன் வெளி வரும் விளம் பரங்களைத் தடை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான சட்டம் கடந்த 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இந்தப் புதிய சட்டத்தின் படி விளம்பரங்களில் நடிக்கச் செல்வதற்கு முன் அழகிகள் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எனினும் இந்த சட்டம் இஸ்ரேலில் வெளி வரும் வெளிநாட்டு இதழ்களுக்குப் பொருந்தாது என்பதால் எதிர்ப்பும் ஆதர வும் கிளம்பி உள்ளன. (ந)

## எரிவாயுக் கசிவால் விபரீதம்



கொலம்பியாவில் 'சில்லிவேக்' என்கிற இடத்தில் உள்ள எரிவாயு நிரப்பு நிலையத்தில் திடீரென நெருப்பு மூண்டுள்ளது. இதனால் அப்பிரதேசத்தில் இருந்து அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். எரிவாயு நிரப்பு நிலையத்தில் நின்ற கார் ஒன்று தீப்பற்றியதாலேயே இந்த விபத்து நேர்ந்திருக்கின்றன. ஆயினும் மரணம் எதுவும் நேரவில்லை.

## 12 மணித்தியாலம் 14 உலக சாதனை



இங்கிலாந்து கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவரும், முன்னாள் சகலதுறை வீரருமான அன்ட்ரூ பிளின்டொப், 12 மணித்தியாலங்களுக்குள் 14 வித்தியாசமான உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

அறக்கட்டளை ஒன்றுக்காக அவர் இந்தச் சாதனைகளைப் படைத்துள்ளார். அவரது சாதனைகளுள் சூடான சொக்லேட் பானத்தை விரைவாக அருந்துவது, அதிக பட்டாணிகளை கொக்ரெய்ல் தடியைக் கொண்டு 30 செக்கன்ககளில் உண்பது, ஒரு மணித்தியாலத்தில் அதிக பேஸ்புக் லைக்குகளைச் செய்வது ஆகியன உள்ளடங்குகின்றன.

சூடான சொக்லேட் பானத்தை 5.45 செக்கன்களில் அருந்திய அன்ட்ரூ பிளின்டொப், ஒரு மணித்தியாலத்தில் 52,719 பேஸ்புக் லைக்களைச் செய்தும், 38 பட்டாணிகளை உண்டும் கின்னஸ் சாதனை படைத்தார்.

## குதிரை வண்டியில்தான் பிறந்தார் சார்ளி சப்ளின்

### 1970 இல் எழுதிய கடிதத்தில் தகவல்



உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் குதிரை வண்டியில் பிறந்தார் என்ற புதிய தகவல் ஜேக்ஹில் என்பவர் சப்ளினுக்கு எழுதிய கடிதம் மூலம் வெளியாகியுள்ளது.

1889ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள டேம் வொர்த் லேண்ட் பகுதியில் சப்ளின் பிறந்தார் என்று கூறப்பட்டு வந்தது. எனினும் சப்ளின் எங்கு பிறந்தார் என்பது மர்மமாக இருந்து.

இந்த நிலையில் கடந்த 1970 ஆம் ஆண்டில் வெஸ்ட் லேண்ட் பகுதியில் வசித்த ஜேக் ஹில் என்பவர் சப்ளினுக்கு எழுதிய கடிதம், சப்ளினின் படுக்கை அறையில் இருந்த மேசையிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

"அதில் என்னுடைய தந்தையும் உங் கள் தந்தை யும் ஒன்றாக வேலை செய்தவர்கள். அதனால் நீங்கள் பிறந்த இடம் எனக்கு மட்டுமே தெரியும். நீங்கள் லண்டனில் பிறக்கவில்லை. வெஸ்ட் மிட் லேண்ட் பகுதியில் குதிரை வண்டியில் பிறந்தீர்கள் என்று ஜேக் ஹில் தெரிவித்துள்ளார்.

சப்ளின் மறைவுக்குப் பின் அவரது உடைமைகளை மகள் விக்டோரியா பாதுகாத்து வந்தார். மேசையை ஆராய்ந்த போதுதான் கடிதம் கிடைத்துள்ளது. (ந)

## சிறந்த வேட்பாளராக திகழ்வார் ஹிலாரி



2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக்க கட்சியின் வேட்பாளர் பட்டியலில்வெளி விவகார செயலர் ஹிலாரி கிளின்டன் சிறந்தவராகத் திகழ்வார் என்று அமெரிக்க செனட் சபையின் நியூயோர்க் உறுப்பினரான கேரஸ்ரன் கில்லிபான்ட் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியில் கிளின்டனின் பாரியாரான ஹிலாரி கிளின்டன் 2008 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஆவதற்கான போட்டியில் பராக் ஒபாமாவிடம் தோல்வியுற்றார்.

பராக் ஒபாமா அதிபரானதுடன் ஹிலாரி கிளின்டன் வெளிவிவகாரச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை ஜனாதிபதி பதவிக்காக போட்டியிட விரும்பவில்லை எனவும் ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலத்தில் வெளி விவகார செயலாளராகப் பதவி வகிக்கவும் விரும்பவில்லை எனக் ஹிலாரி தெரிவித்திருந்தார்.

எனினும் 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஹிலாரி கிளின்டனிடம் முதலில் கோரும் நபராக நான் இருப்பேன் என கில்லிபான்ட் பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாபதித் தேர்தலில் தனது இரண்டாவது பதவிக் காலத்திற்காக பராக் ஒபாமா போட்டியிடவுள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய அதிபரின் மனைவிக்கு ஐரோப்பிய நாடுகள் கதவடைப்பு

## அவரது வங்கிக் கணக்குகளும் முடக்கம்

டமாஸ்கஸ், மார்ச் 24

சிரிய அதிபர் ஆசாத்தின் மனைவி அஷ்மா மற்றும் அவரது குடும்பத்தினர் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த நாடுகளின் வங்கிகளில் உள்ள அவரது கணக்குகளும் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-ஆசாத்துக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. இதையடுத்து சுமார் 10 ஆயிரம் பேர் ராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர். எனவே போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அரபு நாடுகளும் தீவிரமாக உள்ளன. ஆசாத் பதவி விலகும்படி அந்த நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இதற்கு அவர் மறுத்து வருகிறார்.

இதைத் தொடர்ந்து பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகிய 6 ஐரோப்பிய நாடுகள் சிரியாவுடனான தங்களது தூதரக உறவை முறித்துள்ளன.

இதனால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அடுத்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. அதாவது, சிரியா அதிபர் ஆசாத்தின் மனைவி அஷ்மா மற்றும் அவரது குடும்பத்தினர் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்ய தடை விதித்துள்ளன. அதற்கு வசதியாக அந்த நாட்டு வங்கிகளில் உள்ள அவரது கணக்குகளை முடக்கி வைத்துள்ளன அந்த நாடுகள்.



இது அஷ்மாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் அவர் பிரிட்டனில் பிறந்து அங்கேயே கல்வி பயின்று வங்கியிலும் பணிபுரிந்துள்ளார். நவநாகரிக மங்கையாக உலகை வலம் வரும் அவர் ஆசாத்தை திருமணம் செய்து 3 குழந்தைகளுக்குத் தாயாகி சிரியாவில் தங்கியுள்ளார். (ந)

# நேட்டோ படைக்கான நிதி வேறு துறைகளுக்கு

## பிரிட்டிஷ் நிதியமைச்சர் அறிவிப்பு

லண்டன், மார்ச் 24

ஆப்கன் பாதுகாப்புப் பணியிலிருந்து பிரிட்டிஷ் படைகள் விரைவில் நாடு திரும்ப உள்ளன. இதனால் அந்தப் படைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வேறு துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு பிரிட்டனின் நிதியமைச்சர் ஜோர்ஜ் அஜ்போன் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நேட்டோ படைக்கு அளிக்கப்படும் நிதியுதவி எதிர்வரும்காலங்களில் வேறு துறைகளுக்குத் திருப்பப்படும். இந்தத் தொகை பிரிட்டனின் பொருளாதார நிலையைச் சமாளிக்கப் பயன்படும்.

எதிர்வரும் 2014ஆம் ஆண்டில் 9500 வீரர்கள் நாடு திரும்புவர். இந்த ஆண்டு 500 பேர் திரும்புவர்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் ஆறு பேர் ஆப்கானிஸ்தானில் இறந்ததால், அனைத்து இராணுவ வீரர்களையும் நாட்டுக்கு அழைக்க வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கி உள்ளது.

**பிரிட்டிஷ் இராணுவத்தினர் ஆறு பேர் ஆப் கானிஸ்தானில் இறந்ததால், அனைத்து இராணுவ வீரர்களையும் நாட்டுக்கு அழைக்க வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கி உள்ளது.**

இந்தநிலையில் பிரதமர் டேவிட் கமரூன், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் பேசியதில் அடுத்த ஆண்டிலேயே அனைத்துப் படைகளையும் திரும்பப் பெறும் வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த இராணுவத்தின் பணிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று கமரூன் ஒபாமாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு நிதியமைச்சர் ஜோர்ஜ் அஜ்போன் தமது உரையில் தெரிவித்தார். (ந)

# மைக்கல் ஜாக்சனின் வீடு ஏலத்தில்

, மார்ச் 24

உலகப்புகழ் பெற்ற மறைந்த பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சனின் வீடு ஏலத்துக்கு வர உள்ளது.

2009 ஆம் ஆண்டு அதிக போதை மருந்தை உட்கொண்டதன் காரணமாக மரணமடைந்த ஜக்சன் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள பவேர்லி ஹில்ஸ் பகுதியில் உள்ள வீட்டில் தான் வசித்தார்.

ஏழு படுக்கை அறைகளும், 13 கழிப்பறைகளும், ஏழு கார் நிறுத்தும் இடங்களும் உடைய 17,000 சதுர அடி கொண்ட இந்த வீடு தற்போது விற்பனை செய்யப்பட உள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இதே வீடு விற்பனைக்கு வந்தது. ஆனால் சில காரணங்களால் விற்பனை பிற்போடப்பட்டது. ஆனால் வீட்டிலிருந்த ஓவியங்கள், விளக்குகள், வெள்ளிப் பொருள்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டன.



தற்போது இந்த வீடு மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது. 23.9 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இந்த வீடு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



நிஜமாக
11
★
03
★
1977

நிழலாக
04
★
04
★
2007

## செல்வன் நிர்மலன் நிர்மலதாஸ் (தாஸ்)

திதி : 24.03.2012

ஆண்டைந்து ஆனாலும் - அண்ணா
ஆறவில்லை உன் நினைவுகள்
ஓடிவிட்டதண்ணா ஐந்தாண்டு காலம்
ஓயவில்லையண்ணா எம் இதயத்தின் ஓலம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அண்ணா
உன் அன்புக்கு ஈடாகுமா ?

ஆறாத்துயரில் குடும்பத்தினர்,
மல்லாகம்

(15816)(6-9-8)

## பாலியல் நோய் கனடாவில் தீவிரம்

பாலியல் ரீதியாக தொற்றுகின்ற நோய்களின் பரம்பல் கனடாவில்மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இது குறித்து பொதுச் சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

பாலியல் ரீதியாக தொற்றுகின்ற நோய்கள் அசௌகரியம், மலட்டுத் தன்மை, புற்றுநோய் ஆகியவற்றுக்கு காரணமாகக் கூடும் என்றும் எச்சரித்து ள்ளார்கள்.

இவ்வாறான நோய்கள் மிக நீண்ட காலத்துக்கு உறங்கு நிலையில் இருக்கும் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாமல் இருக்கும் என்பதால் பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் கேட்டு உள்ளார்கள். (ந)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22
★
10
★
1949

உதிர்வு
05
★
04
★
2011

## இறப்பியேல்பிள்ளை ஜெயநாயகம் (ஜெயசிங்கம்)

திதி: 24.03.2012

அன்பின் உறைவிடமே அறிவின் பொக்கிசமே
இன்முகம் காட்டி ஊட்டி வளர்த்தாய் - எமக்கு
ஓராண்டு கழிந்ததுவே
ஓயாமல் துன்பம் கொண்டோம்
இரவு பகல் உம் நினைவு
எப்போ காண்போம் இப்பிறப்பில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

61/12, பிரம்படி 2ஆவது ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

மனைவி - (இந்திராணி),
மகன் - (நிருஷ்னி).

(15885)(45)

# கண்ணீர்க் காணிக்கை

## அமரர் தில்லையம்பலம் லோகநாதன் B.A



(முன்னைநாள் இயக்குநர் / பொருளியல் ஆசான்
- கல்வி போதனா நிலையம், யாழ்ப்பாணம்,
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், யாழ்ப்பாணம்.
முகாமைத்துவ பணிப்பாளர் - அஸ்ரன் பதிப்பகம்
கொழும்பு)

அவர்களின் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியடைகிறோம். கல்வி உலகில் கடல் போல் சேவையாற்றி தன்நிகரற்றவராக திகழ்ந்த அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிக்கின்றோம்.

அன்பு நண்பன்
த. வரதராஜா (குடும்பத்தினர்)

The Express Institute
Irupalai, Kopay.

## லாலு பிரசாத் ஆஸ்பத்திரியில்




டில்லி, மார்ச் 23
ராஷ்டிரீய ஜனதா தள தலைவரும் முன்னாள் ரயில்வே துறை அமைச்சருமான லாலு பிரசாத் யாதவ் உயர் குருதி அழுத்தம் காரணமாக, டில்லியில் உள்ள அகில இந்திய விஞ்ஞான கழக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் கடுமையான சிறுநீரகப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு இருப்பதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு இருப்பதாக ஆஸ் பத்திரி வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

63 வயதான லாலுபிரசாத் யாதவ் உயர் அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கு நீண்ட நாள்களாக சிகிச்சை பெற்று வருவதாகவும் தற்போது அவரது உடல் நிலை சீராக இருப் பதாகவும் அவரது நெருங்கிய நண்பர் பிரேம் சந்து குப்தா தெரிவித்தார்.(வ)

# 3,000 பேர் பட்டினிப் போர்

### விஸ்வரூபம் எடுக்கிறது கூடங்குளம் விவகாரம்
### ஆதரவு தெரிவித்துப் போராடிய வைகோ, சீமான், கொளத்தூர் மணி கைது



பாளையங்கோட்டை, மார்ச்.24
கூடங்குளம் அணு உலையைச் சுற்றிலும் பொலிஸ் குவிக்கப்பட்டதற்கும், கூடங்குளம் அணு உலை யைத் திறப்பது என்று தமிழக அரசு எடுத்த முடிவுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைகோ, கொளத்தூர் மணி, சீமான் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

பாளையங்கோட்டையில் ஆர்ப்பாட்டம் செய்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கொளத்தூர் மணி, சீமான் உள்ளிட்டோர் இடிந்தகரை நோக்கி பேரணியாகச் செல்லத் திட்டமிட்டிருந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலையம் திறக்கப்படுவதைக் கண்டித்து இடிந்தகரையில் 5 ஆவது நாளாக உண்ணாவிரத போராட்டம் நீடித்து வருகிறது. வைகோ, திருமாவளவன் ஆகியோர் பேரணியாக கிராமத்துக்குள் வரத் தடை விதிக்கப் பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கூடங்குளம் அணு உலையைத் திறக்க தமிழக அமைச்சரவை கடந்த 19 ஆம் திகதி ஆதரவு அளித்தது. இதைத் தொடர்ந்து அணுமின் நிலைய பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

ரஷ்ய விஞ்ஞானிகள் 100 பேர் உட்பட 950 பேர் நேற்று 5ஆவது நாளாக பணிக்குச் சென்றனர். அங்கு விரைவில் மின் உற்பத்தி ஆரம்பமாகும் என்று அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

**3 ஆயிரம் பேர் உண்ணாவிரதம்**

இதற்கிடையே, அணு உலைக்கு எதிரான போராட்டமும் வலுவடைந் வருகிறது. போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், உறுப்பினர் புஷ்பராயன் உள்ளிட்டோர் இடிந்தகரையில் நேற்று 5 ஆவது நாளாக உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர். அவர்களுக்கு ஆதரவாக சுமார் 3 ஆயிரம் பேர் உண்ணாவிரத பந்தலில் அமர்ந்துள்ளனர். அவர்களில் உள்ளூர் மக்கள் மட்டும் வீடுகளுக்குச் செல்கின்றனர். கூத்தங்குளி, பெரியதாழை, பெரு மணல் உள்ளிட்ட வெளியூர்களை சேர்ந்த மீனவர்கள் பந்தலிலேயே இரவு, பகலாக அமர்ந்துள்ளனர்.

உதயகுமார் உட்பட போராட்ட குழுவினர் மீது இதுவரை 100 இற்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உதயகுமார், புஷ்பராயன் ஆகியோரைக் கைது செய்ய பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியில் அவர்கள் இருப்பதால் பொலிஸார் உள்ளே நுழையத் தயங்குகின்றனர். அதே நேரத்தில் அந்தப் பகுதியில் இயல்பு நிலை திரும்ப மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. இடிந்தகரை வழியாக பல ஊர்களுக்கு நேற்று முன்தினம் தொடக்கம் பஸ்கள் இயக்கப்படுகின்றன. தொடர்ந்து நிலைமை கண்காணிக்கப்பட்டு வரு கிறது. பதற்றம் தணிந்ததால் பாதுகாப்புக்கு குவிக்கப் பட்டிருந்த பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. (வ)

## எம்.எல். ஏக்கள் ஆபாசப்படம் பார்க்கவில்லையாம்

**ஆபாசப்படம் பார்த்த எம்.எல். ஏக்கள் இருவரையும் பதவி யிலிருந்து விலக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியது.**

காந்திநகர், மார்ச்.24
குஜராத் சட்டப்பேரவையில் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த இரு சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆபாசப் படம் பார்த்ததாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அந்த மாநில தடயவியல் துறை மறுத்துள்ளது. அவர்களின் ஐபாடை ஆய்வு செய்ததில் அதில் ஆபாசப் படம் எதுவும் இல்லை என்று தடயவியல் துறை தெரிவித்துள்ளது.

ஷங்கர்பய் சௌத்ரி மற்றும் ஜேதாபய் கீலாபய் ஆகியோர் சட்டப்பேரவையில் அமர்ந்துகொண்டு ஆபாசப் படம் பார்த்ததாக பத்திரிகையாளர் ஒருவர் பேரவைத் தலை வரிடம் முறைப்பாடு தெரிவித்தார். இந்த விவகாரத்தால் குஜராத் சட்டப்பேரவையில் கடும் அமளி ஏற்பட்டது. அவர்கள் 2 பேரையும் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியது. (வ)

## இந்தியாவில் மீண்டும் பன்றிக் காய்ச்சல்

மும்பை, மார்ச்.24
இந்தியாவில் ஒரு வருடத் துக்குப் பின்னர் மீண்டும் பன்றிக் காய்ச்சல் தலைதூக்கியுள்ளது.

புணேவில் கடந்த 2 வாரத்தில் இதுவரை பன்றிக் காய்ச்சலால் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 69 பேர் பன்றிக் காய்ச்சல் அறிகுறி யுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திராவில் 27 பேரும், ராஜஸ்தானில் 28 பேரும் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ராஜஸ்தானில் பன்றிக் காய்ச்சலுக்கு 5 பேர் பலியாகி உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதையடுத்து கடந்த 2 வாரத்தில் பன்றிக் காய்ச்சலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 12 ஆக உயர்வடைந்துள்ளது. (வ)




தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 குறித்த ஆவணத்தை முதல்வர் ஜெயலலிதா சென்னையில் வெளியிட்டார். ஆவணத்தின் முதல் பிரதியை அமைச்சர் பன்னீர்செல்வம் பெற்றுக்கொண்டார். அருகில் தமிழக முதன்மைச் செயலர் தேபேந்திரநாத் சாரங்கி நிற்கிறார்.

## குழந்தைத் தொழிலாளர் 19 பேர் மீட்பு

டில்லி, மார்ச்23
மின்சாதனக் கடைகளில் வேலை பார்த்த குழந்தைத் தொழிலாளர்கள் 19 பேர் மீட்கப்பட்டனர்.

பாவனா தொழிற் பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக குழந்தைகள் உரிமை பாதுகாப்புக்கான தொண்டு நிறுவனத் துக்குத் தகவல் வந்தது. இதனையடுத்து தொழிலாளர் நலத் திட்ட அமைச்சு அதிகாரிகளுடன் சேர்ந்து அங்கு திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு பணியாற்றிய 19 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். அவர்களில் 6 பேர் பெண் குழந்தைகள். இவர்கள் அனைவரும் பீகார், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இதில் குழந்தைகள் பலர் குடும்பத்தைப் பிரிந்து வாழ்ந்து வருவதும், முகவர்கள் மூலம் அவர்கள் அந்த மாநிலங்களிலிருந்து இங்கு வேலைக்கு வந்ததும் தெரிந் தது. அவர்களது பெற்றோருக்குக் கொடுக்கப்பட்ட முற் பணத்தைத் தவிர வேறு எந்த தொகையும் வழங்கப்படவில்லை என்பதும் விசாரணையில் தெரிந்தது. குழந்தைகளை வேலைக்கு வைத்திருந்த தொழில் அதிபர்கள் மீது வழக்குப் பதிவு செய் யப்பட்டுள்ளது. (வ)

## விமானப் பணியாளர் வேலை நிறுத்தம்

### ஏப்.2 இல் ஆரம்பிக்க முடிவு

மும்பை, மார்ச்.24
சம்பளம் மற்றும் ஊக்கத் தொகை நிலுவையை உடனடியாக வழங்கக் கோரி, ஏர் இந்தியா விமானப் பணியாளர்கள் ஏப்ரல் 2 ஆம் திகதி தொடக்கம், கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரச நிறுவனமான ஏர் இந்தியா, தன் பணியாளர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து, நிலுவையில் உள்ள சம்பளத் தொகையை ஏப்ரல் முதலாம் திகதிக்குள் வழங்கி விடுவதாக, விமான நிறுவனம் சார்பில் எழுத்து வடிவில் உறுதியளிக்க வேண்டும் என்று விமானப் பணியாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கையை ஏர் இந்தியா ஏற்கவில்லை.

இந்தநிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்று சுற்றுப் பேச்சுகளுக்கும் தோல் வியடைந்தன. இதையடுத்து, ஏப்ரல் 2 ஆம் திகதி தொடக்கம் கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடு படப்போவதாக, ஏர் இந்தியா தொழிற் சங்கங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ)

### கூடங்குளம் போராட்டத்துக்கு உதவும்:

## தொண்டு நிறுவனங்கள் மீது விசாரணை

டில்லி, மார்ச்.24
கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களின் போராட்டத்துக்கு நிதி உதவி அளிக்கும் தொண்டு நிறுவனங்கள் பற்றி விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணு மின் நிலையம் தொடர்பாக மாநிலங்களவையில் நாராயணசாமி தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு உலை எதிர்ப் பாளர்களுக்கு சில தொண்டு நிறு வனங்கள் உதவி அளித்தது பற்றிய விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த விசாரணை இன்னும் முடியாத நிலையில் எதிர்ப்பாளர்களுக்கு உதவி அளித்த தொண்டு நிறுவனங்கள் எவை என்பது பற்றிய தகவல்களை தற்போது வெளியிட முடியாது.

சில தொண்டு நிறுவனங்களின் வரவு-செலவு கணக்குகள் சரியாக இல்லை. அவை தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதில் 2 தொண்டு நிறுவனங்கள் மீது சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டுள்ளது. மேலும் இரு குற்ற வழக்குகளை தொண்டு நிறுவனங்கள் மீது தமிழக பொலிஸார் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

**உள்துறை கண்காணிப்பு**

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு உதவிய தொண்டு நிறுவனங்கள் பற்றி மத்திய உள்துறை அமைச்சகம் தீவிரமாக விசாரணை நடத்தி அதன் செயல்பாடுகளை கூர்ந்து கவனித்து வருகிறது. இந்தப் பிரச் சினையில் உள்துறை அமைச்சர் சிதம்பரம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு 4 தொண்டு நிறுவனங்கள் உதவி அளித்திருக்கின்றன என்று அடையாளம் காணப்பட்டு உள்ளது.

அதுபற்றியும் விசாரணை நடக்கிறது. கூடங்குளத்தை முடக்க சில சக்திகள் ஈடுபட்டுள்ளன. அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது- என்றார் அவர். (வ)

# யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் புதிய இராஜ கோபுர (திருக்குடமுழுக்கு) கும்பாபிஷேக விழா



## நாளை [25.03.2012] ஞாயிற்றுக்கிழமை
## நேரம்: காலை 9.18 முதல் 11.07 வரை



### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தளைத்து விளங்கும் யாழ். அத்தியடி என்னும் திவ்யபதியில் வீற்றிருந்து அருள்புரியும் சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகருக்கு இராஜகோபுரம் இல்லையே என்ற குறை இருந்து வந்தது. அவ்வாலயத்தில் குருவாக இருந்தவர் கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் என்று ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு எடுத்துக் கூறிவந்தார். அவரின் பெரு முயற்சியினாலும் அத்தியடி விநாயகருக்கு இராஜகோபுரம் அமைக்க வேண்டும் என்று ஆவல் கொண்ட அடியார்களினாலும் அண்மையில் இறைபதமடைந்த அமரர் சிவ ஸ்ரீ யோ. பிரபாகரேஸ்வரகுருக்களை இராஜ கோபுர காப்பாளராகக் கொண்டு திருப்பணிச்சபை அமைக்கப்பட்டது. அத்திருப்பணிச்சபை ஆலய நிர்வாகசபையுடன் இணைந்து உள்நாட்டு, வெளிநாட்டு அடியார்களின் பெருநிதியுதவியுடனும், பொருளுதவியுடனும் சரீர உதவியுடனும் கம்பீரமான அழகிய இராஜகோபுரம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற இந் நாளிலே அனைத்து அடியார்களுக்கும் விநாயகப்பெருமானின் திருவருளும் எனது நல்லாசிகளும் உரித்தாகுக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**சிவஸ்ரீ ந. கணேசராஜக்குருக்கள்**



### சிவாச்சார்ய குருமணி - யாழ். அத்தியடி சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள் வழங்கிய ஆசிச் செய்தி

இலங்கா தீவின் வடபால் சைவமும் தமிழும் இணையப் பெற்ற, தெய்வீகத் திருத்தலங்களையும் கொண்ட யாழ். நகரில் அத்தியம்பதி என்னும் திவ்விய திருத்தலத்தில் வழிபடும் அடியார்களின் இன்னல் களைந்து அருளாட்சி செய்கின்ற சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகரின் அழகிய பஞ்சதள இராஜகோபுரகும்பாபிஷேகம் நடைபெறுவது அக்கிராம மக்கள் செய்த புண்ணியம் என்று தான் கூறவேண்டும். ஒரு ஆண்டுக்குள் அத்திபாரமிட்டு அக் கிராம மக்கள், திருப்பணிச் சபையினர், நிர்வாக சபையினர், வெளியூரில் வாழ்கின்ற மக்கள் என அனைவரினதும் நிதியுதவியுடனும் சிற்பாச்சாரியாரின் செயல், ஊக்கமும், திறமையுடனும், வெகு விரைவாக திருப்பணிகள் பூர்த்தியாகி கம்பீரமாக அழகாக பொலிவுபெற்ற பஞ்ச தள இராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பூரிப்படைவதுடன் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைப்பதுடன் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"சர்வே கனஹா சுகினோ பவந்து"



### அருளாசிச் செய்தி

சிவனேயச் செல்வர்களுக்கு:

யாழ்ப்பாணம் அத்தியடிப்பகுதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் வீரகத்தி பிள்ளையாருடைய ஆலயத்திற்கு பஞ்சதள இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத்தருகின்றது. ஆலயத்தின் பூரணமான காட்சியை நமக்குத்தருவது இராஜ கோபுரமாகும். இதனை கோபுரதரிசனம் கோடி புண்ணியம். தூலலிங்கமாக இறைவன் எழுந்தருளி இருந்து அருள் புரிவது இராஜகோபுரம் சைவமும், தமிழும் நிறைவாக வாழ்வதற்கு நமக்கு வழிகாட்டியாக உள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மரபுவழியாக இவ்வாலயத்தில் நர்த்தன விநாயகராக எழுந்தருளி இருப்பது இங்கு வாழும் மக்களின் அற்புதச் சிறப்பாகும்.

இவ்வாலயம் நீண்ட பழமையான பலசிறப்புக்களை கொணடிருப்பதும் இங்கு இராஜகோபுர வாசல் காண்பதும் அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. இக் கும்பாபிஷேகத்தினை தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக ஆலய கும்பாபிஷேகத்தினை நடாத்தும் குருமார்களுக்கும், மக்களுக்கும், திருத் தொண்டர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**



### கோபுர தரிசனத்துக்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்


உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஓங்கார முதற்பொருளான ஆங்காரம் நீக்கும் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையாருக்கு நாளை இராஜ கோபுர கும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு அளவிலா ஆனந்தம் அடைகின்றோம்.

அத்தியடி வாழ் மக்களின் நீண்ட நாள் கனவு நனவாகின்றது. அத்தியடிப் பிள்ளையாரின் அடியவணாகிய சிறியேனுக்கும் ஆசி நல்கும் அரிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெருமிதமடைகின்றேன். கோபுர தரிசனத்துக்கு நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

வினை தீர்க்கும் விநாயகரின் கோபுர கும்பாபிஷேகம் காண்பது பூர்வஜென்ம புண்ணியப் பயனாகும். இதை முன்னின்று நிறைவுசெய்த அத்தியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரின் திருப்பணிச்சபை பாராட்டுக்குரியது. அவர்களுக்குப் பெரும் பேறுகிட்டும். ஆலயக் குருக்களும் அறப்பணியில் பங்கெடுத்துப் பிள்ளையாரின் அனுக்கிரகம் கிடைக்க வழிசமைத்துள்ளனர். இன்று நின்று நிலைத்துக் கம்பீரமாகக் காட்சிதரும் கோபுர தரிசனம் கோடி புண்ணியந் தரும். இந்தக் குடமுழுக்குச் சிறப்புற எமது நல்லாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"அத்தியடியுறை நர்த்தன விநாயகரின் அருள் எங்கும் பரவட்டும்"

சிவநெறிக் கலாநிதி
கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.



## யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வரலாற்றுச் சுருக்கம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கிய காலத்தில் அந்நகருக்கு தென்மேற்குப் புறத்தே அத்திமரங்கள் நிறைந்த சோலையாக காணப்பட்ட ஓர் அழகிய கிராமமே அத்தியடி ஆகும்.

மருத்துவ குணமிக்க வேப்பமரம் போல் அத்திமரத்தின் வேர், பட்டை, இலை, பழம் என்பனவும் நோய் தீர்க்கும் அருமருந்துகளாகும். உடல் நோய் தீர்க்கும் அத்திமரத்தின் கண்ணே எம் பிறவி நோய் தீர்க்கும் விநாயகப்பெருமான் கோயில் கொண்ட வரலாற்றை ஒரு முறை பார்ப்போம்.

ஆடல் நாயகன் நடராஜப்பெருமான் பொன்னம்பலத்திலே திருநடனம் புரிந்தவாறு கோயில் கொண்டு விளங்கும் திருத்தலமே இந்தியாவின் தமிழ் நாட்டின் சிதம்பரம் ஆகும். முன்னைய காலங்களில் யாழ்ப்பாணத்தவர் பலபேர் தமிழ்நாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே கட்டு மரங்களினூடாகவும், படகுகள், பாய்க்கலங்களூடாகவும் சென்று வந்து வாணிபத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறு தொழில் செய்து வந்த வணிகர்களில் ஒருவரான வீரகத்தி என்ற விநாயகர் அடியாரும் தமிழ்நாட்டிற்குச் செல்லும் போதெல்லாம் சிதம்பரத்திற்கு சென்று நடராஜப் பெருமானைத் தரிசிக்க மறப்பதேயில்லை. இவ்வாறு தில்லைக் கூத்தன் சிவபெருமானின் ஆடல் காட்சியைக் கண்டு மெய் மறந்து வழிபடும் போதெல்லாம், தன்குலதெய்வமான விநாயகரின் ஆடல் காட்சியும் அவரது மனதில் தோன்றி மறைவதுண்டு. அதன் வெளிப்பாடாகவே நடனமாடும் கோலத்திலுள்ள ஒரு விநாயகர் சிலையை செய்விப்பதற்காக சிதம்பரத்திலுள்ள சிற்பாச்சாரியார்களை வீரகத்தி அவர்கள் நாடினார். இவரின் விருப்பத்தைக் கேட்டறிந்த அவ்வூர் சிற்பி ஒருவர் மிகமகிழ்வுடன் இவருக்கு வலது காலை தூக்கி ஆடியவாறு சிதம்பர சிற்பக்கலையுடன் கூடிய இலகுவில் யாழ்ப்பாணத்துக்கு தூக்கிச் செல்லக் கூடியவாறான கிட்டத்தட்ட 16 அங்குல உயர அழகிய நடன விநாயகர் விக்கிரகத்தை செதுக்கி வழங்கினார். அதற்கான பெறுமதியை வழங்கி மிக மகிழ்வுடன் அவ் விக்கிரகத்தைப் பெற்றுக் கொண்ட அந்த அடியவர் அதனை கீழே வைக்காது தோளிலும், தலையிலும், மடியிலும் மாறி மாறி சுமந்து தமிழக கரையிலிருந்து கட்டுமரம் மூலம் யாழ்.கொழும்புத்துறையை வந்தடைந்தார். அங்கிருந்து சைவ அன்பர்கள் புடை சூழ பிள்ளையாரை சுமந்து வந்து பசுமையும், எழிலும் நிறைந்து விளங்கிய அத்தித்தோப்பிலே ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு உழவாரம் மூலம் புல் செருக்கி சிறு முற்றமாக்கிய காணியில் ஒரு அத்தி மரத்தின் கீழ் சிறு கொட்டில் அமைத்து எம் பெருமானைக் குடியமர்த்தினார்.

வீரகத்தி என்ற பெருமகனின் ஆவலினால் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயில் சுற்றாடலில் உருவாகிய பிள்ளையார் யாழ்ப்பாணம் அத்தியடி எனும் ஊரில் குடியமர்ந்தமையால் யாழ்.ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் என அழைக்கப்படுகின்றார். விநாயகருக்கு அத்திமுகன் என்றொரு பெயரும் உண்டு. இங்கு ஊரின் பெயரும் இறைவனின் பெயரும் ஒருங்கே அமைந்திருப்பதும் ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

எம்பெருமானின் கருணையினால் வீரகத்தி அவர்களின் வாணிபத்தொழிலும் மென்மேலும் சிறந்து விளங்கவே வரும் இலாபத்தின் ஒரு பகுதியை சிறு குடிலாக இருந்த கோயிலை கற்கோயிலாகக் கட்டுவதில் செலவிட்டார். அன்னாருடன் சேர்ந்து சிறு அளவினராகவே இருந்த அத்தியடி குடிமக்களும் அயல் ஊரான யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, ஆரியகுளத்தடி, இராசாவின் தோட்டம், நல்லூர் ஆகியவற்றைச் சேர்ந்த அன்பர்களும் சேர்ந்து விநாயகருக்கு கருவறை, தூபியுடன் கூடிய ஒரு மண்டபத்தையும் கட்டுவித்து எம்பெருமானுக்கு குடமுழுக்கும் நடாத்தி மகிழ்ந்தனர்.

அறங்காவலர், சைவப்பெருமகனார் வீரகத்தி அவர்களின் மறைவினையடுத்து ஊர் மக்களும், அயல் ஊர் மக்களும் ஒருங்கே சேர்ந்து அன்னாரின் வழியில் பிள்ளையார், பணியை முன்னெடுத்துச் சென்றனர். எம்பெருமானின் திருவருளினால் அவர்கள் வாழ்வும் சிறந்து விளங்கவே அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது சொந்தப்பணத்திலே பிள்ளையார் கோயிலுக்குத் தேவையான பொருட்கள், எம்பெருமான் வீதிவலம் வருவதற்கு வசதியாக வாகனங்கள், கோயில் கட்டுமானங்கள் என்பவற்றுக்கு வாரி வழங்கினர். இவ்வாறு வாரிவழங்கியோரில் பாவட்டங்காட்டு பொன்னம்பலம் என்ற வர்த்தகர் முதன்மையானவர். இவர் தனது வர்த்தக நடவடிக்கைகளுக்காக தென்னிலங்கை சென்று வரும் போதெல்லாம் கிடைக்கும் இலாபத்தின் பெரும்பகுதியை பிள்ளையாரின் திருப்பணிக்கே செலவிட்டார். இவரின் முயற்சியினாலே அர்த்தமண்டபம், மகா மண்டபம், சபா மண்டபம் என்பவை உருவாகின. பல வருடங்களுக்கு மேலாக அலங்காரத் திருவிழாவாக நடந்து வந்த எம்பெருமானின் வருடாந்த திருவிழா திரு. பொன்னம்பலத்தின் காலத்திலேயே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பெருந்திருவிழாவாக நடைபெறத் தொடங்கியது. இவர் தனது சொந்தச் செலவிலேயே கோயிலுக்கு கொடிமரத்தையும் செய்து வழங்கினார். தற்போதும் அக்கொடிமரம் கோயிலில் கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

1975 ஆம் ஆண்டு இக் கோயிலின் வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனை ஆகும். மறைந்த அத்தியடி வாழ் திருமகனும் பிரபல வர்த்தகரும், கோடீஸ்வரருமான அமரர் க.குணரத்தினம் (K.G) அவர்கள் இக் கோயிலின் திருப்பணிகள் பெரும்பாலானவற்றை தம் செலவிலேயே செய்து கோயிலின் திருக்குடமுழுக்கு (மஹா கும்பாபிஷேகம்) நிகழ்ச்சியை யாழ்.மண்ணே வியக்கும் வண்ணம் பிள்ளையாரின் அருட்கடாட்சத்தினால் தானே முன்னின்று நடாத்தி வைத்தார். அத்தோடு நில்லாமல் கோயிலிற்கான ஒரு புதிய சப்பைரதத்தையும், சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய தேரையும் அமைத்து வெள்ளோட்டம் விட்டு மகிழ்ந்தார். அவரின் மறைவின் பின்னர் அத்தியடி வாழ் பிள்ளையார் அடியவர்களும் ஏனைய அயலூர் அடியார்களும் தமது முன்னோர்கள் விட்டுச் சென்ற எம்பெருமான் பணிகளை கைவிடாது பிள்ளையாரின் பெருங்கருணையினால் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்கள்.

பெறுதற்கரிய பேறாம் இம் மானிடப் பிறவியை அத்தியடிப் பிள்ளையாரின் பெருங்கருணையினால் இப்பூவுலகில் பெற்றுக் கொண்டுள்ள நாம் அத்தியடிப் பிள்ளையாருக்கு நடைபெறும் அபிஷேகங்கள், பூசைகள், திருவிழாக்கள், திருப்பணிகள் போன்றவற்றில் தவறாது கலந்து கொண்டும் பங்களிப்புச் செய்து நாமும் எமது சந்ததியினரும் தொடர்ந்தும் எம்பெருமான் திருவருளுடன் ஒரு குறையுமில்லா ஆனந்தப் பெருவாழ்வு வாழ்வோமாக

**ஆடல் அழகன் அத்தியடியான் பெருங்கருணை அனைவருக்கும் கிடைப்பதாக!!**
**பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.**

| இராஜ கோபுர ஸ்தபதி | சிற்பவேலை: திரு.ரா.தியாகராஜன் குழுவினர், |
|---|---|
| திரு.வே.யோகேஸ்வரன் குழுவினர் அராலி மத்தி, அராலி | திருவெண்காடு, தமிழ்நாடு. |

(13955) (6,9,10)

**விழாவினைத் தொடர்ந்து விசேட பூசைகளின் பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.**

அடியார்களே! இராஜகோபுர திருப்பணியைத் தொடர்ந்து மணிக் கோபுரங்களையும் ஒரு மணி மண்டபத்தையும் அமைக்க எண்ணியுள்ளோம். அதற்கான பண உதவியை பின்வருமாறு அனுப்பிவைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**A/C No: 016020584792 - Hatton National Bank - Jaffna, Srilanka.**

பிள்ளையார் பணியில்
நிற்கும் திருப்பணிச் சபை.

## தீர்வை முன்வைக்காததால் நாட்டில் நெருக்கடி நிலை

### ரோசி சேனநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 24

அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படாமையினால் நாடு நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சுமார் மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அரசு உரிய அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்கத் தவறியுள்ளது.

இதன் காரணமாகவே சர்வதேச நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

இந்தியாவிடம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் இந்தியா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தது.

தற்போதைய அரசின் தூர நோக்கற்ற தன்மையே பல் வேறு சர்வதேச அழுத்தங்களுக்கும் ஏதுவாக அமைந்துள்ளது.- என்றார். (ச)

## நினைவுகூருவோம்...



இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் 60ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சுதந்திர சதுக்கத்திலுள்ள அவரது உருவச்சிலைக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் தி.மு.ஜயரட்ன மலரஞ்சலி செலுத்தினார். அருகில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்படப் பல பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.

## சர்வதேசத்துக்கு எதிராக சவக்குரல் வேண்டாம்

### அதுவே அரசின் கடமை என்கிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.



கொழும்பு,மார்ச் 24

ஜெனிவா பிரேரணை தொடர்பில் கோபமடையாமல், சர்வதேசத்துக்கு எதிராக கோஷமிடாது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டியது அரசின் கடமை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு கடந்த டிசெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தும் காலதாமதமின்றி அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தால் தற்போது சர்வதேசத்தில் யோசனையொன்றைக்கொண்டு வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு முன்னின்று செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எப்போதும் நாட்டுக்காக செயற்பட்டு வரும் ஐக்கிய தேசியக்கட்சி, இவ்வாறான நேர்மையான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கும். எனினும் அரசு தனிப்பட்ட தேவைக்காவும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் செயற்பட்டால் நாட்டின் எதிர்காலம் மேலும் இருளடைவதை தவிர்க்க முடியாது.-என்றார். (ச)

# சீற்றத்தைக் கிளப்பியது ஜெனிவா தீர்மானம்

### பத்திரிகையாளர்களுக்கு துரோகிகள் பட்டம்

கொழும்பு, மார்ச் 24

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்க ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற போரின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்தியுள்ளது.

போர் ஓய்ந்த பின்வரும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட அணுகுமுறைகள் தொடர்பாக அமெரிக்கா பெருமளவில் விரக்திய டைந்திருந்தது என்று பத்திரிகையாளர்கள் தெரிவிக் கிறாா்கள். மனித உரிமைகள் பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதில் தோல்வி கண்டு விட்டதாகக் கூறி ஐரோப்பிய யூனியன் 2010ஆம் ஆண்டு இலங்கைக் கான வர்த்தக சலுகைகளை திரும்பப் பெற்றுக்கொண்டது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை ஒரு தலைப்பட்சமானது தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கை என்று இலங்கை அரசு கண்டித்துள்ளது. இலங்கை அரசு விடுத்த ஓர் அறிக்கையில், தீர்மானத்தின் மீதான வாக்களிப்பு குறித்த பிரச்சினையின் தாற்பரியம் தொடர்பில் நடைபெறவில்லை.

வேறு நாடுகளில் காணப்படும் சொந்த அரசியல் பிரச்சினைகள் மற்றும் மூலோபாய உறவுகளின் அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளது.

தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்தமையானது இரு நாடுகளுக்குமிடையில் ராஜதந்திர மட்டத்தில் நெருடல்களை ஏற்படுத்தக்கூடும் என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

#### தொலைக்காட்சியில் பத்திரிகையாளர் மீது குற்றச்சாட்டு

இலங்கை அரசு நாட்டுக்கு எதிரான துரோகிகள் என்று கூறப்படுபவர்களுக்கு எதிரான இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருக்கும் வேளையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மற்றும் பத்திரிகை யாளர்களுக்கு எதிராக இந்த இயக்கம் நடத்தப்படுகின்றது.

இலங்கையிலும் வெளிநாட்டிலும் இருந்து செயல்பட்டும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக இலங்கை அரச தொலைக்காட்சி நிறுவனம் நீண்ட அறிக்கைகளை வெளியிட்டது. தாய்நாட்டை இவர்கள் காட்டிக் கொடுக்கிறார்கள் அல்லது தோற்கடிக்கப்பட்ட புலிகளுடன் சேர்ந்து அவர்களுக்கு ஆதரவாக வேலை செய்கிறார்கள் என்று அதில் பத்திரிகையாளர்கள் கண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் உள்ள பத்திரிகையாளர்களின் பெயர்கள் வெளியிடப்படாவிட்டாலும் அவர்களின் அடையாளம் காணமுடியாத படங்கள் தொலைக்காட்சியில் காட்டப்பட்டன. அவர்களின் பெயர்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் மேலும் அதிகமான துரோகிகள் அடையாளம் காட்டப்படு வார்கள் என்றும் மீண்டும் மீண்டும் அறிவிக்கப்பட்டது.

இந்த விதமான ஒளிபரப்புகள் மிகவும் ஒழுக்கக் கேடானவை என்று சுதந்திர ஊடக அமைப்பு கண்டித்துள்ளது. இம் மாதிரியான ஒளிபரப்புகள் கடந்த காலத்தில் பெரும் வன்செயல்களுக்கு வித்திட்டன என்று கண்டித்துள்ளது. (ப)

## பூச்சிநாசினி பாவனைக்கு விட்டமைக்கு குற்றப்பத்திரிகை

கொழும்பு,மார்ச்24

ஆர்ஸனிக், மேக்கூரி எனும் நச்சுப்பொருள்களைக் கொண்டிருந்த பூச்சி நாசினிகளை நீதிமன்றத்தின் உத்தரவை மீறி பாவனைக்கு விட்ட பூச்சிநாசினி மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சுற்றுச்சூழல் நீதிக்கான நிலையத்தின் சட்டத்தரணி கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் கோரியுள்ளார்.

மனிதருக்கு தீங்கு விளைவிக்கும் அளவுக்கு இந்தப் பூச்சி நாசினிகளில் ஆர்ஸனிக் மற்றும் மேக்கூரி என்பன காணப்படாததால் இந்தக் கொள்கலன்களை இறக்குமதியாளர்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டன என்று அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் கட்டளையை புறக்கணித்து, இந்தக் கொள்கலன்களை இறக்குமதியாளர்கள் எடுத்துச் செல்ல சுங்க அதிகாரிகள் அனுமதித்தமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றும் இவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டும் எனவும் மனுதாரர் சார்பில் ரவீந்திர நாத்தாபரே வாதாடியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதிக்கு நீதிபதி தேவிகா தென்னக் கோன் ஒத்திவைத்துள்ளார். (ச)

## இராட்சத திமிங்கிலம்



தெஹிவளை கடற்கரையில் நேற்று இறந்த நிலையில் 60 அடி நீளமான திமிங்கிலம் கரையொதுங்கியது.

# கொள்கைகளில் மாற்றமில்லை


### அமைச்சர் யாப்பா கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அரசின் கொள்கைகளில் மாற்றம் இல்லை என்று பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். ஜெனிவா தீர்மானம் அரசின் கொள்கைகளிலோ, நடவடிக்கைகளிலோ மாற்றத்தை ஏற்படுத்தாது. தீர்மானம் நிறைவேற்றப்படுவதுக்கு முன்னதாகவே நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களை அரசு ஆரம்பித்துள்ளது.



மக்கள் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல், தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக் கொள்ளல், போர் வலயத்தை அபிவிருத்தி செய்தல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. - என்றார். (ச)

## காலி மாநகரசபை முதல்வர் வீட்டில் கல்வீச்சு

கொழும்பு,மார்ச் 24

காலி மாநகரசபை முதல்வர் மெத்சிறி த சில்வாவின் வீட்டின் மீது கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை காலி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச)

வடமராட்சி - துன்னாலை

### திருவருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயம் (புளியங்கியான் பிள்ளையார்)

**பரிவாரமூர்த்தி சண்டேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகமும் கொடிமரப் பிரதிஸ்டையும்**

காலம்:- 25.03.2012 காலை 9.12 முதல் 10.12 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம். எண்ணெய்க் காப்பு 24.03.2012 இன்று காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு

சாமஸ்ரீ தேசமான்ய, சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், அகில இலங்கை சமாதான நீதவான், சமய பிரசங்க வாரிதி, ஆன்மீகப் பணியில் அரச சாகித்திய விருது பெற்ற

**சிவஸ்ரீ நாகரத்தின கலாதர சிவாச்சாரியார் BA (Hons), M.A.**

உற்சவ பிரதமகுரு புளியங்கியான் சிதம்பர விநாயகர் ஆலயம்


கோயிற்கடவை - துன்னாலை.

அனைவரும் வருக அருள் பெறுக.

(சி/122)(2-6-9) - **ஆலயபரிபாலன சபை.**

உ

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம் - 25.03.2012



தவத்திரு

### வே. முருகேசு சுவாமி

அவர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் நடைபெற்று வரும் **கும்பாபிஷேக தினம்** நாளை **(25.03.2012)** ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி **வேற் பெருமானுக்கு 1008 சங்காபிஷேக நிகழ்வும், சண்முக அர்ச்சனையும்** இடம்பெற்று நண்பகல் சுவாமி வீதியூர்வலத்துடன் நிறைவு பெறும். அன்றைய தினம் விசேட தவில் கச்சேரியும் இடம்பெறும்.

அத்துடன் எதிர்வரும் **30.03.2012** வெள்ளிக்கிழமை சுவாமி அவர்களின் 15 ஆம் ஆண்டு குருபூசை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

முருகேசு சுவாமி அவர்களின்
அன்பர்கள் சார்பில்
**ஆ. அருணாசலம்**

(15969) (6-9-45)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**புறநிலைப் படிப்புக்கள் அலகு**
**Extra - Mural studies Unit**
**University of Jaffna**

**பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. விரிவுரைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் ந.ப 12 மணி வரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுக்கட்டணம் ரூபா 500

பயில விரும்புபவர்கள் முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்களின் சுயவிவரக் கோவையினை இணைத்து இணைப்பாளர், புறநிலை படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி பதிவினை மேற்கொள்ளலாம்.

பாடநெறிகளைப் பயில விரும்புபவர்கள் எத்தனை பாடநெறிக்கும் விண்ணப்பிக்க முடியும். ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடத்துக்கே அனுமதிக்கப்படுவர்.

**விண்ணப்பங்க்ள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 21.04.2012**

1. தொடர்பாடலுக்கான ஆங்கிலம். (English for Communication)
2. அலுவலகர்களுக்கான ஆங்கிலம் (English for the Office staff)
3. முன்பள்ளிக் கல்வி (Pre school Education)
4. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
5. மனித உரிமைகள் (Human Rights)
6. மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management)
7. சிறுதொழில் முகாமைத்துவம் (Small Business Management)
8. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும் (Nursing and First aid)
9. விசேட தேவையுடையவர்களுக்கான கல்வி (Education for Special needs)
10. சோதிடக்கலை (Astrology)

மேற்படி பாடநெறிகளில் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் போதனாசிரியர்களாகப் பணியாற்ற விரும்பின் தங்களுடைய துறைசார் திறமைகளை உறுதிப்படுத்தக் கூடியவாறு தங்கள் பற்றிய சுயவிவரக்கோவையினை இணைப்பாளர், புறநிலை படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**இணைப்பாளர்,**
**புறநிலைப் படிப்புக்கள் அலகு,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C/117) (7,9,10)

## தவறவிடப்பட்டபணம் ஒப்படைப்பு

சாவகச்சேரி,மார்ச் 24

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் சாவகச்சேரி நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த பணத்தை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி நீதிமன்றில் பெற்றுக் கொள்ளலாம் என்று பதிவாளர் அறிவித் துள்ளார். (ம-9)

## மரண அறிவித்தல்

**காராளபிள்ளை செல்லத்துரை விநாயகமூர்த்தி (காராளி)**

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் சிட்னி, அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை விநாயகமூர்த்தி (காராளி) 17.03.2012 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற நவமணி (நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் புதல்வி) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் இராசதுரை (N.H.D.A) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (U.S.A), காலஞ்சென்ற குணச்சந்திரன் (Sydney), கலாரஞ்சனா (Sydney) ஆகியோரின் அன்புத் தத்தையும், செல்வி (U.S.A), றமணி (Sydney), விக்கிரமபாஸ்கரன் (Sydney) ஆகியோரின் மாமனும், ஸ்ரீகாந்தியின் மைத்துனரும், யாழ், மைலன், கமல், பென் (Ben), பாரதி, சேயோன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு Pine grove memorial park Sydney இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கலாரஞ்சனா,
(Sydney)
செ.இராசதுரை
(சகோதரன்)
நல்லூர்.

0061298632763

## தேவை

Unicode இல் தமிழ் மூலம் Type Setting செய்து PDF File ஆக்கி E.mail செய்யக் கூடியவர் தேவை. திறமைக்கேற்ற கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும்.

தொடர்பு : 077 9880338

## தவறிவிட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டைக்கும் கல்லுண்டாய் வீதி, காக்கைதீவு, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்துக்கும் இடையில் புதிய நொக்கியா (Nokia)x 2-00 கைத்தொலைபேசி தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தனிஸ் ரெக்ஸ், நவாலிவீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியிலோ அல்லது 077 7448274, 021 225 5645 எனும் தொ.பே. இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும்.

(15966) (6-9-45)

## விற்பனைக்கு

அல்சேஷன், பொமரேனியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு நாள்களில் பார்வையிடலாம்.

தொடர்பு: 0771016407

## விற்பனைக்கு

BAHIRAHA No - 1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக் குண்டு. 100/=

R.M.B. பாம் பருத்தித்துறை

T.P : 077 4701928

(15945)(6-14-8)

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன்செப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும் றொட்விலர் ஆண் நாயும், காலிக்குயின் பெண் நாயும், 3மாதம் பூர்த்தியான அல்சேசன் ஆண், பெண் நாய்க் குட்டியும், 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் அல்சேசன் குட்டியும், வான்கோழி, மணிதாரா, வாமஸ், J.C இன ஒருவருட பசுக்கன்று விற்பனைக்குண்டு.


தொடர்பு: வி. மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக, பூதராயர் கோயிலடி

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் கல்பேட் (சுத்தம் செய்யப் பட்ட புறொயிலர் ரூ 450/- மட்டுமே)

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# ஏழாம் ஆண்டு நினைவுத் துளிகள்



## அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

**(வள்ளல் வரதன்)**

(நகரசபை - சாவகச்சேரி)

அன்னையின் கரங்களில்
02-06-1953

ஆண்டவன் பாதங்களில்
10-04-2005

### திதி:- பூர்வபக்க துதியை (24.03.2012)

"நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்"
என்பது யாவரும் அறிந்த உண்மை.

தாயின் கருவறையில் மலர்ந்த ஆதி மலரே
எமக்காய் வந்துதித்த அன்புக்கினியவரே
குடும்பத்தின் தலைவனே குளவிளக்கே - உமைப்
பிரிந்து தவிக்கின்றோம் இப் பூவுலகினில்......

பிறவிகள் அழிவது உலக நியதியப்பா
இழப்புக்கள் வருவது மனித இயல்பப்பா
பாதியில் பரிசளித்துவிட்டதே விதி
எங்களால் தாங்கமுடியவில்லையப்பா....

ஏழு ஆண்டுகள் காற்றாய் பறந்துவிட்டதப்பா
கண்ணுக்குள் கண்ணீரைக் காணவில்லையப்பா
ஏது குறை உனக்கென்றீர்களே
நீரே விடை அளித்து விட்டீரப்பா

இரவு பகலாய் தேடுகின்றோம் - உமை
ஒரு செக்கனும் காணவில்லையப்பா
இதுவே மனித வாழ்க்கை என்பதற்கோர்
உதாரண புருஷன் நீங்களப்பா

நினைக்காத நேரங்கள் இல்லையப்பா
கதைக்காத நிமிடங்கள் இல்லையப்பா
நகைக்காத செக்கன்கள் இல்லை - உமை
இழந்து கண்ணீருடன் வாடுகின்றோமப்பா

கண்ணைக் காக்கும் இமைபோல் அரவணைத்து
காற்றுக்கூடத் தீண்டாமல் - நிலம்போல் தாங்கி
வைரம் போல் ஜொலிக்க வைத்த - எம்
தெய்வத்தை நினைக்கக் கதி கலங்குதப்பா

எதைச் செய்தாலும் நன்மைக்கே - என
மனம் கோணாமல் திகழும் மாசற்ற மனமும்
சகோதர உயிரும் பல பாச இணைப்புக்களும் - கொண்ட
எம் அன்புத் தெய்வத்தை கை தவறவிட்டும்

தவறவிடாத நினைவுகளுடன்:
இன்றைக்கும் மனம் வருந்தி நினைக்கும்
என்றும் மறவாத
**குடும்பத்தினர்.**

சந்நிதி இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

(15900)(2-9)

## கிழக்கு முதல்வர் பறங்கியாமடுக் கிராமத்துக்கு

மட்டக்களப்பு,மார்ச் 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் பறங்கியாமடு கிராமத்துக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சென்றுள்ளார்.

அங்கு சென்ற முதலமைச்சர் மக்களுடன் கலந்துரையாடி அக்கிராமத்தில் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்துள்ளார்.

சந்திவெளி, பறங்கியாமடுவை இணைக்கும் வீதியை புனரமைத்தல் மற்றும் கிராமத்தின் உள்வீதிகள் செப்பனிடுதல் தொடர்பாக உடனடியாக தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று மக்களுக்கு அவர் உறுதியளித்தார்.

ஆலயம் மற்றும் பாடசாலைக்கான உதவிகளும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கோரளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தா.உதயஜீவதாஸ், பிரதேச சபையின் உறுப்பினர் நடராஜா, வித்தியாலத்தின் அதிபர் சு.தியாகராஜா, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களான வை.பஞ்சலிங்கம், பிரபா, கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# வியாபாரிகள் அகற்றப்பட்டனர்

### நுவரெலியா மாநகர முதல்வர் கூறுகிறார்

நுவரெலியா,மார்ச் 24

நுவரெலியா நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட அனைவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நுவரெலியா மாநகர சபையின் வருமான வரி பகுதியினரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாநகர முதல்வர் டீஜி. மகிந்தகுமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

இதற்கமைய, நுவரெ லியா நகர அலங்கார வேலைத்திட்டத்தின் கீழ் சட்டவிரோத மாக வியாபாரத்தில் ஈடுபட்டவர்த்தகர்கள் அனைவரும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக நடை பாதை வியாபாரிகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளனர். இதன் காரணமாக நடை பாதையை பயன்படுத்தும் பாதசாரிகள் சிரமத்துக்குள்ளாகி வந்தனர்.

அதேவேளை நுவரெலியா நகர வர்த்தகர்களும் வர்த்தக சங்கங்களும் இது தொடர்பாக எனது கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

வெளியூர், உள்ளூர் உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், நடைபாதைகளில் வியாபாரம் செய்வது சன நெரிசலை ஏற்படுத்துவதோடு திருடர்கள் தமது கைவரிசைகளையும் காட்ட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

நுவரெலியாவுக்கு வரும் உல்லாசப் பயணிகள் எந்த வித சிரமங்களுமின்றி நடைபாதையை பாவிக்கும் முகமாகவுமே இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது-என்றார்.

இதேவேளை நுவரெலிய நகர வர்த்தக சங்கத் தலைவர் டக்ளஸ் நாணயக்காரவுக்கு சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர் அச்சுறுத்தல் விடுத்ததாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கொழுந்து பறிக்கும் உத்தியோகத்தர்கள்



கண்டி,மார்ச் 24

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திப்பெற்று இலங்கை நிர்வாக சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான களப்பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கை நாவலப்பிட்டி 'கிறீன்வூட்' தோட்டத்தில் இடம்பெற்றது.

கண்டி மாவட்டச் செயலரின் தலைமையின் கீழ் இந்த நியமனத்தைப்பெற்ற 36 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன்போது, எவ்வாறு கொழுந்து பறித்தல் நடவடிக்கையில் ஈடுப்பட வேண்டும் என்பது பற்றிய அறிவுறுத்தல்கள் இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. இதேவேளை, தேயிலைத் தொழில்துறை பற்றிய பல்வேறு தகவல்களும் வழங்கப்பட்டன.

இந்தப்பயிற்சியில் கிழக்கு, தென்பகுதிகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர். (ச)

## அபிவிருத்திச் சங்கத் தலைவர் நியமனம்

மூதூர், மார்ச் 24

திருகோணமலை பொதுவைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தலைவராக பி.உதயசங்கர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் ஹுசேன்டின், தலைவர் பதவிக்கான நியமனக் கடிதத்தை உதயசங்கரிடம் உத்தியோக பூர்வமாக்க் கையளித்தார்.

## சாஹித்திய கலாசார விழா

அம்பாறை,மார்ச் 24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் சாஹித்திய கலாசார விழா அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக சாஹித்திய கலாசார பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் சாஹித்திய கலாசார பேரவையின் பிரதித் தலைவர் கலாபூஷணம் மாறன் யூ.செயின், கணக்காளர் ஏ.எல்.மஹ்றுப், பதிவாளர் சீ.எம்.எம். சத்தார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச)

## பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம்

மொனராகலை,மார்ச் 24

மொனராகலை மாவட்டத்தில் 343 பட்டதாரிகளுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தொழில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பட்டதாரிகளுக்கு மொனராகலை மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஏ.பத்திநாதன் தலைமையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 'ஒரு கிராமத்துக்கு ஒரு வேலை' பணிகளில் இவர்களை ஈடுபடுத்துமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளதாக மொனராகலை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.


## இசைச்சங்கமம்-2012



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி நிகழ்வு 2012.03.24 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.05.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற உள்ளது. இந்நிகழ்வு இசை இரசிகப் பெருமக்களுக்கும், இசைபயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் மிக்கப் பயனுடையதாகும்.

கர்நாடகம், ஹிந்துஸ்தான், கிராமியஇசை, தமிழிசை என பல்வேறு இசைகளின் சங்கமமாக இந் நிகழ்வு அமையவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு வடமாகாண கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்கள் பிரதம விருந்தி னராக கலந்து கொள்வார். கலைஞர்கள் மற்றும் இசை இரசிகப் பெருமக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கேட்டுக் கொள்கின்றது.

விழாக்குழுவினர்

(C/9900)(6-9-8)



## மணமகள் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பம் சிறந்த குடும்ப பின்னணியைக் கொண்ட சொந்தமாக பிரசித்தி பெற்ற சிறு நிறுவன உரிமையாளர் வயது 51 விவா கரத்து பெற்றவர். (பிள்ளைகள் இல்லை). இளமையான தோற்றம் கொண்ட 8 இல் செவ்வாய் நட்பு பெற்றது. இவ ருக்கு அதே உயர் கௌரவ குடும் பத்தில் வாழ்க்கைத் துணை (மணமகள்) தேவை. குறிப்பு: தொலைபேசி மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மே/பா உதயன்
விளம்பர இல:4341
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## சேவைநலன் பாராட்டு



திருமதி நவநீதம்-ஜெகதீசன்



திருமதி ருக்மணி-ஆனந்தவேல்

அன்னையர் இருவர் தம் நலம் பேணாது பிறர் நலம் நாடியிங்கு
நற்பணி ஆற்றி மகளிர் தம் துயர்தனை துடைத்திட அயராது
உழைத்து அரும்பணி புரிந்திட சமூக அபிவிருத்தி மன்றத்தின்
தூண்களாக பல்லாண்டு காலம் பாங்குடன் பணி தந்த நவநீதம்,
ருக்மணி அம்மையரே நீவீர் பல்லாண்டு, பல்லாண்டு,
பல்லாயிரம் ஆண்டு பணி தந்திட இறையாசி வேண்டி பாங்குடனே,
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மன்றத்தில் இன்று (24.03.2012) நடைபெறும் மகளிர் தின விழாவில் கௌரவிக்கப்படும் திருமதி நவநீதம்-ஜெகதீசன், திருமதி ருக்மணி-ஆனந்தவேல் ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

பணியாளர் நலன்புரி சங்கம்
சமூக அபிவிருத்தி மன்றம்.

(C/110) (6,9,10)





சிவமயம்
கரைச்சி புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர
பொங்கல் (05.04.2012)
விழாவின் போது வாணிபம்
மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான



## நில ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நிலஏலவிற்பனை நாளை (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

(C/9116))(6-7-8)



## விற்பனைக்கு உண்டு

NP QU 7648 இலக்கமுடைய 4 Stroke ஓட்டோ விற்பனைக்குண்டு. (விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்).

தொடர்பு:
0773179618
0750438962.

(15976) (6,9,10)



## வீடு வாடகைக்கு

இல.10 அம்மன் வீதி, கந்தர் மடத்தில் 4 படுக்கை அறைகள், **Attach Bath room** என்பவற்றுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், நிறுவன ஊழியர்களுக்கு மட்டும்.

தொடர்பு : 077 8574315





## சமுர்த்தி தேசியரீதியில் முதலிடம்

அன்ரனி ஜீசஸ் றொக்கின்சன்
(புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையால் கெக்குழு சிறுவர் கழகங்களுக்கிடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட அறிவிப்பாளர் போட்டியில் முதலாம் இடம்பெற்ற யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் சமுர்த்தி மகா சங்கத்தின் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் பாஷையூர் பிரிவைச் சேர்ந்த சிறுவர் கழகத்தின் உறுப்பினரான அன்ரனி ஜீசஸ் றொக்கின்சன் (புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) என்பவரை மனதாரப் பாராட்டுகின்றோம். பிரதேச செயலர் சமுர்த்தி உத்தியோகத்தர்,

சமூக அபிவிருத்தி மன்றம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(15692)(2-6-9)



ஜெனீவாவின் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த புதன்கிழமை திருகோணமலை, மொறவெள பிரதேச சபை உறுப்பினர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

# மட்டு. மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகள் வேறுபடுத்திக்காட்ட பெயர்ப் பலகைகள்

## பொலிஸாரின் ஆலோசனை கவனத்துக்கு

மட்டக்களப்பு,மார்ச் 24

மட்டக்களப்பு மாநகர சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளடங்கும் வீதிகளைப் பெயர்ப்பலகைகள் மூலம் வேறுபடுத்திக் குறித்துக் காட்ட வேண்டும் என்று பொலிஸார் மாநகர முதல்வர் திருமதி சிவகீத்தா பிரபாகரனிடம் கேட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாநகரசபை முதல்வரின் அலுவலகத்தில் பொலிஸாருக்கும் மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர், ஆணையாளர், மற்றும் கணக்காளர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் பொலிஸாரால் மாநகர முதல்வரின் கவனத்துக்கு முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் பல வீதிகள் மாநகர சபையின் பராமரிப்பிலும் சில வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பின் கீழும் வருகின்றன.

வீதிப்பராமரிப்பு விடயத்திலுள்ள பொறுப்புக் கூறல்களில் பல சிக்கல்கள் தோன்றுவதால் பொலிஸார் அறிந்து கொள்ளும் பொருட்டு மாநகரசபையின் பராமரிப்பிலுள்ள வீதிகளை அறிவித்தல் பலகைகளின் மூலம் வேறுபடுத்திக் காட்டுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர், ஆணையாளர், கணக்காளர் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொண்டு 'இது மாநகர சபையின் பராமரிப்பிலுள்ள வீதி' எனப் பெயர்ப் பலகை களைத் தொங்கவிட நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர். (ச)

# சோலைவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை

## கல்முனை மாநகரசபை புதிய திட்டம்

அம்பாறை, மார்ச் 24

கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள வரியிறுப்பாளர்களிடமிருந்து மாநகர சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய சோலைவரி நிலுவைகளை அறவீடு செய்யவும், கிரமமாக சோலை வரியைச் செலுத்துவது தொடர்பில் பொதுமக்களை விழிப்பூட்டவும் என நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

கல்முனை மாநகர சபையால் மக்களுக்கான சேவைகள் தொடர்பில் பல முன்மாதிரியான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக மாநகர சபைக்கு வரியிறுப்பாளர்களான பொதுமக்களிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய சோலைவரி நிலுவைகளை அறவீடு செய்யவும், சோலைவரி செலுத்துதல் தொடர்பாக வரியிறுப்பாளர்களை விழிப்பூட்டவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

நீண்ட காலமாகச் சோலை வரி நிலுவைகள் வரியிறுப்பாளர்களிடமிருந்து பெருந்தொகையில் மாநகர சபைக்கு செலுத்தப்படாமலிருக்கும் நிலைமையை முதல்வர் சிராஸ் மீராசாகிப் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் இதுவரை செலுத்தப்படவேண்டிய சோலைவரி இதன்மூலம் அறவீடு செய்யப்படவுள்ளதாகவும் தொடர்ந்தும் கிரமமாகச் சோலை வரியை வரியிறுப்பாளர்கள் செலுத்துவதற்கு விழிப்பூட்டப்பட விருப்பதாகவும் மாநகரசபை கணக்காளர் எல்.ரி. சாலிதீன் தெரிவித்தார்.

இந்த முன்மாதிரித் திட்டத்தின்படி மாநகர சபையின் சோலைவரி அறவீடு, விழிப்பூட்டல் தொடர்பான நடமாடும் சேவை நாளை ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. (ச-30)

# ஒரு கிராமத்துக்கு 10 லட்சம் ரூபாவில் அபிவிருத்தி

17 கிராம சேவகர் பிரிவுகளுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மட்டக்களப்பு, மார்ச் 24

ஒரு கிராமத்துக்கு பத்து லட்ச ரூபாய் பெறுமதியான அபிவிருத்தி வேலைத் திட்டம் நேற்று வெள்ளிக் கிழமை காலை ஏறாவூர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏறாவூர் நகர சபை தலைவர் அலிஸாஹிர் மௌலானா இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 17 கிராம சேவகர் பிரிவுகளுக்குமான அபிவிருத்தி வேலைத்திட்டத் திட்டங்கள் இதன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச)

# 300அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ பயணித்த மூவரும் படுகாயம்

பதுளை, மார்ச் 24

மீகஹகியுல பிரதேசத்திலிருந்து பதுளையை நோக்கி வந்துகொண்டிருந்த ஓட்டோ ஒன்று துங்ஹிந்த பிரதேசத் தில் வீதியைவிட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் அதில் பயணித்த 3 பேர் படுகாய மடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மீகஹகி யுல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே விபத்திற்குள்ளாகினர் என்று பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


உடுவில் பிரதேச 'செயலக' மகளிர் தின விழாவில், 'ஜனாதிபதியினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட'

அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களை


கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்

தினைப் பொழுதும் சேவையினைச் சிரமேற்கொண்டு
திறமையினை நாள்தோறும் வளர்த்துக்கொண்டு
வினைத் திறனோ டரசாங்க அதிபராக
விளங்குகின்ற இமெல்டா சுகுமாரம்மா
அனைத்துலக மகளிர்தின வைபவத்தில்
அதியுயர்ந்த விருதுபெற்று இலங்கைத்தீவின்
முனைப்புமிகு பெண்ணாகத் திகழுகின்ற
முத்தார மாமணியே சிறந்து வாழி!

ஈழமணித் திருநாட்டின் சிகரமாக
இலங்குமெழில் யாழ்ப்பாண மாவட்டத்தை
ஆளவந்தீர் அரசாங்க அதிபராக
அறிவாற்றல் அனுபவத்தால் உயர்வுகண்டு
வாழ வழி காட்டிநின்றீர் இமெல்டா அம்மா
வனிதையரில் சிறந்தபெண் மணியெனவே
ஆளுமையால் சௌபாக்கிய வதியென்கின்ற
அதியுயர்ந்த விருதுபெற்றீர் சிறந்து வாழி!

பண்பாட்டை வளர்த்திடவே பாடுபட்டுப்
பட்டறைகள் பலவைத்து அறிவையூட்டி
தன்பாட்டில் வாழாது பிறருக்காக
தக்கபணி செய்கின்றீர் இமெல்டா அம்மா
இந்நாட்டில் எட்டிலொரு பெண்மணியாய்
ஏற்றமுறு விருதுபெற்று நிர்வாகத்தில்
விண்தொட்டு நிற்கின்றீர் நீங்களின்னும்
வியக்கவைக்கும் விருதுபெற வாழ்த்துகின்றோம்!

மாதர்குல மாணிக்கம் எனவிளங்கும்
மதிப்பார்ந்த அரசதிபர் இமெல்டா அம்மா
தீதகலப் பணிசெய்து இலங்கைத்தீவில்
சிறந்தபெண் திலகமெனத் தெரிவுபெற்று
மேதகு மகிந்தராஜ பக்ஷ கையால்
மேன்மையுறச் சௌபாக்கிய வதியென்கின்ற
சாதனைப்பெண் விருதுபெற்றுச் சரித்திரத்தில்
தடம்பதித்தீர் நீடூழி காலம் வாழி!


(ஜ/114) (2-6-9)

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும், உடுவில் பிரதேச செயலகம்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தெல்லிப்பளை-பன்னாலை வல்லு வத்தை ஸ்ரீகந்தஞான வைரவர் ஆலயத்தின் புனருத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் மாலை 6 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-13)

* * *

தெல்லிப்பளை ஸ்ரீ நாச்சிமார் அம்பிகை ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-13)

* * *

இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோயில் வருடாந்தத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 3 ஆம் திகதி சப் பறத் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும், 27 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

கீரிமலை நகுலேஸ்வர ஆலய மண்டலாபிசேக பூர்த்தி நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ளது. (வ)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடமராட்சி வியாபாரிமூலை வடிவத்தை ஸ்ரீகாளி அம்பாள் நூதன ஆலய பஞ்சகுண்ட பஷ மகாகும்பாபிஷேக பெருஞ்சாத்திப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை திரிதியை திதியும், அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.12 மணிமுதல் 10.12 வரையுள்ள இடப இலக்கின சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கிரியைகள், விநாயக வழிபாடு என்பன நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் 4 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (வ-78)

* * *

மானிப்பாய் மேற்கு, கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் நடை பெறவுள்ளது. அடுத்த மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் வீர சங்கிலியன் மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி டபிள்யூ. பி.ஆர். சில்வாவும், சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் திரு.எஸ். முரளிதரனும், முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் சற்.தாயூடீன், வட மாகாண அபிவிருத்திப் பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் எ.எவ்.எம் ராவி ஆகியோரும், கலந்துகொள்வர். (ந)

## ‘துன்பங்களே வாழ்விற்கான பாதையாகும்’

தவக்காலச் சிந்தனை

இன்று வாழ்க்கை ஒரு போராடும் போர்க்களமாக மாறிவிட்டது. ஒளிக்கு எதிராக இருளும், உண்மைக்கு எதிராகப் பொய்மையும், நீதிக்கு எதிராக அநீதியும் போர் புரிகின்றன. இப்படி ஒன்றுக்கு ஒன்று எதிராக இருப்பினும் இறுதியாக வெல்வது கடவுளே. உண்மைகள் உறங்குவதில்லை என்று கூறுவார்கள். நியூட்டனின் இயக்கவிதி ''ஒவ்வொரு விசைக்கும் நேர் எதிர்திசை உண்டு'' என்று கூறுகின்றது. அதுபோல ஒவ்வொரு துன்பத்துக்கான இன்பமும், தீமைக்கான நன்மையும் இருப்பது உறுதி. கடலின் ஆழத்தில்தான் முத்துக்கள் உள்ளன. முத்தெடுப்பவன் கடலில் மூழ்கி மூச்சை அடக்கி எத்தனையோ இடர்களுக்கு ஆளாகின்றான். நீரில் மூழ்கியவன் மூழ்கியே போவதும் உண்டு. இத்ததுணை துன்பங்களைக் கடந்து முத்தெடுத்து வெளிவந்தவனின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி முத்துக்கள். பத்துமாதம் கருவில் தாங்கி பேறுகால வேதனை அனுபவித்து குழந்தையை பெற்றெடுக்கும் தாயின் மனத்தில் எத்தனை மலர்ச்சி. ஆகவே துன்பப் பாதையில் தான் வெற்றியின் கற்கள் சரிகின்றன. எனவே வாழ்க்கையில் துன்பம் அடிப்படை ஒன்றாகின்றது. அதை நாம் தடுக்கவோ, தட்டிக்கழிக்கவோ முடியாது. யேசுவின் வாழ்வு துன்பப்பாதையே! துன்பம் நம்மை சிந்திக்க வைக்கும் ஆசிரியர் என்பதை சிலர் நோயாலும் சிலர் தோல்வியாலும் அறிவர். சிறுதுன்பமாய் இருந்தாலும் நமக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்காமல் போவதில்லை. இயேசு கற்றுத்தந்த கல்வாரிப் பாடங்களே வாழ்வுக்கு நம்பிக்கை அளிக்கின்றன. உலகம் உன்னோடு சிரிக்கும், அழ மறுக்கும் அதை நம்பாதே. உன்னைச் சிந்திக்க வைக்கும் துன்பம் இதை நம்பு. இரவும் பகலும் மாறிமாறி வருவதுபோல இன்பமும் துன்பமும் மாறி வருவதே வாழ்க்கை. துன்பத்தைக் கண்டு துவண்டுவிட்டால் இயேசுவின் பாதையில் பாதம் பதித்து நாம் பயணிக்கமுடியாது. உலகமும் மாயை, துன்பமும் மாயை. கருமவினையின் பயனாய்த் துன்பம் வந்தே தீரும். கருமத்தை வென்றால் உறுதியாக மெய்ப்பொருளை அடையலாம் என இந்துமதம் கூறுகின்றது. ஆசையே துன்பத்துக்குக் காரணம் எனப் புத்தமதம் போதிக்கிறது. துன்பமே வாழ்வுக்கான பாதை என இயேசு பெருமான் வழிகாட்டி நின்றார். துன்பத்திலும் உறுதியோடு வாழ இயேசுவின் சிலுவைப்பாதை வழி சமைக்கின்றது. கடவுள் நம்பிக்கையை உறுதிப்படுத்தி புதுப்பிப்பதும், புடமிடுவதும் துன்பங்களேயன்றி வேறெதுவுமல்ல. துன்பங்களும் துயரங்களும் மனித இயல்பில் ஏற்றுக்கொள்ள முடியாத, கடினமான சவாலாக இருக்கின்றன.

வாழ்வில் வரும் சிலுவைகளை, சுமைகளை எதிர் கொள்ளும்போதே வாழ்கின்றோம்; வலிமை பெறுகின்றோம். துன்பங்களை எதிர்கொள்ள முடியாது ஒதுங்குவதால் எதையுமே சாதிக்கபோவதில்லை. தடை தாண்டாமல் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றமுடியாது. அத்தகைய கல்வாரிப்பாடமே யேசு பெருமான் சிலுவை வழி கற்றுத்தரும் பாடமாகும். இதுவே வாழ்வுக்கான வாயிலாகும். தவக்காலமானது தினம்தோறும் சிலுவைகளைச் சுமந்து இயேசுவின் பாதையில் நடக்க அழைக்கின்றது. கல்வாரிப்பாதை ஒவ்வொரு மனிதனதும் விடிவுக்கான பாதையாகும்.

அருட் கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி
விரிவுரையாளர்

விடை பெறும் நாயகனை உள்ளம் உவந்து வாழ்த்துகின்றோம்

மக்கள் வறுமை நீங்க கோப்பாயில் வந்துதித்த
வங்கியாம் - இலங்கை வங்கி
அங்கே பாதுகாப்புக் கடமை மட்டுமல்ல
வாடிக்கையாளர் சேவையிலும்
அன்புடன் அனைவரையும் வரவேற்கும் - வடிவேல் அண்ணா
சீரிய நற் சேவை செய்யும் நல் உள்ளம்
காலத்தின் கட்டாயத்தில் ஓய்வினை நாடி இன்று
விடைபெறும் நாயகனே வாழி!

கோப்பாய் கிளையின்
அபிவிருத்திக் கிராமங்கள் நாங்கள்
வறுமை நீங்கி வாழ்வில் உயர
நம் கிராமம் தோறும் நாங்கள் தளிர் விட்டு ஜொலிக்க
ஆணி வேராய் இருந்த - வடிவேல் அண்ணா
எடுத்திடும் ஓய்வு வாழ்வை நிறைக்கவும்
எண்ணியதெல்லாம் சிறப்பாய் அமையவும்
மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம் வாழி!!

வங்கியின் நலனை சிந்தையில் ஏற்று
சிறப்புடன் செயற்படும் சீராளனே
இணையற்ற சேவையினை இனிதே செய்து
உள்ளத் திருப்தியுடன் விடைபெற்று செல்லும்
இனிய நற் சேவையாளனே - வடிவேல் அண்ணா
பல கிளை கண்டு நம் கிளையினை உயர்த்தி
உயர்வு கண்டு இன்று விடை பெறும் நாயகனே
நன்றியுடன் நற் சேவை பாராட்டி
வாழ்த்துகின்றோம் வாழி!!!
உள்ளம் நிறைந்த இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு.கதிரித்தம்பி வடிவேலுநாதன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர் இலங்கை வங்கி, கோப்பாய்)



வாழ்த்துவோர்:-

இலங்கை வங்கி கோப்பாய் கிளையின் அபிவிருத்தி கிராமங்கள்

01. கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் மகளிர் அபிவிருத்தி நிலையம்.
02. கோப்பாய் மத்தி பிள்ளையார் மகளிர் அபிவிருத்தி நிலையம்.
03. கோப்பாய் தெற்கு பழனி முருகன் அபிவிருத்தி நிலையம்.
04. கோப்பாய் தெற்கு புனித மரியாள் அபிவிருத்தி நிலையம்.
05. இருபாலை கிழக்கு இளந்தளிர் மகளிர் அபிவிருத்தி நிலையம்.
06. இருபாலை கிழக்கு இளம்பிறை மகளிர் அபிவிருத்தி நிலையம்.
07. நீர்வேலி வடக்கு அம்பிகை அபிவிருத்தி நிலையம்.
08. நீர்வேலி வடக்கு விநாயகர் அபிவிருத்தி நிலையம்.
09. கோப்பாய் வடக்கு சரஸ்வதி மகளிர் அபிவிருத்தி நிலையம்.
10. ஊரெழு கலைமகள் அபிவிருத்தி நிலையம்.
11. ஊரெழு அபிராமி அபிவிருத்தி நிலையம்.
12. நீர்வேலி தெற்கு வீரபத்திரர் அபிவிருத்தி நிலையம்.
13. நீர்வேலி தெற்கு விமலா அபிவிருத்தி நிலையம்.
14. உரும்பிராய் தெற்கு மாயவன் அபிவிருத்தி நிலையம்.
15. புத்தூர் கிழக்கு தயா அபிவிருத்தி நிலையம்.
16. நீர்வேலி மேற்கு திருமுருகன் அபிவிருத்தி நிலையம்.
17. கோப்பாய் வடக்கு கண்ணகி அபிவிருத்தி நிலையம்.
18. வாதரவத்தை விக்னேஸ்வரர் அபிவிருத்தி நிலையம்.
19. நீர்வேலி தெற்கு கணேசா அபிவிருத்தி நிலையம்.
20. கோப்பாய் மத்தி வள்ளி அபிவிருத்தி நிலையம்.
21. கோப்பாய் மத்தி முத்துமாரி அபிவிருத்தி நிலையம்.
22. கோப்பாய் மத்தி முருகன் அபிவிருத்தி நிலையம்.
23. கோப்பாய் தெற்கு செந்தமிழ் அபிவிருத்தி நிலையம்.

(15880) (2-6-9)

# ஈழத் தமிழருக்கான நீதியின் முதற்படியே ஐ.நா. தீர்மானம்

## தமிழக முதல்வர் வரவேற்பு



சென்னை, மார்ச் 24

இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றி கண்டிருப்பது அந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் நீதியின் முதல் படியாகும். சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்களின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியை இந்தியப் பிரதமருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமைக்கு முதல்வர் ஜெயலலிதா வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானமானது, சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்களின் உணர்வுப் பிரச்சினையாக பார்க்கப்பட்டது. இந்த விடயத்தில் இந்தியா எந்த ஒரு நிலைப்பாட்டையும் எடுக்காமல் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் 2009ஆம் ஆண்டில் நடைபெற்ற போரின் போது குற்றங்களைப் புரிந்தவர்கள் மீது ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளோடு இணைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தின் மீது முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது.

இந்திய அரசு துணை நிற்பதன் மூலம் ஐ.நா. தீர்மானம் தோற்கடிக்கப்படும் என இலங்கை கருதியது. இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு இரு முறை கடிதங்களை எழுதினேன். அமெரிக்க நாட்டின் தீர்மானத்துக்கு ஆதரவாக இருந்து, இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென வற்புறுத்தினேன்.

குடியரசுத் தலைவர் உரை மீது நடைபெற்ற விவாதத்துக்கு நாடாளுமன்றத்தில் பதிலளித்த பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கவில்லை எனவும், அப்படி வாக்களிப்பதற்கு விருப்பமுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில், அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்திய அரசு வாக்களித்திருப்பதற்கு வரவேற்பு தெரிவிக்கிறேன். - என்றுள்ளது. (த)

# தமிழீழம் அமைவதே தி.மு.கவின் குறிக்கோள்

## கருணாநிதி கூறுகிறார்



சென்னை, மார்ச் 24

தமிழீழம் அமைவது தான் திமுகவின் குறிக்கோள். அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவளித்த இந்தியாவின் செயல் பாராட்டுக்குரியது. இதற்கு நான் பிரதமருக்கு நன்றி கூறுகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்ததற்கு பிரதமர் மன்மோகன் சிங், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோருக்கு திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி நன்றி தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது,.. இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படும் அபாயத்தை தடுக்க வேண்டும். சகோதர யுத்தம் தான் தமிழீழம் அமைவதை கெடுத்துவிட்டது.

இலங்கை புரிந்த கொடுமைக்கு பரிகாரம் தேட ஐ.நா. தீர்மானம் வழிவகுக்கும். தீர்மானத்தால் உலகத்தின் முன் இலங்கை தலை குனிந்து விளக்கம் தர வேண்டியுள்ளது. தமிழருக்கு நடந்த கொடுமை தொடராமல் தடுக்க தீர்மானம் உதவும். தீர்மானத்தின் மீது எதிர்த்து வாக்களித்த நாடுகளுக்கு மனிதாபிமானத்தின் மீது நம்பிக்கை இல்லை - என்றார். (த)

# இலங்கை அரசுக்கு தொடர்ந்து நெருக்கடி

- டி.ராஜா

இலங்கையை தொடர்ந்து வலியுறுத்தினால் தான் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும்

சென்னை, மார்ச் 24

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா வரவேற்றுள்ளார்.

தீர்மானத்தை ஆதரித்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று டி.ராஜா தெரிவித்தார்.

எனினும் இதுதொடர்பாக இலங்கைக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுக்க வேண்டியது அவசியம். இலங்கையை தொடர்ந்து வலியுறுத்தினால் தான் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்றார் அவர். (த)

# காயம்பட்ட ஈழத்தமிழருக்கு ஆறுதல் அளிக்கும் தீர்மானம்

## பாராட்டுகிறார் திருமாவளவன்

சென்னை, மார்ச் 24

ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை அரசு மீதான தீர்மானம் 24 நாடுகளின் ஆதரவோடு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. காயம்பட்ட தமிழ்ச் சமூகத்திற்கு ஆறுதல் அளிப்பதாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. இது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்துள்ள முதற்கட்ட வெற்றி என்கின்ற அளவில் ஆறுதலடைகிறோம். வழக்கம்போல தமிழினத்திற்கு எதிரான நிலைப்பாட்டை இந்திய அரசு மேற்கொள்ளும் என்று அஞ்சியிருந்த நிலையில் அதற்கு மாறாக, இந்தியாவும் சிங்கள அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்திருப்பது வியப்புக்குரியதேயாகும்.



இவ்வாறு பாராட்டியிருக்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் திருமாவளவன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சிங்கள அரசின் ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் குற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டும்' என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இத்திருத்தம் இந்திய அரசின் முன்முயற்சியால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு இந்திய அரசு இத்தகைய திருத்தத்தைச் செய்திருக்குமேயானால், இந்திய அரசின் மீதான தமிழர்களின் நம்பிக்கையை மேலும் வலுவிழக்கச் செய்யும். போர்க் குற்றம் மற்றும் இனப்படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இத்தீர்மானம் வழிவகுக்குமா என்பது கேள்விக்குறியேயாகும்.

எனினும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஈழ மக்களின் பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் தலையீடு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவே தமிழினத்தின் முயற்சிகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும். - என்றார். (த)

# காப்பாற்ற முனையவேண்டாம்



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்துள்ள போதிலும், மனித உரிமை சபையில் இலங்கையைக் காப்பாற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு செய்துள்ளது. அவ்வாறான நடவடிக்கைகளில் இந்தியா இனி ஈடுபடக்கூடாது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் டாக்டர் ராமதாஸ்.

"இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமை ஆணையக அதிகாரிகள் இலங்கைக்கு செல்ல வேண்டுமானால், அந்நாட்டு அரசின் அனுமதியை பெற வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. இது தமிழர்களுக்கு நீதி கிடைப்பதைத் தடுக்கும் முயற்சியாகும். இத்தகைய முயற்சிகளை மத்திய அரசு கைவிடவேண்டும்" என்றார் ராமதாஸ்.

# ஈழத்தமிழர் தீர்வுக்கான வாசல் கதவு திறந்துவிட்டது

## வரவேற்கிறார் நெடுமாறன்

சென்னை, மார்ச் 24

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு வாசல்கதவினை திறந்துவிட்ட வெற்றியாக ஐ.நா. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தின் வெற்றி அமைகின்றது என்று உலகத் தமிழர் இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் தமிழ்மக்களுக்கு முழுமனநிறைவு அளிக்காத தீர்மானமாக இருந்தாலும் அந்த தீர்மானத்தை 24 நாடுகள் ஆதரவு தெரிவித்து வெற்றிபெற செய்தமை மூலம் தமிழ் மக்களுக்கு முதல்கட்ட வெற்றி கிடைத்திருக்கிறது.

ஐ.நா. சபையிலோ அல்லது அது சார்ந்த துணை அமைப்புக்களிலேயோ உள் நுழைந்து ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு வாசல் கதவினை திறந்துவிட்ட வெற்றி இது. தொடர்ந்து நாங்கள் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகள் இறுதி வெற்றி கிடைப்பதற்கு வழிவகுக்கும்.



அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து நின்று நடத்திய போராட்டத்தின் விளைவாக இந்திய அரசு தன்னுடைய நிலையினை மாற்றிக்கொண்டு தீர்மானத்தை ஆதரிக்க முன்வந்தது இன்னொரு பாரிய வெற்றியாகும்.

இந்தியாவின் போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றம் தொடர்ந்து நீடிக்கவேண்டும். அதனை 7கோடி தமிழ்மக்களின் ஒன்றுபட்ட போராட்டம் மூலமே சாதிக்கமுடியும். - என்றார். (த)

# சர்வதேச கண்காணிப்புக்கு ஆளாகியுள்ளது இலங்கை

## தீர்மானம் குறித்து விஜயகாந்த்

சென்னை, மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்திய அரசு வெளிப்படையாக இலங்கை அரசின் பக்கம் சாயாமல் ஆதரித்துள்ளது. இந்த தீர்மானம் நிறைவேறியதன் மூலம் இலங்கை அரசு உலக நாடுகளின் கண்டனத்திற்கு ஆளாகவில்லை என்றாலும், கண்காணிப்புக்கு ஆளாகியுள்ளது என்பது திருப்தி அளிக்கிறது. என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின்படி ஐ.நா. மனித உரிமைக் குழு எதைச்



செய்தாலும் அதை இலங்கை அரசு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று இருந்தது. ஆனால் இந்தியாவினுடைய திருத்தம் இலங்கை அரசின் சம்மதம் இன்றி ஐ.நா. மனித உரிமைக் குழு எதையும் செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவும் இந்தியாவை தன் பக்கம் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, இந்தியாவின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு, அப்படி திருத்தப்பட்ட தீர்மானம்தான் தற்பொழுது நிறைவேறியுள்ளது. - என்றுள்ளது.

# குற்றம் புரிந்தோர் தண்டனை பெறவேண்டும்

சென்னை, மார்ச் 24

குற்றம் இழைத்தோருக்கு தண்டனை நிச்சயம். அதனையே இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நிறைவேறிய பிரேரணை வெளிப்படுத்தியுள்ளது. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த இந்திய அரசுக்கு எமது நன்றிகள். இவ்வாறு தெரிவித்துள்ளார், மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன்.

"இலங்கையில் நடைபெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அளவிலான விசாரணை நடத்தப்படவேண்டும். போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி விரைவாக நடைபெற வேண்டும்". என்று அவர் கூறினார். (த)

# இலங்கைத் தமிழர்கள் மீதான இந்திய அக்கறை தெளிவானது

## ஞானதேசிகன் கூறுகிறார்

சென்னை, மார்ச் 24

இலங்கை தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ளது என்பதை இந்திய அரசு வெளிப்படுத்தியுள்ளது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார். அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை மனித உரிமை சபையில் இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தொடர்ந்து ஒரு நிலைப்பாட்டை எடுத்து வந்தது.

அதன் தொடர்ச்சியாக தமிழக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மத்திய அமைச்சர்களும் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து இதே கருத்தை வலியுறுத்தினர்.

ஆனால் இன்றைக்கு அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததன் மூலம் மத்திய அரசும், காங்கிரஸ் கட்சியும் இலங்கை அப்பாவித் தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

மேலும் மனித உரிமை மீறல்களை இந்தியா என்றும் ஆதரிக்காது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இந்தியாவின் இந்த முடிவுக்கு துணை நின்ற சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், தமிழக காங்கிரஸ் எம்பிக்கள், மத்திய அமைச்சர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் வாழும் 30லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு உரிமைகளையும், நல்ல வாழ்க்கை முறையையும், அரசியல் தீர்வையும் பெற்றுத் தர காங்கிரஸ் கட்சியும், மத்திய அரசும் தொடர்ந்து பாடுபடும் என உறுதியளிக்கிறேன். இவ்வாறு ஞானதேசிகன் கூறியுள்ளார்.




# திருவருள் மிகு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோயில்

# மண்டலாபிஷேக பூர்த்தியும் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும்

## சிறப்பு மலர் - 24-03-2012

## அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் கீரிமலை அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இன்று 24.03.2012 நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயிணைந்த சரித்திரப்பிரசித்தி வாய்ந்த இத்தலம் புனிதப்பிறவி எடுத்த மனித குலம் வணங்க வேண்டிய ஒன்றாகும்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவருட்கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடும் சிறப்புற எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின் றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்.

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



தனக்கே உரித்தான தனிச்சிறப்புக்களுடனும், சகல வளங்களுடனும் திகழும் ஈழமணித் திருநாட்டிற்கு எழிலூட்டும் வகையில் கடல் சூழ இலங்குகின்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகு லேஸ்வரம் எனும் புண்ணிய ஷேத்திரத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இன்று நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ் வழிபாட்டில் அனைவரும் ஈடுபட்டு மனித நேயத்தையும், மனித பண்புகளையும் வளர்த்துக் கொள்வதுடன், இன்று நடை பெறும் மண்டலாபிஷேக நிகழ்வின் மூலம் சிவனின் அருளால் நாடு அமைதிபெற்று அனைத்து மக்களும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானை வேண்டிக்கொள்கின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்

## குருக்களின் அருளாசியுரை

திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேரு
மிரு சிகரமாய் திகழுமீழத் துருப்
பெருமா முகமெனும் யாழ்ப்பாணம் தன்னில்
உத்தரத்திற் கீரிமலை உறைந்து நாளும்
விருப்பமரு நகுலேஸ்வரரருளைக் கொண்டு
மேவிய வங்கர் கோயில் விளங்குவாய்ந்த திருப்பணிகள்
செய்பவரும் செய்விப்போரும்
திரவியங்களீபவரும் சிறந்து வாழீ



''நமஸ்சம்பலேச மயோபவேச நமஸ்சங்காராயச நமஸ் சிவாயச''

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங்களுக்கு காரணமானவரும், கண்ட தீர்த்தம், தலம், மூர்த்தியும் ஒருங்கே அமையப் பெற்றதும், புராணகாலச் சிறப்புப் பெற்றதுமான, பஞ்ச ஈஸ்வங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெற்ற திவ்ய தலத்தில், நித்தியசன்னித்தியத்துடன் உறைந்திருக்கின்ற நகுலேஸ்வரப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும். கடந்த தை மாதம் 23 ஆம் நாள் (06.02.2012) திங்கட்கிழமை மிகச் சிறப்பாக ஜீர்ணோத்தாரண சுவர்ணபந்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து 48 நாள்கள் வெகு சிறப்பாக அபிஷேகம் நடைபெற்று, இறுதி நாளான இன்று 24.03.2012 சனிக்கிழமை மண்டலாபிஷேகம் நடைபெறுகின்றது. இன்றைய தினமே மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலரை வெளியிடுதலும் எம் பெருமானின் பேரருளாகும். இன்று நிகழும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவிலும் மஹா கும்பாபிஷேகமலர் வெளியீட்டு நிகழ்விலும் அணைவரும் பங்குபற்றி பேராதரவு நல்கி சிவனருள் பெற எல்லாம் வல்ல நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரனை வேண்டுகின்றேன்.

ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்

## சிறப்புற பிரார்த்திக்கின்றோம்



ஈழத்திருநாட்டின் வரலாற்றில் முதன்மை மிக்க தலமாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக் கோவில். இத்திருக் கோவில் மேன்மைக்கு இலக்கணமாக விளங்கும் கண்டகி தீர்த்தம், பாவ வினைகளைப் போக்கி மோட்சம் நல்கும் சிவசேஷ்த்திரம் எனப் பல பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இன்று 24.03.2012 நடைபெறும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வும் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துரையைச் சமர்ப்பிக்கிறேன். -செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்-

## மண்டலாபிஷேகம் சிறப்புற வாழ்த்து

வரலாற்றுப் பெருமைமிக்க கீரிமலை நகுலேஸ்வர சிவாலயத்தில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இன்று 24.03.2012 நடைபெறுகிறது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலமாகும். எங்கள் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் அடியவர்களுக்கும் சாந்தி சமாதானம் கிடைக்க எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி மண்ட லாபிஷேகம் சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

இ.ரா.இளங்கோவன் கௌரவ செயலாளர், ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

## இடர்களில் இருந்தும் விடுபட்டு உய்வோமாக



கடந்த 06.02.2012 வெகு சிறப்பாக நடந்தேறிய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இன்று மண்டலாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெரு மகிழ்வடைகின்றோம். எந்த ஒரு செயலிலும் அச்செயலின் விளைவாகக் காணப்பெறும் விளைவு அச்செயற்பாட்டின் தன்மையால் அறியமுயுமென்பது ஆன்றோர் வாக்கு. அதன்படி பூரண கும்பம் புறப்பட்டு வீதி வந்த போது வருணபகவான் நிருதி மூலை வரை பன்னீர் தெளித் தாற்போற் சிறுதுமி மழையைப் பெய்வித்து ஓதிய மந்திரங்கள், திருமுறைகள், திரவியாதி அவிப்பாகங்கள், அமுதாதி அவிப்பாகங்கள் போன்றவற்றை ஏற்றுக்கொண்டதைக் குறிப்பால் உணர்த்தி நின்றதானது கும்பாபிஷேக குருமார் செய்த செயற்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாகக் கும்பாபிஷேகத்துக்கு வருகை தந்திருந்த பிரதம சிவாச்சாரியார் திருமுறைக்கு உரிய இடத்தை வழங்கிச் சிறப்பித்தமையும் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஓதுவார் மூர்த்திகள் இருவரும் ஒவ்வொரு திருமுறையையும் ஓதும்போது இத்தனையாம் திருமுறையிலுள்ள இன்ன பாடல் இப்போது கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் திருச்செவிக்கு விண்ணப்பிக்கப்படுகின்றது என்று சொல்லிச் சொல்லிப் பாடியது செவிக்கும் கண்ணுக்கும் பூஜா விதிக்கும், உகந்ததாயிருந்தது கண் கூடு. கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவைக் கண்ணாரக் கண்டு உலகியல் வாழ்வின் துன்பங்களிலிருந்தும், இடர்களில் இருந்தும் விடுபட்டு உய்வோமாக.

- க.கு. க. சிவபாலன். அடியார்க்கு அமுதூட்டும் அன்னலா

மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு அனுசரணை: அகில இலங்கை இந்து மாமன்றம்
மலர் வெளியீடு பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்



**Sairam Hardware & Construction**
கே.கே.எஸ்.வீதி தெல்லிப்பழை.
தொ.பே 0777807373
அம்பனை சந்தி , பன்னாலை.
தொ.பே 0772226241
கட்டடப்பொருள்கள் மின்சாரப் பொருள்கள்
பெயின்ற் வகைகள் குளியலறைப் பொருள்கள்
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனையும்
கட்டுமானங்களும்

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972, Fax : 021 222 8869
சாரங்கா நாணயமாற்று சேவை
151/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972

மின்சாரப்பொருள்கள் இலத்திரனியல்
பொருள்களை நியாயமாகவும்
தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
**சுந்தர்சன்**
யாழ்.வீதி, மானிப்பாய்.
TP: 021225 5136, Fax 021225 5136

TV, DVD Player, Amplifier,
Speaker Box மற்றும் சகலவிதமான
இலத்திரனியல்பொருள்களும்
உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு
**JAYAM ELECTRONICS**
339, K.K.S.Road, Jaffna. T.P: 0774041910

**ரமணன்**
கட்டடப் பொருள் விற்பனை
நிலையம்
84, ஐயனார் கோயிலடி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4923417, 021 222 9296

**அண்ணா கோப்பி**
துரை வீதி, இணுவில்
அண்ணா நிறுவனத்தின் புதியதோர்
உற்பத்தி அண்ணா நூடில்ஸ். உடனடித்
தாயாரிப்பு. உண்ணச் சுவையான உணவு.
அண்ணா உற்பத்தி விற்பனை
நிலையங்கள் எல்லா இடங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்

**பட்டாபி படமாடம்**
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4351

Local Call, Net IDD Calls,
Net Browsing, Photocopy, DVD Writting,
DVD Movies,
Mobile Phone Sales& Parts.
**PSB Communication**
337 (555), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 7477 Fx: 021 222 4501

**Seelan**
Aluminium Fitting
DOHA, DUBAI இல்
10 வருட அனுபவமுள்ளவர்
No: 54, K.K.S Road, Kokuvil Junction.
Tel: 021 4902561, 077 8050918

**வஜிதா**
யமஹா சேவிஸ் ஒப்பந்தகாரரும்
மோட்டார் சைக்கிள் திருத்தகமும்
சேவிஸ் சென்ரரும்
300/1, நாவலர் வீதி,
ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் M.வசந்தன்
தொ.இல. 0778097741, 0215672219.

புடைவை அழகுசாதனப் பொருள்
விற்பனையாளர்
**கணேசன் சென்ரர்**
கே.கே.எஸ்.வீதி இணுவில்.
021 222 5708

**யாழகம்**
568, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5563
ESER Marketing
Clock Tower Road
Near Police Station, Jaffna

**அபிராமி சூ சென்ரர்**
155, 156, மொடேன் மாக்கற்
யாழ்ப்பாணம்.

**தர்சினி**
மரத்தளபாட இயந்திர தொழிற்சாலை
சகலவிதமான நுட்ப வேலைகளுக்குச்
சிறந்த இடம்
காளிகோயிலடி சங்கானை.
உரிமையாளர்: வ.திருநாவுக்கரசு

**அம்பாள் மரக்காலை**
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி, நல்லூர்,
யாழ்ப்பாணம். 021 4921012, 0777111147

**வேல்முருகன்**
வணிக நிலையம்
இல.56 A(378), இல.295 (21),
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9437

**கந்தன் ஸ்ரோர்ஸ்**
மெயின்வீதி, பண்டத்தரிப்பு.
021 300 2770
கே.கே.எஸ்.வீதி, மாவிட்டபுரம்.
0772658030

**Arul Global Express**
புது வருடத்தை முன்னிட்டு விசேட
கட்டணச் சலுகை 19.03.2012 தொடக்கம்
19.04.2012 வரை
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
International Courier Cargo Service
T.P: 021 222 6113

**இளவரசி சேலைச் சோலை**
125, மின்சார நிலைய வீதி,

**இ.ச.பே.நாகரத்தினம்**
சக நிறுவனம்
52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3096, 021 222 7286
57/47 களஞ்சிய அறை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**க.கு.கந்தையாபிள்ளை**
இல.318, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

**North And East Engineering**
Jaffna Road, Manipay.
Hot Line: 0777568685,
021 7200290

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்டு செலவுகளைச் செய்ய வேண்டிய நாள். உறவினர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்கலாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம். நீண்ட நாள்களாகத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த, ஒருவரை நேரில் சந்திக்க நேரிடலாம்.

**இடபம்:** வேலைப்பளு இருந்தாலும், எந்த வேலையையும் நிறுத்தி வைக்காமல் அனைத்தையும் செய்வீர்கள். பெண்கள் வழியில் பெருமைப் படும் உதவிகள் கிடைக்கலாம். எதிர்பாராத நல்ல சம்பவம் ஒன்று நடக்கலாம். உங்களுக்காக நண்பர்கள் சிலர், சில விடயங்களில் விட்டுக் கொடுக்கலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். ஆனந்தமான நாள்.

**மிதுனம்:** சில வேலைகளை நீண்ட நேரம் காத்திருந்து முடிக்கலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது காரியங்களைச் செய்து கொண்டிருப்பீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். போட்டி பந்தயங்களில் வெற்றி பெறலாம். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திப்பீர்கள். முதலீடுகள் விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

**கடகம்:** பிள்ளைகள், பெற்றோர் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். பிரபலமான கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள். உறவினர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்து பெருமைப்படுவீர்கள். நண்பர்களுடன் பார்ட்டி, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**சிங்கம்:** குடும்ப உறுப்பினர்களுடன் சிறு மனக்கசப்புகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். விரும்பிய ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். வாகனங்கள் திடீரெனப் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**கன்னி:** மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். பிரியமான உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லலாம். புதிய தொழில் ஒப்பந்தங்கள் எளிதில் கை கூடி வரும். தேக ஆரோக்கியம், தெம்பு, உற்சாகம் தரும். பிள்ளைகள், குடும்பத்தினரின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**நாளை**

பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை 25.03.2012
திதி: திருதியை சித்தம் பி.ப 02.08 வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப 05.36 வரை
சுபநேரம்: 09.15- 10.45 வரை
ராகு காலம்: 04.45- 06.15 வரை

**துலாம்:** நீண்ட நாள்களாக சாதிக்க நினைத்த ஒன்றை, இன்று சாதித்துக் காட்டுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** விஷமத்தனமாக சில வேலைகளைச் செய்து, சிலரின் அதிருப்திக்கு ஆள்படலாம். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்கள் சிலரிடம் உதவி கேட்க நேரிடலாம். உத்தியோகஸ்தர்கள் பணியில் அக்கறையில்லாமல், ஏனோதானோவென்று செயற்படலாம். பயணங்களின்போது சிரமம் நேரிடலாம். மனக்குழப்பம் கூடும்.

**தனுசு:** கடின முயற்சிக்குப் பின்னர் காரியங்களில் வெற்றி கிட்டும் நாள். சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில் நிமித்தம், பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேருவர். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த, உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். அலைச்சல் உண்டு.

**மகரம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி பெறும் நாள். சில காரியங்களில் எதிர்பார்த்தது நடக்கலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். அடுக்கடுக்காக பல வேலைகள் குவிந்தாலும், அசராமல் செய்து முடிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளுக்காக சிலருக்கு உதவி செய்வீர்கள். உங்களுக்குப் பிடித்தமானதை மற்றவர்கள் கொடுக்கலாம்.

**கும்பம்:** வெளியூர் பயணங்கள் செல்லத் திட்டமிடுவீர்கள். காலை நேரத்தில் கசப்பான அனுபவங்களையும், மாலை நேரத்தில் மனதுக்கு இனிய அனுபவங்களையும் எதிர்கொள்ளலாம். சகோதரர்கள் வழியில் தொல்லைகள் உண்டு. பணப் பற்றாக் குறையால், சில பொருள்களை கடனுக்கு வாங்க நேரிடலாம். உல்லாசமான செயற்பாட்டால் வம்பில் மாட்டலாம்.

**மீனம்:** தடை, தாமதங்கள் விலகி எதிலும் எதிர்பார்த்த வெற்றி காணும் நாள். விருந்தினர்கள் வருகையால் செலவுகளைச் சந்திக்கலாம். பண விடயங்களில், மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | | | 7 | | |
| | 4 | | 2 | | | 8 | 6 | 5 |
| | 7 | 6 | | 5 | | 4 | | 3 |
| | | | | 3 | 6 | | 8 | 1 |
| | | | 4 | | 7 | | | |
| 3 | 6 | | 8 | 1 | | | | |
| 4 | | 2 | | 8 | | 1 | 9 | |
| 6 | 9 | 7 | | | 3 | | 5 | |
| | | 5 | | | 9 | | | 4 |


## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 3 | 1 | 2 | 6 | 9 | 7 | 5 |
| 6 | 7 | 2 | 5 | 9 | 8 | 1 | 3 | 4 |
| 9 | 5 | 1 | 7 | 4 | 3 | 6 | 2 | 8 |
| 4 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 | 1 | 6 |
| 5 | 2 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 | 3 |
| 1 | 3 | 7 | 9 | 6 | 5 | 8 | 4 | 2 |
| 7 | 8 | 9 | 3 | 5 | 4 | 2 | 6 | 1 |
| 3 | 1 | 5 | 6 | 7 | 2 | 4 | 8 | 9 |
| 2 | 6 | 4 | 8 | 1 | 9 | 3 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல், அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## முத்துராசா விவேகானந்தன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் Holland நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா விவேகானந்தன் 20.03.2012 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துராசா-அருளம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற துரைச்சாமி-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் Holland இல் வசிப்பவர்களான விஜயராணியின் அன்புக் கணவரும், விஜயரூபன் (கண்ணா), ஜெயதர்சிகா, விஜயதர்சிகா (அபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாகரனின் மாமனும், சிவநாதன், சதானந்தன், நிற்குணானந்தன், சிவானந்தினி, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவத்திரை, செல்வராணி, தங்கேஸ்வரி, சிவராசா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் கண்மணி, மகேஸ்வரி, இராசமணி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற நடராசா வின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் (26.03.2012) திங்கட்கிழமை Holland இல் நடைபெறும். 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று நீர்வேலியிலுள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீர்வேலி வடக்கு. (15007) (6,9,10) குடும்பத்தினர்.

கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான
ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses
2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு
Duration 3months,4months
BatchI 24-03-2012
BatchII 25-03-2012
BatchIII 28-03-2012
BatchIV 30-03-2012
(Time:-9am or 3pm)
Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail.
புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.
அனைத்து பாடநெறிக்குமான கட்டணம் 1000/= மட்டுமே
Computer Express
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444
Diploma in Accounting Package
Acc Pac, Quick Book, MYOB, Tally
(Sat+Sun 11.00am)
Lecturer:Ashok

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
புத்தாண்டு சிறப்புக் கட்டணச்சலுகையுடன்
நம்பிக்கையும் 18 வருட கல்விச் சேவையும்
புதிய டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பம்
Advanced Diploma in Hardware & Networking
Tally financial Accounting Programme
Web Design & Development
Dip. in Computer Application
Advanced Java Programming
Adv. Diploma in Digital Pre-press
Diploma in Digital Video Production
சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி, பாடப்புத்தகங்கள் மற்றும் சாண்றிதழ்கள்
யாழ். நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677
நெல்லியடியில்
கொடிகாமம் வீதி,
T.P : 021-2262399
சாவகச்சேரியில்
280, கண்டி வீதி,
T.P : 021-2270267

# மனித உரிமை ஆர்வலரை அரசு பழிவாங்க கூடாது

## நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாதென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எச்சரித்துள்ளார்.



மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான பிரேரணை நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து இலங்கையில் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்களுக்கு எதிராக நெருக்கடிகள் தோன்றலாம் என்ற நிலையில் ஆணையாளர் இலங்கை அரசை இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அமெரிக்கப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கு கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கு சபையில் வைத்து முன்னொருபோதும் இல்லாத வகையில், மிரட்டல்கள், பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும், இதற்கு 71 அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கை அரசின் தூதுக்குழுவின் அங்கத்தவர்கள் உட்பட பலர் காரணமாக இருந்ததாகவும் நவநீதம்பிள்ளையை மேற்கோள் காட்டி அவரின் பேச்சாளர் றுப்பேட் கொல்வின் கூறினார்.

இவர்களுக்கு ஜெனீவாவை சூழவுள்ள பகுதிகளில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுக்குழுவினருக்கு அநாமதேய மிரட்டல் கடித மொன்று அனுப்பப்பட்டுள்ள தாகவும் அதை பொலிஸா ரும் ஐ.நா. பாதுகாப்பு சேவை யும் ஆராய்ந்து வருவதாக வும் தெரிவிக்கப்படுகின் றது. (10)

# இராஜேஸ்வரி சண்முகம் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மூத்த வானொலி அறிவிப்பாளர் இராஜேஸ்வரி சண்முகம் 72 ஆவது வயதில் யாழ்.போதனா வைத்தியசாலையில் காலமானார்.



35 வருடங்களுக்கு மேலாக இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றிய இவர் வானொலிக்குயில் என்று அழைக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றவர்.

தமிழ் வானொலி வரலாற்றில் இராஜேஸ்வரி சண்முகம் என்கிற இந்தப் பெயர் காலத்தால் அழியாதது.

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட இராஜேஸ்வரி சண்முகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பேசிப் பாராட்டைப் பெற்றவர்.

சிறந்த செய்தி வாசிப்பாளராகவும், நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் திகழ்ந்த இவர் இன்றைய இளையதலைமுறை ஒலிபரப்பாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொழும்பு திரும்புவதற்காக புறப்பட்ட வேளையில், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு காலமானார். (10-15)

# ஹெரோயினுடன் கைதான இருவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். புல்லுக்குளம் பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களிடமிருந்து சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் புல்லுக்குளம் பகுதியில் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சிவில் உடையில் சென்ற பொலிஸாரை இனங்கண்டு கொண்ட இருவரும் ஹெரோயினை வீசி விட்டுத்தப்பிச்செல்ல முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக் காலமாக தென்னிலங்கையிலிருந்து போதைப் பொருள் விற்பனை யாழ்ப்பாணத்துக்கு பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# பொதுசுகாதார பரிசோதகர்கள் சீருடைத் தவிர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாடு தழுவிய ரீதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சீருடைத் தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுத் தொடக்கம் முன்னெடுத்து வருகின்றனர்.

வடபகுதியிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளனர். சீருடை அணியாமல் நேற்று அவர்கள் தமது பணியை முன்னெடுத்தனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வலியுறுத்தும் நான்கு அம்சக் கோரிக்கைகளாக:

* சீருடைக்கான கொடுப்பனவுக்கு வருடாந்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.
* எரிபொருள் கொடுப்பனவு மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபாவாக உயர்த்தி வழங்கப்படவேண்டும்.
* பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆளணி வெற்றிடம் நிரப்பப்படும் போது 10 ஆயிரம் சனத் தொகைக்கு ஒருவர் என நியமிக்கப்படுவதை அமுல்படுத்த வேண்டும்.
* பயிற்சிக் காலத்தை அதிகரிக்க வேண்டும்.

என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

சீருடை அணிவதைத் தவிர்த்தும் சுகாதார அமைச்சுக்கு அனுப்ப வேண்டிய தினசரி அறிக்கைகளை அனுப்பாதும் இவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் சாதகமான பதில் கிடைக்காதுவிடின் பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தாய்ச் சங்க உறுப்பினர்கள் சுகாதார அமைச்சின் முன்னால் மறியல் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர் என யாழ். மாவட்ட சங்கத் தலைவர் க.சதீஸ் தெரிவித்துள்ளார்.

நான்கு அம்சக் கோரிக்கைளையும் நிறைவு செய்து தருமாறு கடந்த 3ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளருக்கு 21 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கைகள் கருத்தில் எடுக்கப்படாததை அடுத்துத் தாம் போராட்டத்தை முன்னேடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (10-3)

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்


சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்காக இலவச மருத்துவ சிகிச்சை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் பீ.ஐ.பீ. மகேந்திர அமரசூரிய லயன்ஸ் கழகமும் இணைந்து சிகிச்சை முகாமை நடத்தவுள்ளனர்.

கண், நீரிழிவு, பொது மருத்துவம் போன்றவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்படும்.

கண் பார்வையில் குறைபாடு காணப்படுபவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)



நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இராணுவ சாகசக் கண்காட்சியில் ஒரு காட்சி.

# இனி இங்கு வறுமையில்லை

## அடித்துக் கூறுகிறார் வவுனியா அரச அதிபர்



வவுனியா, மார்ச் 24

வவுனியா மாவட்டத்தில் அடுத்த ஆண்டில் வறுமைக்கோட்டுக்குக் கீழானவர்கள் என்ற வகுப்பில் ஒரு குடும்பத்தைக் கூட அடையாளம் காணமுடியாத அளவிற்கு மாற்றுவதே எமது நோக்கம். இதற்காக சர்வதேச, உள்ளூர் தொழிற்பேட்டைகளை உருவாக்கி இளைஞர், யுவதிகள் மட்டுமல்லாது தொழில் தகைமை உடைய எல்லோருக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எச்.எம்.சார்ள்ஸ்.

இலங்கையிலுள்ள மாவட்டங்களிலேயே வறுமை ஒழிப்பில் முதலாவதாகத் திகழ்வது வவுனியா மாவட்டம் என இலங்கை மத்திய வங்கி பட்டியலிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துக் கேட்டபோதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

### 25 மாவட்டங்களில் வவுனியா முதலிடம்

கடந்த ஆண்டில் வறுமை ஒழிப்பில் எமது மாவட்டம் 25 மாவட்டங்களில் முதலாவதாக உள்ளது என்ற மத்திய வங்கியின் அறிக்கை மகிழ்ச்சி தருகின்றது. இதற்காக போரின் பின்னரான மீள்குடியேற்ற நடவடிக்கைகள், ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகள், வெளியிலிருந்து கிடைத்த வாழ்வாதார உதவித் திட்டங்கள், வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சிறப்பு நிதி ஒதுக்கீடுகள் என்பவற்றின் மூலமான அபிவிருத்தி வேலைகள் முக்கியமாகத் திகழ்ந்துள்ளன.

### கைத்தொழில் வலயம்

ஓமந்தையில் 50 ஏக்கர் காணியில் கைத்தொழில் வலயம் ஒன்றை உருவாக்கி வருகின்றோம். இதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் தமது விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் முதலீடு செய்ய முடியும். இதற்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

இவை தவிர 2 ஆடைத் தொழிற்சாலைகள், ஒரு அலங்காரப் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை, ஒரு மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலை, சூரிய ஒளியிலான மின்சார உற்பத்தி மையம், கிளிசிறியாவிலிருந்து மின்சார உற்பத்தி போன்ற தொழிற்சாலைகள் சர்வதேச ஆதரவுடன் வவுனியா மாவட்டத்தில் உருவாக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பிலான நகர அபிவிருத்தித் திட்டமொன்று முன்மொழியப்பட்டு யுனொப்ஸ் நிறுவனம் அந்தத் திட்டத்தைத் தயாரித்து வருகின்றது.

தவிர உள்ளூரில் இதுவரை காலமும் நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது கைத்தொழில் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவை கிராமிய மட்டத்தில் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இதன் மூலம் கிராமியப் பசுமைப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த முடியும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி உற்பத்தி, பப்படத் தொழிற்சாலை உள்ளிட்ட பல்வேறு செயற்திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றன.

### பால் பதனிடும் தொழிற்சாலை

சாஸ்திரி கூளாங்குளத்தில் பால் பதனிடும் தொழிற்சாலை இன்னும் 2 வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவை தவிர இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்திலுள்ள அனேக குளங்கள் ஒருபோக நெற்செய்கையையே மேற்கொண்டு வந்தன. இதனை மாற்றி வருடத்தில் 3 போக நெற்செய்கை செய்யக்கூடிய அளவிற்கு மொறக்ஹந்த நீர்த்தேக்கத்திலிருந்து குளங்களுக்கு நீர் வருவிக்கப்படவுள்ளது.

எமது மாவட்டத்துக்கு இந்தியா, கனடா போன்ற நாடுகள் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றன.

இவ்வாறு மாவட்டத்தின் அனைத்துத் தேவைகளையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை அடையாளப்படுத்தி மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் எதிர்காலத்தில் வவுனியா மாவட்டம் ஒரு சர்வதேசக் கைத்தொழில் நகரமாக மாற்றியமைக்கப்படும் - என்றார். (10)

# வெற்றிக் கிண்ணம் கரவெட்டிக்கு



முதலாடமிடம் வென்ற கரவெட்டி பிரதேச செயலக அணி



இரண்டாமிடம் வென்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி

*வலி, வடக்கு, மார்ச் 24*

***வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ் மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசஅதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.***

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் எதிரணியினரின் கோல் பரப்பை மாறி மாறி ஆக்கிரமித்த போதிலும் இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புகளை தவறவிட்ட நிலையிலேயே காணப்பட்டனர்

இரு அணிகளும் கடும் உற்சாகத்துடன் மோதிக் கொண்டமை பார்வையாளர்களுக்கு விருந்தாக அமைந்தது. ஆனாலும் அதிக வாய்ப்புக்களை கரவெட்டி பிரதேச செயலகம் கொண்டு இருந்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்தவில்லை

இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

போட்டி நிறைவில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளை கரவெட்டிப் பிரதேச செயலக அணி உரிய முறையில் பயன்படுத்திக் கொண்ட நிலையில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3 :1 என்ற கோல்க் கணக்கில் சண்டிலி ப்பாய் பிரதேச செயலக அணியை வென்றது. (த-86)

## பல்கலை – றோயல் நாளை பலப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அரியாலை அபிவிருத்திச் சங்க லண்டன் கிளையின் ஆதரவுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை, லண்டன் தமிழர் ஆதரவு கழகத்தை சேர்ந்த செல்வரெட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறை யிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழக அணியை எதிர்த்து நெடியகாடு யுத் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-23)

## வவுனியா கல்வியியற் கல்லூரி விளையாட்டு விழா நாளை

வவுனியா, மார்ச் 24

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் 18 ஆவது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பீடாதிபதி க.பேர்ணாட் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராகக் கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலை களின் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.முரளி தரன், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் இசட்தா ஜீந்த வட மாகாணக் கல்வி அபிவிருத்திப் பிரிவின் செயற் திட்ட அதிகாரி எ.எப். எம்.ராபி, கல்வி அமைச்சின் முகாமைத்துவத் தர உறுதிப் பாட்டு அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23-402)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 24

கோண்டாவில் சிறி நரயணா சன சமூக நிலைய வைர விழாவை முன்னிட்டு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டு கழகம் நடத்திய தாச்சிப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணி மோத வுள்ளது.

இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக கட்டட ஒப்பந் தகாரர் எஸ். சிவலிங்கம் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ். பல்கலைக் கழகத்தின் விளையாட்டு அவையினால் நடாத்தப்படும் 9 ஆவது அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதல் நாள் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ் பல்கலைக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

ஆரம்ப நாள் ஆட்டத்துக் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக முன்னால் துடுப்பாட்ட வீரரும், யாழ் மாவட்ட செயலக அபிவிருத்தி உதவியாளருமான எஸ். ஹரிதாஸ் கலந்து கொண்டு ஆட்டத்தை ஆரம்பிக்கவுள்ளார். (த-23)

## இறுதிவரை விறுவிறுப்பு வென்றது யூனியன் அணி

வலி வடக்கு மார்ச் 24

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் இறுதி முடிவு பலத்த சிரமத்தின் மத்தியில் எட்டப்பட்டது. யூனியன் கல்லூரி சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இந்த வகையில் இரு அணிகளும் உற்சாகத்துடன் மோதிக் கொண்டன. பலத்த ஆரவாரத்தின் மத்தியில் களம் புகுந்த நிலையில் புள்ளிகள் பெறுவதில் போட்டி போட்டு மாறி மாறி புள்ளிகளைப் பெற்றமையால் தலா 13 புள்ளிகள் என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

> இரு அணிகளும் உற்சாகத்துடன் போட்டியின் இறுதி வரை சளைக்காமல் மோதின.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது பயிற்றுநர்களின் ஆலோசனைகளை பெற்று களமிறங்கின. இரண்டாம் பாதி ஆட்டமும் தலா 13 புள்ளிகள் என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க மேலதிக ஐந்து நிமிடங்கள் வழங்கப்பட்டன.இதிலும் முதல் இரண்டரை நிமிடத்தில் இரு அணிகளும் தலா 2 புள்ளிகளைப் பெற்று சம நிலையில் காணப்பட்டன.

அடுத்த இரண்டாம் ஆட்டத்தில் இரு அணிகளும் தலா இரு புள்ளிகளைப் பெற்ற நிலையில் போட்டி முடிவடைவதற்கு ஒரு சில செக்கன்களே இருக்க யூனியன் கல்லாரி ஒரு புள்ளியைப் பெற்றுக் கொண்டது. ஆனாலும் சளைக்காது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு புள்ளியைப் பெற முயன்ற வேளையில் போட்டி நேரம் முடிவடைந்தமையால் யூனியன் கல்லூரி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இரு அணிகளும் மாவட்ட மட்டத்தில் மோதும் வாய்ப்பை பெற்றுக் கொண்டன. (த-86)

## பெண்களுக்கான கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ் கல்வி வலய பாடசாலைகளுக்கடையிலான பெண்களுக்கான மென்பந்து கிரிக் கெட் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது. (த-23)

## கோப்பாய் சம்பியன்


கோப்பாய் நல்லூர் தீவக பிரதேசங்களுக்கு இடையிலான மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கோப் பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களை கொண்ட இறுதிப் போட்டியில் முதல் நேர் இரண்டு சுற்றுக்களையும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:17, 25:20 புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது. (த-86)

## யாழ். கல்வி வலய மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி ஏப்ரல் மாதம் 9 ஆம்,10 ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)



டுமினி

# தென்னாபிரிக்கா நிதான ஆரம்பம்

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றிவரும் தென்னாபிரிக்க அணி, நியூஸிலாந்துடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. மழை காரணமாக மதியபோசன இடைவேளைவரை ஆரம்பிக்காத இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இலக்கை ஆறாவது பந்து பரிமாற்றத்திலேயே இழந்தது.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித், டக் பிரேஸ்வெலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அந்த ஆட்டமிழப்பை கிரேம் ஸ்மித் நடுவர் மீள் பரிசீலனைத் திட்டத்தின் மூலம் பரிசீலனை செய்தபோது 'ஹொட் ஸ்பொட்' கமராக்கள் பந்து துடுப்பில் பட்டதாக காண்பிக்காத போதிலும் அவர் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது. எனினும் பந்து துடுப்பைத் தாண்டிச் செல்லும்போது பந்து துடுப்பில் பட்டிருக்கலாம் என்ற தோற்றத்தை அது ஏற்படுத்தியிருந்தது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அல்விரோ பீற்றர்சன், ஹசிம் அம்லா ஜோடி இரண்டாவது இலகுக்காக 93 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஹசிம் அம்லா 63 ஓட்டங்களுடன் கிலெஸ்பியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அல்விரோ பீற்றர்சன், ஜே.பி.டுமினி ஜோடி மேலதிக இலக்கு இழப்பின்றி தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது 2 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற உதவியது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் 44 ஓட்டங்களுடனும், ஜே.பி.டுமினி 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் காணப்பட்டனர். நேற்றைய நாளில் 42 பந்துபரிமாற்றங்கள் மாத்திரமே வீசப்பட்ட நிலையில் இழக்கப்பட்ட பந்துபரிமாற்றங்களை ஈடுசெய்வதற்காக இன்றைய தினம் போட்டி அரை மணித்தியாலம் முன்னதான ஆரம்பிக்கவுள்ளது. (5)

# 5 ஆம் இடத்தில் இலங்கை

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களுக்கான அணிகளின் புதிய தரப்படுத்தலுக்கு அமைய, இலங்கை அணி ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது.

முன்னர் அணிகளின் தரப்படுத்தலுக்கு அமைய 113 புள்ளிகளுடன் நான்காம் இடத்தை பெற்றிருந்தது. இருப்பினும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்குபற்றிய அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததை அடுத்து 110 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

தரப்படுத்தலில் தொடர்ந்தும் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ள அதே வேளை, தென்னாபிரிக்கா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. ஆசிய கிண்ணத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பங்களாதேஷ் அணி தரப்படுத்தலில் ஒன்பதாம் இடத்தைப் பெற்றுள்ளது. (5)

# முடிவை அவரே தீர்மானிக்கட்டும்

சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறும் முடிவை, சச்சின் தான் தீர்மானிப்பார், என்று தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.


சமீபத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய மண்ணில் நடந்த தொடர்களில் இந்திய அணி மோசமான தோல்வியை சந்தித்தது. இதனால் மூத்த வீரர்கள் விரைவில் ஓய்வை அறிவிக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் எதிர்ப்புகள் கிளம்பின. இதற்கேற்ப சமீபத்தில் அனுபவ வீரர் ராகுல் டிராவிட், டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்தார். இந்த நிலையில், ஆசிய கிண்ணத் தொடருக்கு தேர்வு செய்யப்பட்ட சச்சின், தனது 100 ஆவது சர்வதேச சதம் அடித்து சாதனை படைத்தார்.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் கூறியது: ஆசிய கிண்ணத் தொடரில் சச்சின், சதத்தில் சதம் அடித்து புதிய சாதனை படைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இவருக்கு எனது வாழ்த்துகள். இவர், எப்போது சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவார் என்ற கேள்வி எழுகிறது. இதுகுறித்து சச்சின் தான் முடிவு செய்ய வேண்டும். என்னால் ஒன்றும் கூற இயலாது.

இந்திய அணி, ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிக்கு முன்னேற முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. பொதுவாக விளையாட்டில் வெற்றி, தோல்வி என்பது சகஜமான ஒன்று. இதே இந்திய அணி தான், கடந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது. எனவே தோல்வி குறித்து அதிகம் சிந்திக்காமல், அடுத்து வரும் தொடர்கள் மீது அதிக கவனம் செலுத்தினால் நல்லது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் விராத் ஹோக்லி எழுச்சி கண்டிருப்பது வரவேற்கத்தக்கது. வரும் காலங்களில், இவரை போன்ற திறமையான இளம் வீரர்கள் நிறைய பேர் அணியில் இடம் பெறுவார்கள். சிறப்பாக செயல்பட்டு வரும் இவருக்கு அணித்தலைவர் பதவி கிடைக்கும் என்று உறுதியாக கூற முடியாது. ஒருவேளை கிடைத்தால் நல்ல விஷயம். இது அணி நிர்வாகத்தின் முடிவு - இவ்வாறு ஸ்ரீகாந்த் கூறினார். (5)

# விமர்சனங்கள் என்னை ஒன்றும் செய்துவிடாது



இந்திய அணிக்காக விளையாட முதல் நாளில் களம் காணும் போது என்ன ஆர்வம் இருந்ததோ, அதே ஆர்வத்துடன் தான் தற்போதும் நான் களம் காணுகிறேன் என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.விமர்சனங்கள் எனது ஆட்டத்தை பாதித்ததில்லை. அவை நான் என்ன செய்ய வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்ததில்லை. விமர்சனங்கள் மூலம் கேள்வி எழுப்பலாம்.

ஆனால் அந்தக் கேள்வியை எழுப்பியவர்களிடமே அதற்கான விடை இருக்காது. எனது கஷ்டங்கள் யாருக்கும் தெரியாது. அதேபோல் எனது எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை யாராலும் புரிந்து கொள்வது கடினமானதாகும்.


100ஆவது சதம் காண்பது மிகவும் கடினமாக அமைந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏன் கடினமாக இருந்தது என்பது எனக்கு தெரியவில்லை.

இதற்கு உலக அளவில் எல்லோரும் ஆர்வம் காட்டியது கூட காரணமாக இருக்கலாம். 100 ஆவது சதம் குறித்த பேச்சில் இருந்து என்னால் தப்பமுடியாத நிலை இருந்ததால் எனது ஆட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டது என்பது உண்மை தான்.

ஒருவேளை கடவுள் என்னை கடுமையாக சோதித்து இருக்கலாம். உலகக் கோப்பையை வென்றதும் நிலவிய மகிழ்ச்சியான தருணத்தில் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று இருக்கலாம் என்று பல நண்பர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

அப்போது நான் ஓய்வு பெற்று இருந்தால் வெற்றியில் இருந்து கவனம் எனது ஓய்வு பக்கம் திரும்பி இருக்கக்கூடும். நான் கிரிக்கெட்டை அனுபவித்து விளையாடி வருகிறேன். எனது மனதில் ஓய்வு குறித்த எண்ணம் எழவில்லை என்று கூறியுள்ளார்.

# பங்களாதேஷ் – பாகிஸ்தான் ஆட்டத்தில் இருந்து....



பாகிஸ்தான் அணி இரண்டாவது தடவையாக ஆசியக்கிண்ணத்தை வெற்றிபெற்றுள்ளது. இதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டு இலங்கை அணியைத் தோற்கடித்து முதலாவது கிண்ணத்தை வெற்றிகொண்டிருந்தது. அந்தத் தொடரும் பங்களாதேஷிலேயே இடம்பெற்றிருந்தது.

பாகிஸ்தான் பெற்றுக்கொண்ட 2 ஓட்ட வித்தியாசத்திலான வெற்றி ஆசியக்கிண்ணத் தொடரில் பெறப்பட்ட இறுக்கமான வெற்றியாக அமைந்தது. இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டு கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இலங்கை அணியை இந்தியா 4 ஓட்டங்களால் தோற்கடித்திருந்தது.

பங்களாதேஷ் - பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆசியக்கிண்ணப் ஆட்டங்கள் அனைத்திலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது. இதுவரை 11 ஆட்டங்களில் இரு அணிகளும் மோதியுள்ளன.

பங்களாதேஷ் அணி இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்ற இரண்டு ஒருநாள் போட்டிச் சுற்றுத் தொடர்களிலும் தோல்வியடைந்துள்ளது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணியின் தமிம் இக்பால் அரைச்சதமொன்றைப் பெற்றார். இந்தத் தொடரில் அவர் பங்குபற்றிய நான்கு ஆட்டங்களிலும் அவர் அரைச்சதம் பெற்றுள்ளார். பங்களாதேஷ் அணி சார்பாக நான்கு ஆட்டங்களில் தொடர்ச்சியாக அரைச்சதம் பெற்ற முதலாவது வீரராக தமிம் இக்பால் மாறினார். அத்தோடு ஆசியக் கிண்ணத் தொடரில் ஒரு வீரர் தொடர்ச்சியாக நான்கு அரைச்சதங்களைக் குவித்த முதலாவது சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது.

தொடர் முழுவதும் சிறப்பாகச் செயற்பட்ட பங்களாதேஷின் ஷகிப் அல் ஹசன் அரைச்சதம் பெற்றார். இது ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 25 ஆவது அரைச்சதம் ஆகும். 25 அரைச்சதங்கள் தவிர, 5 சதங்களையும் அவர் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் யுனிஸ் கான் கைப்பற்றிய பிடிகளோடு ஆசியக்கிண்ணத் தொடரில் 14 பிடிகளைக் கைப்பற்றியுள்ளார். இதுவரை ஆசியக்கிண்ணத் தொடரில் பிடிக்கப்பட்ட அதிக பிடிகள் என்ற சாதனை ஆகும். இலங்கையின் மஹேல ஜெயவர்த்தனவும் 14 பிடிகளைக் கைப்பற்றியுள்ளார்.

பாகிஸ்தானின் அப்ரிடி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். இது அவரது 29 ஆவது ஒருநாள் சர்வதேச ஆட்டநாயகன் விருது ஆகும். இது பாகிஸ்தான் சார்பான சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷின் சகிப் அல் ஹசன் தொடர் நாயகனாக தெரிவானார். இது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவர் பெறும் 5 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் நாயகன் விருது ஆகும். (5)

# எதிர்க்கின்றோம்

**இலங்கைக் கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர் டில்ஷான் மீது புதிதாக எழுப்பப்பட்டுள்ள கருத்துக்களை முழுமையாக எதிர்க்கிறது என இலங்கைக் கிரிக்கெட்சபை விடுத்துள்ள உத்தியோகபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



இங்கிலாந்தின் 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்ட செய்தி அறிக்கையில் சூதாட்டங்களுக்கு வீரர்களை உள்ளீர்ப்பதற்காக பொலிவூட் நடிகையான நிபுர் மேக்தா பயன்படுத்தப்படுகிறார் எனத் தெரிவித்தது.

இந்நிலையில், நிபுர் மேக்தா அளித்த பேட்டியில்; டில்ஷானை இங்கிலாந்தில் வைத்து 2009ஆம் ஆண்டு சந்தித்தார் என்றும், அவருடன் கேளிக்கை விடுதி களுக்குச் சென்றுவந்தார் என்றும் தெரிவித்திருந்தார்.

அச்செய்தி வெளியான 24 மணித்தியாலங்களுக்குள் இலங்கைக் கிரிக்கெட்சபை அச்செய்தியைக் கடுமையாக எதிர்த்து அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில் ''இலங்கை அணியின் தேசியக் கிரிக்கெட் வீரர் திலகரட்ண



டில்ஷானோடு சம்பந்தப்படுத்தப் பட்டு அண்மையில் வெளியாகிய ஊடக அறிக்கைகளை வாசித்திருக்கிறோம். டில்ஷான் இங்கிலாந்து அணிக்கெதிராக 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள முக்கியமான டெஸ்ட் தொடருக்குத் தன்னைத் தயார்படுத்திவரும் நிலையில், வெளியாகியுள்ள இச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி ஊடகங்கள் வெளியிட்டுள்ளமை குறித்து வருந்துகிறோம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்த நெருக்கடியான காலப்பகுதியில் டில்ஷானுக்கு ஆதரவாக இருப்பதோடு, குறித்த செய்தியில் வெளியிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் - கருத்துகளைக் கண்டிக்கிறோம். இச் செய்தியின் அடிப்படையற்ற தன்மை காரணமாக இது தொடர்பாக மேலதிகமாக எந்தக் கருத்துகளையும் இலங்கைக் கிரிக்கெட்சபை வெளிப்படுத்தாது'' என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

டில்ஷானின் மனைவி மஞ்சுளா தியிலினி;

''பிரபலமானவர்கள் அவதூறுகளுக்கு இலகுவான இலக்காக உள்ளனர்''. என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது-

''டில்ஷானுக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டு வருவது இதுதான் முதல் தடவையல்ல. இவ்வாறான அவதூறுகளுக்கு பிரபலமான வர்கள் இலகுவான இலக்காக உள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. ஒரு சமயம் நானும் இவ்வாறான அவதூறுக்கு முகம் கொடுத்தேன். இது சாதாரணமான விடயமே. நான் மறுப்பு விடுமளவுக்கு இதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை'' என்றார் மஞ்சுளா திலினி .

## இங்கிலாந்துக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு



இங்கிலாந்து அணிக்கெதிராக 26 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக் கப்பட்டுள்ளது. இந்த அணியில் பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட சாமர சில்வா இணைக்கப்பட்டிருக் கவில்லை. அத் தோடு, காயம் காரணமாக பாகிஸ் தானுக்கும், தென்னாபிரிக்காவுக் கும் எதிரான தொடர்களில் பங்குபற்றியிருக்காத விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்தன அணிக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு இலங்கையின் உள்ளூர்ப் போட்டி களில் அண்மைக் காலமாக மிகச்சிறப்பாகப் பிரகா சித்துவரும் சாமர சில்வாவுக்கு இந்தப் போட்டிக ளில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இறுதியாக சாமர சில்வா துடுப்பெடுத்தாடிய 12 இனிங்ஸ்களில் 142, 158, 63, 76, 0, 98, 57, 216, 64, 86, 108, 163 என்றவாறான ஓட்டங்களைப் பெற்றுள்ள போதிலும், அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

**இலங்கை அணி விவரம்:**

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்ஷான், தரங்க பரண விதான, லகிரு திரிமன்ன, குமார் சங்கக்கார, திலான் சமரவீர, தினேஷ் சந்திமால், அன்ஜலோ மத்தியூஸ், பிரசன்ன ஜெயவர்தன, சுரங்க லக்மால், தம்மிக்க பிரசாத், சானக வெலகெதர, சுராஜ் ரந்தீவ், ரங்கன ஹேரத்.


## தவறிவிட்டது

புகையிரத நிலைய வீதி, மல்லாகத்தை முகவரியாகக் கொண்ட ஸ்ரீதரன் ஆதித்தன் ஆகிய எனது இன்ஷுரன்ஸ், ரக்ஸ், லைசன்ஸ் ஆகிய ஆவணங்கள் மல்லாகம் சந்திக்கும் அருணோதய பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்புகளுக்கு
0777251060, 0773140842, 0773583942

## மனமார்ந்த நன்றிகள்

எமது குடும்பத் தலைவி

### திருமதி இரத்தினம் பஞ்சாபிகேசன்

அவர்கள் கடந்த 17.03.2012 அன்று இறையடி சேர்ந்த நேரம் தொடக்கம் 19.03.2012 நிகழ்ந்த இறுதிச்சடங்கு வரை எமக்கு அனைத்து உதவிகளும் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இன்று வரை எமது துயரில் பங்கெடுத்து நேரிலும் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கம் வீதி,
வித்துவான் சங்கத்தானை,
பஞ்சாபிகேசன்

நாதஸ்வர கலாநிதி
K.M.

## The Science corner

PHYSICS ➲ K.Selvan B.Sc(Hons)

**A/L-2014 mechanics**

| தமிழ் மொழி மூலம் | English Medium |
|---|---|
| Batch-I<br>சனி, ஞாயிறு<br>10.30-11.30am | Sun<br>Fri<br>(4.00-5.00) PM |
| Batch-II<br>செவ், புதன்<br>4.00-5.00PM | ஆரம்பம்-<br>27.03.2012 |

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 17, பிரப்பன் குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் 3 படுக்கை அறைகள், Attach Bath Room சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. குடும்பத்தவர்கள் விரும்பத்தக்கது.
உடன் தொடர்பு கொள்ளவும் :
0774322923, 0777718736

## கார் விற்பனை

Lancer 13Srixxxx MMC - Model (Alloy wheel, p/s) மிக நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. (என்ஜின் பெயின்ரிங் முழுமையாக சீர் செய்யப்பட்டது) விலை 450,000/=.
தொடர்பு : 0779056303

## கணினி மலிவு விற்பனை

**HP 3.0 FULL SET -24,750/=
FREE- WEBCAM / 4GB
PENDRIVE / HEAD PHONE**

ஒருவருட உத்தரவாதம்
LAPTOP, DIGITAL CAMERA, PHONE
அனைத்துவகையான பொருள்களும் எம்மால் திருத்திக்கொடுக்கப்படும்.

**ST. ANTONY'S.COM**
187, KKS ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0750698608

## சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு தளபாட விற்பனையில் விழுதுவிட்ட நாமம் கொண்டவர்கள்

## ஏசியன் தளபாட நிலையம்



வீடு, அலுவலகங்களுக்கு தேவையான மரத்திலான தளபாடங்கள்,
சோபா செற்றிகள், TV ஸ்ராண்ட்,
சோக்கேஸ், கட்டில்கள், மெத்தைகள், அலுமாரிகள்,
கணினி மேசைகள், றெசின்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள்,
மேசைகள் என்பன தரம்! மலிவு! அமோக தெரிவுக்கு
என்றும் ஏசியன் தளபாட நிலையம்

ஏசியன் தளபாட நிலையம் (பஸ்நிலைய அருகில்)
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி:
0773604101, 021 2227892

Nilkamal Pinex NIPPON DAMRO ARPICO Piyestra

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**சனி ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் 24.3.2012**

காலம் : 1 - 3 மாதம் பயிற்சிக்கட்டணம் : ரூபா 3000/-

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - காலை 8 - 9
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 10 - 11

**பாடசாலை மாணவர்களின் சனி, ஞாயிறு பிரிவு**

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - மாலை 1 - 2
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - மாலை 3 - 4

அனுமதி கட்டணம் : ரூபா 500/- மாதம் : ரூபா 500/- மட்டும்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முதலில் வருவோருக்கே அனுமதிக்கு முன்னுரிமை)

இன்று மட்டும் 24.03.2012 பயிற்சியில் சேரும் அனைவருக்கும்
Complete English Book (Spoken/Grammar) இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 5505

## வாழ்த்துகின்றோம்

காலத்தின் தேவையை உணர்ந்து, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக (S.S.P) பதவியேற்ற எனது மருமகன்

### ஸ்ரீ குகநேசன்

அவர்களை வாழ்த்துவதுடன் அவரது வாழ்வு சிறப்புற வதிரி உல்லியனொல்லை அம்பாளை வேண்டி நிற்கும்.

அன்பு மாமா
ப. ஈஸ்வரநாதன்
Director, Raveens English Medium Classes
Karaveddy.

## ViVekananda Academy

திருமணம் முடித்து மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான தூதரக பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்தும்;
ஜேர்மன் - Deutsch (டொச்)
நெதர்லாந்து - Dutch (டச்) மொழிகளுக்கான புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. மற்றும் French, Italian புதிய வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

*Vivekananda Academy*
*No. 221/1, Power House Road, Jaffna.*
*Tel: 021 222 0393, 021321 6928*


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தேசபக்தி
இல்லாதவனுக்கு
வேறு எதிலும்
பக்தி இருக்க
முடியாது.
- பைரன்



வார வசந்தம் 01

உதயன் | 24 மார்ச் 2012 சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு



# பேசும் ஆற்றலே பெரிய வெற்றி

**ஒரு மொழியில் நாம் நன்றாகப் பேச வேண்டும், கருத்துக்களை கவர்ச்சியாக எடுத்துச் சொல்ல திறமை பெற வேண்டும் என்கிற அடிப்படை ஆசை முதலில் மனதில் உருவாக வேண்டும்.**

வெற்றி பெற மனிதர்களுக்குத் தேவை தன்னம்பிக்கை. வெற்றி பெற நினைக்கும் மனிதர்கள், நல்ல மனித உறவுகளை உருவாக்குவதிலும், வளர்த்துக் கொள்வதிலும் திறமை மிக்கவர்களாக இருக்க வேண்டும். இப்படி வெற்றிக்குப் பலகாரணங்களையும் தேவைகளையும் பட்டியலிட்டுக் கொண்டே செல்லுகையில் கருத்துப் பரிமாறும் பேச்சுத்திறன் ஆற்றலையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடிப்படையில் எந்த மொழியில் உரையாட வேண்டுமோ, பேச வேண்டுமோ அந்த மொழியில் மொழியறிவை இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த மொழியில் உள்ள சொற்கள், அதன் பொருள், அதை உச்சரிக்கும் விதம், அதை வாக்கியத்தில் பயன்படுத்தும் முறை, இலக்கணம், அந்த மொழியில் ஓரளவு இலக்கிய அறிவு ஆகியவற்றை அவசியம் அறிந்து இருத்தல் வேண்டும்.

இன்றைக்கு பெரும்பான்மையான கல்லூரி மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்தி தேர்வில் வெற்றி பெறுவதையும், அதிக மதிப்பெண்கள் பெறுவதையும் மட்டும் கருத்தில் கொண்டு கருத்துப் பரிமாற்றத் தேவையான பேச்சுக்கலையில் மொழியறிவில் கோட்டை விடுகின்றார்கள்.அதிக அல்லது தேவையான மதிப்பெண்கள் இருந்தாலும் நேர்முகத் தேர்வுகளில் கேள்விகளுக்கு விடை தெரிந்திருந்தாலும் எடுத்துச் சொல்லும் ஏற்றம் பெறாததினால் தோல்வியைத் தழுவுகின்றார்கள்.

பொறியியல் கற்ற பட்டப்படிப்பாளர்களும், பட்டயப் படிப்பாளர்களும்,. இளம் வயது முதலே ஆங்கில வழிக்கல்வி பயின்றும் அழகாக ஆங்கிலத்தில் உரையாட இயலாமல், தாழ்வு மனப்பான்மையில் தடுமாறுகின்றார்கள்.

ஒரு மொழியில் நாம் நன்றாகப் பேச வேண்டும், கருத்துக்களை கவர்ச்சியாக எடுத்துச் சொல்ல திறமை பெற வேண்டும் என்கிற அடிப்படை ஆசை முதலில் மனதில் உருவாக வேண்டும். அந்தப் பேசும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள அது சார்ந்த புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்ள முயல வேண்டும்.

உதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட, ஆங்கிலத்தில் உள்ள புத்தகங்கள், செய்தித்தாள்கள் முதலியவற்றை வாய்விட்டு உரக்கவும், வேகமாகவும் புரிந்தாலும் புரியவில்லையென்றாலும் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஆங்கிலம் மற்றும் ஆங்கிலம் / தமிழ் அகராதிகளை பயன்படுத்தி சொற்களின் பொருள்களை சோம்பலின்றிப் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும். வாய்ப்பு நேரும் போதெல்லாம் தாழ்வு மனப்பான்மையின்றி நண்பர்களோடும் குடும்பத்தில் உள்ளவர்களோடும் பேசிப் பழக வேண்டும். சந்தேகங்கள் உண்டாகும் போது, உரியவர்களிடம் கேட்டு ஐயத்தை அகற்றிக் கொள்ள வேண்டும்.

மொழியறிவைப் போதிக்கின்ற (Spoken English) வகுப்புக்களில் பயிற்சி பெறலாம். தொலைக்காட்சி செய்தி வாசிப்பவரோ வாசித்ததைக், கூடவே வாசித்தும் பழகலாம். எளிமையான கதைப் புத்தகங்களைப் படிக்கலாம்.

Idioms and Phrases என்கிற சொற்றொடர்களின் உபயோகம் மற்றும் பொருள் பற்றிய புத்தகங்களைப் வாங்கிப் படித்து மொழியறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

கூட esaurus என்கிற சொற்களஞ்சிய புத்தகத்தின் மூலம் ஒரு பொருள் பன்மொழி பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்கள் ஆங்கில மொழி வழிக்கல்வியை வகுப்பிலிருந்து கற்று வந்தாலும், ஆங்கிலத்தில் இயலாதநிலை, அதைவிட தாய்மொழியாம் தமிழை முற்றிலும் புறக்கணித்ததனால் தமிழ் மொழித்திறன் மிக மிகப் பின்தங்கிய நிலை அவர்களிடம் காணப்படுவது வருத்தத்துக்குரிய ஒருநிலை. நல்ல தமிழ்ச் சொற்களுக்கான பொருளைச் சில சமயங்களில் ஆங்கில வார்த்தைகளின் மூலம் மட்டுமே எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மொழி ஆசிரியர்களுக்கு அதிக முக்கியத்துவம் மாணவர்களிடையே காணப்படுவது இல்லை. நமது பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் மேற்படிப்புக்கான மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்ளும் முறைகளில் மொழிப்பாட மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதேயில்லை. இதனால் இந்தப் பொறுப்பற்ற போக்கு மாணவ சமுதாயத்திடம் நிலவுகிறது. இந்த உண்மைகளைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தை விதிமுறைகளை வகுக்கும் அறிஞர் பெருமக்கள் கருத்தில் கொண்டால் நலமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு மேடையிலே பேசுகின்ற பெரும்பான்மையான பேச்சாளர்களும், பயிற்சியாளர்களும் கூட தனித்தமிழில் பேசுகின்ற ஆற்றல் அற்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆங்கிலத்தை கலந்தும் கொச்சைத் தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்தியும்தான் பேசுகின்றார்கள். மக்களின் சுவைக்கும் தன்மையும் இதற்கேற்றாற் போல இருப்பது தான் இதற்குப் பெரிதும் காரணமாகப் பேசப்படுகின்றது.

இனி தமிழ் ''மெல்லச் சாகும்'' என்ற சொற்றொடர் தமிழ் மொழி அறிஞர்களின் தமிழ் ஆர்வலர்களின் நெஞ்சத்தில் துயரத்தையும், துன்பத்தையும் உருவாக்குகின்றது. இன்றைய நிலையில் அதற்கேற்றாற் போல சூழல் மாறிவருவதும் கவலையை அளிக்கிறது. ஒரு மொழி அழியும் போது அதைப் பேசிவருகிற சிறப்பு மிக்க பண்பாட்டைக் கொண்ட இனமும் இல்லாது போகும், என்பதை மக்களிடையே உணர்த்த வேண்டும். விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டும்.

கருத்துக்களை மற்றவர்களுக்கு அறிவிக்கவோ, தெரிவிக்கவோ மொழியறிவு பெரிதும் தேவை, பேச்சாற்றலும் வேண்டும் மக்கள் தொடர்பும், உறவும் இதனால் தான் உருவாகும்.

செய்திகளையும், சில உண்மைகளையும், ஆலோசனைகளையும் மதிப்பீடுகளையும் மற்றவர்களுக்குத் தரவும், பெறவும் கருத்துக் தொடர்புத் திறன் மேம் படுத்தப் பட வேண்டும். மற்றவர்களின் மனம் புண்படாமல் பண்பாட்டோடு பேச, உரையாடலை நிகழ்த்த, பேசும் கலை அவசியம்.

கருத்துத் தொடர்புத்திறன் என்பதில் பேசுவதன் மூலம் (Spoken Language) தொடர்பு கொள்ளல், போசாமல் உடலசைவு (Body Language) மூலம் கருத்துகளை, உணர்வுகளை வெளிப்படுத்தித் தொடர்பு கொள்ளல் என்று இரண்டு நிலைகள் உள்ளடங்கியுள்ளன.

பேசுவது என்பதில் வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும் அடங்கும். அழகான வார்த்தைகளால் கருத்துகளை அறிவிப்பதற்கு சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மெதுவாகவும், சிறிது இடைவெளி தந்தும் பேச வேண்டும். குரலில் ஏற்ற இறக்கங்களைக் காட்டி சில வார்த்தைகளுக்கு அழுத்தம் தந்து பேசுவது நல்ல பேச்சாக இருக்கும்.

நமது குரலின் தன்மை நாம் உரைப்பதிலிருக்கின்ற உண்மைத் தன்மையை உணர்த்திவிடும். நம் பேச்சில் மற்றவர்களுக்கு ஆர்வம் உண்டாவது இதை வைத்துத்தான்.

திரும்பத் திரும்ப பயன்படுத்திய வார்த்தைகளை உபயோகிக்காமல் புதிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது கேட்பவருக்கு உற்சாகமூட்டும். பேசுவதற்கு முன்னர் மனதில் ஒரு ஒத்திகை நடத்திப் பார்க்கலாம்.

மற்றவர்களோடு உரையாடும் போது கேள்விகளைக் கேட்டு அவர்களையும் உரையாடலில் பங்கு பெற வைக்கலாம். ஒருவரே பேசிக் கொண்டு செல்வது சுவையற்ற, வெறுப்பூட்டுகின்ற, சோர்வுதட்டுகின்ற பேச்சாக அமைந்து விடும்.

உரையாடலில் நாம் என்ன சொல்ல விரும்புகின்றோம் என்பதை விட எப்படிச் சொல்கின்றோம் என்பது தான் முக்கியம் அது தான் சுவை கூட்டும். நுட்பமான செய்திகளை இவைகள் முக்கியமில்லை என்று விட்டு விடாமல் கூறவேண்டும். நாம் சொல்லுகின்ற செய்திகள், கருத்துக்கள் மற்றவர்களுக்கு பயனுடையதாக இருக்கின்றதா என்பதை இடையிடையே கேள்விகள் கேட்பதன் மூலம் உறுதி செய்து கொண்டு பேச வேண்டும்.

ருத்யார்டு கிப்ளிங் என்ற ஒரு ஆங்கிலக் கவிஞர் ஒரு கவிதையிலே இப்படிச் சொல்லுவார்.

''ஆறுபடை வேலையாள் அமைந்தனர் என்னிடம்

அவர்கள் மூலமே அனைத்தும் நான் அறிந்தது

அவர்கள் பெயர்களோ ''என்ன'' ''ஏன்'' ''எப்பொழுதென்பது''

''எப்படி'' என்பதும் ''எங்கு'' என்பதும் ''யார்'' என்பதும் தானே''

இந்த மேற்கண்ட கேள்விகளைப் பயன்படுத்துவதன் மூலம் மற்றவர்களின் தேவைகளையும், நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும், மாற்றுக் கருத்துக்களையும் அறிந்து கொள்ளலாம்.

பல நேரங்களின் பேசாத மௌன மொழிகளால் நம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றோம். வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் பேச்சினூடே நாம் கடைப்பிடிக்கின்ற மௌனமான இடைவெளிகள் வலிமையானதாகவும் மேலும் அதிக செய்திகளை அறிவிப்பதாகவும் அமையும் என்பதைக் கூர்ந்து கவனித்தால் அறியலாம்.

ஆகவே பேசும் ஆற்றல், கருத்துத் தொடர்பு ஆற்றல், வெற்றிக்கும் தலைமைப் பண்பைத் தக்கவைத்து கெள்ளுதற்கும் பெரிதும் தேவை தானே?

■ கமல்

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (38)

**எண் (9) செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விவரங்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.**

**பிறப்பு எண் 9 விதி எண் 7**

செவ்வாய் கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் எப்போதும் அறவழியிலே நடந்து கொள்வார்கள். அன்பானவர்கள். ஆடம்பரத்தை ஒரு போதும் விரும்ப மாட்டார்கள். இவர்கள் கதை, கட்டுரை, காவியம், ஓவியம், போன்றவற்றில் சிறப்படைவார்கள். ஆன்மிக வாழ்க்கையில் அதிக நாட்டமுடையவர்கள். கலைஞர்கள்.

கடுமையாக உழைத்துப் பின்னர் வெற்றி பெறுவார்கள். மனிதர்களை விடவும் தெய்வ சக்தியை அதிகம் நம்புவார்கள். அன்புக்கும் பாசத்துக்கும் கட்டுப்பட்டவர்கள்.செய் தொழிலில் முழுநேரமும் அக்கறையுடன் இருப்பார்கள். சுதந்திரமான நடவடிக்கை உடையவர்கள். கடினமான உழைப்பிருக்கும். தான தர்மங்கள் அதிகமாகச் செய்பவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்மான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

06,15,24,05,14,23,01,10,19,28

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள், சிவப்பு, பொன்னிறம்

**அதிஷ்ட ரத்தினங்கள்**

ஜேட்,வைடூரியம், சந்திரகாந்தக் கல், டெரிடாட், பவளம், ஓபல், ப்ளட்ஸ்டோன்.

**பிறப்பு எண் 9 விதி எண் 8**

செவ்வாய், சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருப்பார்கள். மனபலம் உடையவர்கள். தெளிவான சுயசிந்தனை உடையவர்கள். மனம், மின்னல் வேகத்தில் செயல்படும். தன்னம்பிக்கை, தைரியத்துக்குப் பெயர் போனவர்கள். தோல்வியைக் கண்டு துவள மாட்டார்கள். இவர்களின் பேச்சுக்கு அனைவரும் கட்டுப்படுவார்கள்.

தொழில் அதிபர்கள், உணவு உறக்கமின்றிச் செயல்படுவார்கள். விரைவாக முன்னேறக் கூடியவர்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். செல்வச் செழிப்போடு வாழ்வார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

06,15,24,05,14,23,09,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள்,பொன்னிறம்

**அதிஷ்ட ரத்தினங்கள்**

நீலக்கல், பவளம், நீல அக்கோமரின், ப்ளட்ஸ்



டோன்,கார்னட்,ஓபல்,

**பிறப்பு எண் 9 விதி எண் 9**

முழுமையான செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கம்பீரமான தோற்றமும், பார்ப்பவர்களைக் கவரும் காந்த சக்தியும், சுறுசுறுப்பும் மிக்கவர்கள். தன்னைச் சார்ந்தவர்களை உயர்த்த ஓடோடி உழைப்பார்கள். கலை நுணுக்கமும், ஆராய்ச்சி அறிவும் உடையவர்கள். ஏதாவது புது முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார்கள். எதையும் நன்கு ஆராய்ந்தே செய்வார்கள். பொது ஜன காரியங்களை மனமுவந்து செய்வார்கள் இறை பக்தியும், குரு பக்தியும் உடையவர்கள். அனைவரின் அன்புக்கும் பாத்திரமாவார்கள். எக்காரணம் கொண்டும் பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவார்கள். எழுத்தாலும், கலையாலும் பெரும் பணம் சம்பாதிக்கும் யோகமுடையவர்கள். தானதர்மம் செய்வார்கள். உணவு விசயத்தில் அக்கறை கொண்டவர்கள். நல்லதோர் வாழ்க்கைத் துணை அமையும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

6,15,24,5, 14, 23, 9,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர்நீலம், மஞ்சள், சிவப்பு, பொன்னிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

பவளம், ப்ளட்ஸ்டோன், கார்னட், நவரத்தினங்கள்

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

செய்வாய் ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமானதாக்க குரு, சுக்கிர, புதன் ஆதிக்க எழுத்துக்களையும் விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றிச் சேர்த்துப் பெயரமைக்க வேண்டும்.

கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டு வளமான வசியமான வாழ்க்கையைப் பெறலாம். 1 ஆம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 9, 27, 45,72, 90, 81, 5, 14, 23, 41, 59, 77, 95 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும். விதி எண் வலுவாக இருந்தால் விதி எண் சார்ந்த அதிர்ஷ்ட எண்ணுடைய பெயரை அமைக்கலாம்.

பெயர் அமைக்கும் போது மாத, வருட எண்களையும் கவனத்தில் கொண்டு பெயரமைக்கவும். அவரவருடைய பெயரானது அதிர்ஷ்டகரமான அதிர்வுகளுடன் இயக்கங்கள் நடைபெற்று அனைத்தும் சுபமாக இருக்கும். வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்துவிடும்.

**அதிர்ஷ்ட பெயர்மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டுஎண் | அதிர்ஷ்ட பெய்ர் எண் |
|---|---|---|
| 9 | 1 | 5,6,3 |
| 9 | 2 | 3,5,6 |
| 9 | 3 | 3,5,9 |
| 9 | 4 | 5,6,9 |
| 9 | 5 | 5,9 |
| 9 | 6 | 9,6 |
| 9 | 7 | 5,6 |
| 9 | 8 | 5,6 |
| 9 | 9 | 9,5,6 |

(தொடரும்)

# மன ரீதியான உறவுகள்தான் அன்பையும், பாசத்தையும் வளர்க்கும்

உடலும், உடலும் இணைந்தால்தான் உறவா, அது இல்லாமலும் கூட இனிய உறவை அனுபவிக்கலாம். உண்மையில் உடல் ரீதியான உறவுகளை விட இந்த மன ரீதியான உறவுகள்தான் அன்பையும், பாசத்தையும், நேசத்தையும் வலுவாக்கும், இனிதாக்கும்.

காதலிக்கும்போது நிறையப் பேசுவார்கள். கவிதை படிப்பார்கள், அந்தப் புத்தகம் படிச்சியா, இந்தப் புத்தகம் படிச்சியா என்று விவாதிப்பார்கள். உலக விஷயங்களை உட்கார்ந்து பேசுவார்கள், உள்ளூர் விஷயங்களையும் கூடவே அலசுவார்கள். ஏதாவது பேசிக் கொண்டே இருப்பார்கள். சின்ன விஷயத்தைக் கூட ரொம்ப நேரமாக வறுத்தெடுப்பார்கள்.

ஆனால் கல்யாணத்திற்குப் பிறகு இந்தப் பேச்சுக்கள் குறைந்து போய் விடுகிறது. கணவன், மனைவி என்று ஆன பிறகு தனிமையில் சந்திக்கும்போது உடல் ரீதியான உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது பலரின் வழக்கம். இது அசாதாரணமானதல்ல, இயல்பான விஷயமும் கூட. அதேசமயம், அதிக அளவிலான பேச்சுக்கள் கணவன் மன்னவியாகட்டும், காதலர்களாகட்டும், உறவை வலுப்படுத்த உதவுகிறது என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

வெறும் பேச்சாக மட்டுமல்லாமல் மனைவிக்கு உதவுவது, சின்னச் சின்ன வேலைகளில் இணைந்து ஈடுபடுவது என்று செய்யலாம். இவையெல்லாம் இருவரின் அன்பையும் நெருக்கமாக்க உதவுகிறதாம்.



■ இணையன்பன்

வெறும் பேச்சாக மட்டுமல்லாமல் மனைவிக்கு உதவுவது, சின்னச் சின்ன வேலைகளில் இணைந்து ஈடுபடுவது என்று செய்யலாம். இவையெல்லாம் இருவரின் அன்பையும் நெருக்கமாக்க உதவுகிறதாம்.

கணவனும், மனைவியுமாக சேர்ந்து சமைப்பது என்பது இப்போது சகஜமான விஷயம்தான். ஆனால் இப்போதும் கூட, மனைவிதானே சமைக்க வேண்டும், நாமெல்லாம் உட்கார்ந்து சாப்பிட்டால் போதாதா என்று நினைக்கும் கணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் சற்றே மாறினால் அவர்களுக்கு நல்லதாம்.


வார விடுமுறை நாள்களில் மனைவிக்கு சின்னச் சின்ன ஒத்தாசை செய்தால் அலாதிப் பிரியம் வருமாம். பெரிதாக செய்யக் கூடத் தேவையில்லை. காய்கறி நறுக்கிக் கொடுக்கலாம், அடுப்பில் ஏதாவது வைத்திருந்தால் அதை கவனிக்கலாம். மனைவி கேட்கும் பொருள்களை எடுத்துக் கொடுக்கலாம். கொடுக்கிற சாக்கில், சின்னதாக ஒரு முத்தம் வைக்கலாம். இதெல்லாம் மனைவியருக்கு அபரிமிதமான சந்தோஷத்தைக் கொடுக்கிறதாம். அடடா, இப்படி ஒரு கணவர் கிடைக்க புண்ணியம் செய்திருக்கணும் என்ற சந்தோஷத்தில், சாப்பாட்டில் உப்பு, காரமெல்லாம் கரெக்ட்டாகப் போட்டு ச்மைத்துக் கொடுப்பார்களாம்.


குக்கிங்கில் இப்படி கிக் இருக்கிறது என்றால், டிரைவிங் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம். உங்களது மனைவி வாரம் முழுவதும் வாகனத்திலேயே செல்பவராக இருந்தால், விடுமுறை நாளில் அவரை உட்காரச் சொல்லி நீங்கள் ஜாலியாக கூட்டிச் செல்லுங்கள்.

சிலருக்கு வாகனம் ஓட்டத் தெரியாமல் இருக்கலாம். அப்படிப்பட்ட மனைவியருக்கு வாகனம் ஓட்டச் சொல்லித் தரலாம். இது காதலையும், அன்பையும் அதிகரிக்க வைக்கிறதாம். பரிவோடும், பாசத்தோடும், கவனத்தோடும், காதலோடும், கவலையோடும் வண்டி ஓட்டச் சொல்லித் தரும் கணவர்களை மனைவியருக்கு ரொம்பவே பிடிக்கும அதுக்காக, வண்டியை இப்படி ஓட்டடேன், ஏன் பிரேக் பிடிக்கிறே, கியரைப் போடாதே, யாரைக் கேட்டு திருப்பனே் என்று டென்ஷனாக கத்திச் சொல்லித் தர வேண்டாம். அது விபத்தில் போய் முடிந்துவிடும்.

இதுபோக மலையேற்றமும் நல்லதொரு அனுபவம் தரும். நிறையப் பேருக்கு இந்த டிரக்கிங் தரும் இனிய அனுபவம் குறித்த ஞானம் இருப்பதில்லை. ஆனால் உண்மையில் ஜோடிகளாக இதுபோன்றவற்றில் ஈடுபடும்போது மிகுந்த உற்சாகம் பிறக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது, அனுபவித்தால்தான் தெரியும். கணவனும், மனைவியுமாக போகும்போது நிச்சயம் வித்தியாசமாக உணர்வீர்கள். இது உடல் ரீதியாகவும் இருவரையும் நெருக்கமாக ஆக வைத்திருக்க உதவும். உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வையும் கொடுக்கும். வித்தியாசமான அனுபவத்தையும் கொடுக்கும்.

இப்படி நிறைய இருக்கிறது காதல் பார்வையுடன் இது போன்ற சுவாரஸ்யங்களையும் கலந்து பாருங்கள், வாழ்க்கை மகா இனிமையாக இருப்பதை உணர்வீர்கள்.





# ஆமையும் நாகமும்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அவனும் நாகம் போன வழியில் தொடர்ந்து கோரைகளை விலக்கிப் பார்த்துக் கொண்டே விரைந்தான். அடிபட்ட நாகம், தப்பித்தால் போதும் என்று புதருக்குள் இருந்த பொந்தில் நுழைந்துவிட்டது. பாம்பைத் தேடிப் பார்த்து அலுத்துப்போன அவன், "தப்பித்து எங்கோ மறைந்துவிட்டது..." என்று போய்விட்டான். நாகத்தைத் தேடிவந்தது ஆமை. புதரைவிட்டு வெளியில் வந்த நாகம், ''நண்பா, அந்த மனிதன் என் முதுகில் பலமாக அடித்துவிட்டான். இன்னொரு அடி விழுந்திருந்தால் செத்திருப்பேன்'' என்றது. ''நல்லவேளை தப்பித்து விட்டாய். அது போதும். காயத்தை ஆற்றிவிடலாம் வா'' என்று அதற்கு ஆறுதல் கூறி அழைத்துச் சென்றது ஆமை. அன்று, வழக்கம் போல் ஆமையும் நாகமும் புல்வெளியில் இரை தேடிக் கொண்டிருந்தன. பின்னால் காலடி ஓசை கேட்டு திரும்பிப் பார்த்தது ஆமை. முன்பு பார்த்த அதே மனிதன் வந்து கொண்டிருந்தான். ஆனால் இப்போது அவனது கையில் கம்பு இல்லை. நாகத்தைப் பார்த்து, "நண்பா! முன்பு உன்னை அடித்த அதே மனிதன் வந்து கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் பாம்பு பிடிக்கும் வித்தைக் காரனாகத் தெரிய வில்லை. அதனால், இப்போது உன் வீரத்தைக் காட்டலாம்..." என்றது ஆமை. சீறிக் கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்தது நாகம். நடுங்கிப் போன அவன், அதனிடமிருந்து தப்பிக்க வேகமாக ஓடத் தொடங்கினான். அவன் ஓடுவதைப் பார்த்து, வயிறு குலுங்கச் சிரித்தன ஆமையும் நாகமும். ''அப்போது என்னை அடித்துக் கொல்ல வந்தவன், இப்போது என்னைக் கண்டு நடுங்கி ஓடுகிறான்..'' என்றது நாகம்.

''அப்போது அவனது கையில் கம்பு இருந்தது. எட்ட இருந்தே உன்னை அடித்துவிடலாம். அது அவனுக்குச் சாதகமான நிலைமை. இப்போது அவனிடம் எந்த ஆயுதமும் இல்லை. உன்னை நெருங்கினால் கடித்துவிடுவாய். அதனால் அவன் தப்பித்து ஓடவேண்டி இருக்கிறது. இது உனக்குச் சாதகமான நிலைமை..'' என்றது ஆமை. "நீ எல்லாமும் தெரிந்து வைத்திருக்கிறாயே...'' என்றது நாகம்.

''ஆம்.. ஒருவருக்குச் சூழ்நிலை சாதகமாக இல்லாதபோது என்னைப் போல் சுருட்டிக் கொண்டு அடங்கி இருக்கவேண்டும். சாதகமாக இருந்திடும் போது உன்னைப் போல் சீறிப் பாய வேண்டும். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் இதை அவசியம் நினைவில் கொள்ள வேண்டும்.." என்றது ஆமை. "நீஅறிவாளி தான்..." என்றது நாகம். "புரிந்து கொண்டால் சரிதான்..'' என்றது ஆமை. இரண்டும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் சிரித்தன.

(முற்றும்)



# கிர்கிஸ்தான்

பிசுகெக்கை தலைநகரமாகக் கொண்டு மத்திய ஆசியாவில் உள்ள டியன்ஷான் மலைப் பகுதி யில் அமைந்துள்ளது. வடக்கே கஜகஸ்தான். கிழக்கே சீனா, தென்மேற்கில் தஜிகிஸ்தானும் மேற்கில் உஸ்பெகிஸ் தானும் அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 900 சதுர கிலோமீற்றர். இங்கே வசிக்கும் மக்கள் தொகை 54லட்சத்து 82 ஆயிரம். கிர்கிஸ்தான் ஒரு ஜனநாயகக் குடியரசு. 7 மாநிலங்கள் உள்ளன. இதன் தலைவர் மேயர். இங்கே பயன்படுத்தும் நாணயம் சோம்வ, இங்கு உள்ள மக்கள் கிர்கீஸ், ரஷ்யன் மொழிகளை பேசுகின்றனர். இவர்களுடைய மதம் இஸ்லாம், கிறிஸ்தவம். இவர்களுடைய எழுத்தறிவு 98.7வீதமும் ஆகும். தானியங்கள், பருத்தி, உருளைக் கிழங்கு, காய்கறிகள், பழங்கள், புகையிலை ஆகிய வற்றை விளை பொருள்களாகும். கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு பருத்தி, கம்பளம், மரவேலை, நெசவு, உலோக உருக்கு சுரங்கம், எண்ணெய் போன்ற தொழில்களையும் மேற்கொள்ளுகின்றனர்.

சா.ஜிந்துஜா

# சிட்டுக் குருவி



சிட்டுக் குருவிகள் பசரீன்கள் குடும்பத்தைச் சார்ந்தவை.இந்தியாவில் இவை வீட்டுக்குருவிகள், அடைக்கலக்குருவிகள் ,ஊர்க்குருவிகள், சிட்டுக்குருவிகள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

இவை உருவத்தில் சிறியனவாகவும், இளம் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் இருக்கும், சிறிய அலகு, சிறிய கால்களுடன் காணப்படும். இவை 8 முதல் 24 செ.மீ நீளமுள்ளவை. பழுப்பு சாம்பல், மங்கலான வெள்ளை என்று பல நிறங்களில் காணப்படும். கூம்பு வடிவ அலகுகளைப் பெற்ற இவை 27 முதல் 39 கிராம் எடை கொண்டவை. ஆண் பறவையில் இருந்து பெண் பறவை வேறுபட்டது. மேற்பாகம் தவிட்டு நிறத்தில் மஞ்சளும் கறுப்பும் கலந்த கோடுகள் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெளுப்பாக இருக்கும்

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் குருவி இனங்கள் உள்ளன. இவை எங்கும் காணப்படுபவை. சிட்டுக் குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். மரத்திலும், வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருள்களைக் கொண்டும் கூடு கட்டி வசிக்கின்றன. இவற்றின் கூடுகள் கிண்ண வடிவில் இருக்கும். இவை குளிர் காலத்தில் கூட்டமாக ஒரு புதரில் ஒன்று சேர்ந்து இரவைக் கழிக்கின்றன.

சிட்டுக் குருவிகள் அனைத்தும் உண்ணிகள் , தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும். சில வகைக் குருவிகள் பூ மொட்டுகளையும் உண்ணும்

சிட்டுக் குருவிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்கின்றன. மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும்.

மெல்லிய கோடுகளைக் கொண்டவை புல்வெளிக் குருவிகள், மாலைச் சிட்டுகள், காட்டில் வாழும் நரிச் சிட்டுகள், வெண்கொண்டையும் வெண்மையான தொண்டையும் கொண்ட குருவிகள், கறுப்புச் சிட்டுகள், வெள்ளைக் கோடுகள் உடைய கொண்டையைப் பெற்றவை என குருவிகளில் பல வகைகள் உள்ளன.

# குமிழ் முனைப் பேனா




கி.மு 1000ஆம் ஆண்டு காலத்தில் பேனாவை ஒத்த கருவிகளையே எழுதுவதற்கும் பயன்படுத்தினார்கள். அதே காலத்தில் சீனர்கள் எழுதுவதற்கு தூரிகைகளைப் பயன்படுத்தினார்கள். கி.மு 300 ஆம் ஆண்டளவில் வாழ்ந்த எகிப்தியர்கள் தடித்த குழல்களைக் கொண்டு எழுதினார்கள். 7ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு எழுதுவதற்காக பறவைகளின் இறகை பயன்படுத்தினார்கள். முன்னைய காலத்தில் எழுதுவதற்குச் சுலபமாகவும் சரியாகவும் இந்த உபகரணங்களே கிடைத்தன. 19 ஆம் நூற்றாண்டு அளவில் இறகுகளுக்குப் பதிலாக உலோ கங்களினால் ஆன கூரிய முனைகளால் எழுதத் தொடங்கினார்கள். இதன் ஆரம்பமே குமிழ்முனைப் பேனாக்களின் தோற்றத்துக்கு வழி வகுத்தது எனலாம்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ''ஆர்ஜென்ரீனாவில்'' வசித்து வந்த ஹங்கேரியரான ''லாஸ்லோ பிரோ'' (Lazlo biro) என்பவர் குமிழ்முனைப் பேனாவைத் தயாரிப்பதற்கு உரிமை பத்திரம் பெற்றுக் கொண்டார்.

1930 ஆம் ஆண்டு உலகமெங்கும் குமிழ்முனைப் பேனாக்கள் பயன்பாட்டுக்கு வந்தன. ''லாஸ்லோ பிரோ''வினுடைய கண்டுபிடிப்பு என்பதால் அப்போது எல்லாம் குமிழ்முனைப் பேனாக்களை ''பிரோ'' (Biro) என்றே அழைக்கப்பட்டது.

செ.டானியல் சுபர்சன்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

## தீக்குச்சி



தீக்குச்சியை முதன் முதலில் ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் 1826 ஆம் ஆண்டு உருவாக்கினர்.

இதன்முனையை உப்புத் தாளின் மீது தேய்த்தால் அது வெடித்துக் கொண்டே எரியும். எரியும் போது ஒருதுர்நாற்றம் வீசும். 1930ஆம்ஆண்டில் சார்லஸ் சவுரியா என்ற பிரெஞ்சுக்காரர் எதில் தேய்த்தாலும் எரியக் கூடிய தீக்குச்சியை உருவாக்கினார்.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்



கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் இடம் பெற்ற இல்ல மெய்வண்மைப் போட்டியில் சிறார்களின் இடைவேளை நிகழ்வு.

■ தர்மா



# செய்தித்தாளின் தோற்றமும் பத்திரிகைச் சுதந்திரமும்

ஒரு நாட்டின்அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றுக்கு உறுதுணை புரிவது செய்திப் பத்திரிகையே (NEWS PAPER) என்று கூறினாலும் மிகையாகாது. எனவே இதன் முக்கியத்துவம் கருதி சர்வதேசமெங்கும் இதற்கு அரசாங்கங்கள் பூரண சுதந்திரம் அளித்துள்ளனர் என்பதை நாமறிவோம்.

ஆகவே மக்களுக்கு பயன்படுகின்ற செய்தித்தாளின் தோற்றம், பத்திரிகைச் சுதந்திரத்தின் நிலைப்பாடு, செய்தி நிறுவனங்களின் அத்தியாவசியம், வரலாறு என்பவை பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

சமூக வாழ்க்கையில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் உலகப் போக்கை அறிந்து கொள்வதென்பது மிகவும் இன்றியமையாததொன்றாகும். எனவே ஆரம்ப கட்டமாக பத்திரிகையின் தோற்றத்தைப்பற்றிப் பார்ப்போம். உலகில் முதன் முதல் வெளிவந்த செய்தித்தாள் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் (PEGING) பிரசுரமாகியது. ஆறாம் நூற்றாண்டில் வெளிவந்த இதற்கு ''ட்சிங்பவோ'' என்று நாமம் சூட்டப் பட்டது. இந்தப் புதினத்தாளுக்கு பத்திரிகைச் சுதந்திரம் பேணப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனெனில் இது முற்று முழுதாக ஆளும் தரப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதொன்றாகும்.

இதனைத் தொடர்ந்து உலகெங்கும் அனேகம் தனியார் நிறுவனங்கள் பத்திரிகைகளைப் பிரசுரித்தன. அவை வாசகர்களின் அவாவைத் திருப்திப்படுத்தின என்றும் கூறலாம். இதன் காரணமாக அரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரம் அளிக்க வேண்டிய நிலைமை உருவாகியது. ஆகவே சமகால அரசியல் விடயங்கள் சம்பந்தமாக செய்திகள் (NEWS), கட்டுரைகள் (ARTICLES), கேலிச்சித்திரங்கள் (CARTOONS) என்பவற்றை தற்போது நாடெங்கும் வெளியாகின்ற செய்திதாள்கள் தினமும் பிரசுரித்து வருகின்றமை யையும் காணக்கூடியதாகவுள்ளது.

பொதுவாக பத்திரிகைகள் இருவகைப்படும். அதாவது ஒன்று நாளிதழ் மற்றது வார இறுதியில் வெளிவருகின்ற வார மஞ்சரி ஆகும். இது நாட்டுக்கு நாடு வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் தலைநகரில் இருந்து பிரசுரமாகும் தமிழ் மொழியிலான வாரப்பதிப்புக்கள், வார வெளியீடு, ஞாயிறு வெளியீடு என்ற நாமங்களில் வெளிவருகின்றன.

நம் நாட்டில் பிரசுமாகின்ற பத்திரிகைகள் எல்லாம் பத்திரிகைத் தர்மத்தைப் பேணி அதன் பிரகாரம் வெளிவந்து கொண்டு இருப்பதையும் காணக்ககூடியதாக உள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம்(TECHNOLOGY) குன்றிய அக்காலகட்டத்தில் பத்திரிகையை அச்சுக் கோர்த்து வெளியிட இயலவில்லை. அதற்குப் பதிலாக அச்சு இயந்திர கூடத்தில் (PRINTING PRESS) எழுத்துக்கள் செதுக்கி மரத்துண்டுகள் மூலம் அச்சடித்து வெளியிட்டனர். கம்யூட்டர்(COMPUTER), இணையத்தளம் (INTERNET) போன்ற நவீன இலத்திரனியல்(ELECTRONIC) சாதானங்கள் பாவனைக்கு வராத நிலையில் இந்த வழிமுறையே சில நூற்றாண்டு காலம் தொடர்ந்ததாகவும் அறிய முடிகின்றது.

(தொடரும்)

## (ஏ/ கோ)ழை



கை.பிரகதீஸ்வரன்
யா/மத்திய கல்லூரி

**ஏழை என்பவனுக்கு துணி கிடையாது**
**கோழை என்பவனுக்கு துணிவு கிடையாது**

# யார் கொலையாளி?

**" இறுதிக் காலத்தில் ஜாக்சனின் மனம் அதீத துன்பத்தில் உழன்று இருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு உலக நாடுகள் முழுக்கப் பயணித்து 50 இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டார் மைக்.**

''இனி நான் பயிற்சி செய்யப்போவது இல்லை. வாழ்நாளில் ஓர் அற்புத வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இனி நான் ஒரே ஒருவருக்கு, உலகம் போற்றும் ஒருவருக்கு டாக்டராகப் போகிறேன்''- மைக்கேல் ஜாக்சனுக்கு மருத்து வராகும் முன்பு டாக்டர் கான்ராட் முர்ரே அது நாள் வரை தான் பார்த்துவந்த நோயாளிகளிடம் கூறிய வார்த்தைகள் இவை! இப்போது அதே முர்ரேதான் மைக்கேல் ஜாக்சனின் மரணத்துக்கு மறைமுகக் காரணம் என்று கூறி நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது நீதிமன்றம்.

இறுதி நாளில் ஒரு தனி அறைக்குள் என்ன நடந்தது என்பதற்கான சாட்சிகள் இல்லை. ஜாக்சனின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, 'புரோபோஃ போல்' என்கிற மருந்தை அதிக அளவு உட்கொண்டதுதான் அவருடைய மரணத்துக்குக் காரணம் என்றதன் அடிப்படையிலேயே இந்தத் தீர்ப்பு அமைந்து உள்ளது.

தீர்ப்பு வாசிக்கப்படும் போது முர்ரேயின் முகத்தில் எந்த வித உணர்ச்சியும் இல்லை!மைக்கேல் ஜாக்சனின் ரசிகர்களை இந்தத் தீர்ப்பு ஒரு வகையில் சமாதானப்படுத்தி இருக்கிறது.



புகழின் உச்சியில் இருக்கும் எவருக்கும் ஏற்படும் மன அழுத்தம் ஜாக்சனுக்கும் ஏற்பட்டது. அவர் செய்து கொண்ட பிளாஸ் டிக் சர்ஜரிகளை ஈடுசெய்ய மேலும் மேலும் மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்தார். ஆகவே, கடுமையான பக்கவிளைவுகளும் ஏற்பட்டன. அவருடைய இறுதி நாள்களில் அவர் வீட்டில் 'புரோபோஃ போல்' மருந்து பாட்டில்கள் நிறையக் காணப்பட்டன. அனஸ்திஸியா வகை மருந்தான அது, தற்காலிகமாக ஹிப்னா டிஸத்துக்கு ஆட்பட்ட உணர்வைக் கொடுக்கும்.

''அவருடைய சிகிச்சைகள் குறித்த முழுமையான வரலாறு எனக்குத் தெரியாது. அவர் என்னிடம் சொல்லவும் இல்லை. 'புரோபோ ஃபோல்' மருந்தை அவருக்கு நான் பரிந்துரைக்கவில்லை. அவரை நான் முதன் முதலில் சந்தித்த போதே அந்த மருந்தை அவர் உட்கொள்பவராக இருந்தார். நான் மட்டுமே அவருக்கு மருந்துகள் தருபவனாக இல்லை. அவர் யார் யாரிடம் எல்லாம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்று எனக்குத் தெரியாது. அப்படி அவர் இன்னொரு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டால், நான் தடுக்கவும் முடியாது. அன்றைக்கு நான் மிகச் சிறிய அளவில் தான் 'புரோபோஃபோல்' மருந்தைத் தந்தேன். ஆனால், ஒருவேளை நான் அறையை விட்டு வெளியேறிய பின் அவர் அதிகமாக உட்கொண்டு இருக்கலாம். எல்லோரையும் போல் நானும் அவருடைய விசிறி. நான் அவரை மிகவும் நேசித்தேன். அவர் மரணத்துக்கு நான் காரணம் என்ற குற்றச்சாட்டை என்னால் எளிதில் கடந்து செல்ல முடியவில்லை!'' என்று முர்ரே முன்னரே தெரிவித்து இருந்தார்.

அறுவைச் சிகிச்சை அறையில் மருத்துவர்கள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகளின் கண்காணிப்பில் தான் நோயாளிக்கு 'புரோபோஃபோல்' மருந்து தரப்படும். ஏனெனில், இந்த மருந்தை உட்கொண்ட நோயாளிகள் மயக்க நிலையை அடைந்து விடுவார்கள். கொஞ்சம் அதிகமானாலும் கூட மூச்சு நின்றுவிடும் அபாயம் உண்டு. இந்த மருந்தைத்தான் முர்ரே அவருக்குத் தந்திருக்கிறார்.

இறுதிக் காலத்தில் ஜாக்சனின் மனம் அதீத துன்பத்தில் உழன்று இருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு உலக நாடுகள் முழுக்கப் பயணித்து 50 இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டார் மைக். அவரது இந்த ஆர்வத்துக்கு கலைத் தாகம் மட்டும் காரணம் அல்ல... அவரை அழுத்திய கடன் சுமையும் தான். 50 இசை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவரை நெருக்கிய ஸ்பான்சர்களின் நிர்ப்பந்தங்கள், பலவீனமாகிக்கொண்டே இருந்த உடல் நிலையைக் கவனிக்க வேண்டிய கட்டாயம் ஒரு புறம், மேடையில் அவருடைய 50 வயது சோர்வைத் தெரியாமல் சமாளிக்க வேண்டிய மன அழுத்தம், ஊடகங்களின் துரத்தல் படலம், நிலுவையில் இருந்த நீதிமன்ற வழக்குகள் என ஏராளமான நெருக்கடிகளுக்கு இடையில் மைக் தனது இறுதி நாள்களை கழிக்க வேண்டி இருந்தது.

மைக் தன் பால்யத்தில் தந்தையால் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வளர்ந்தவர். சிறிய வயதிலேயே இசை, நடனம் ஆகியவற்றை மிகச் சிரத்தையாகக் கற்றுக் கொண்டமை, அதற்குக் கொடுத்த விலை அவரது பால்யம். ஒரு குழந்தை அனுபவிக்க வேண்டிய எந்தச் சந்தோஷத்தையும் அனுபவிக்காமல்தான், ஜாக்சன் வளர்ந்தார். ஒரு நட்சத்திரமானதும் தனது புகழுக்கு அவர் கொடுத்த விலை அவரது தனிப்பட்ட சுதந்திரம்!

அவரது உடலும் குரலும் அவருக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. அவருடைய ரசிகர்கள் அவற்றைத் தங்களுடையதாக நினைத்தார்கள். அவருடைய உடல் நலம் குறித்து கவலைகொள்ளாமல், அவருக்கு இருந்த மார்க்கெட்டைக் குறி வைத்த வணிக நிறுவனங்கள் 50 இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தன. அவருடைய உடலும் குரலும் நுகர்வுப் பொருள்களாயின. தன் உடலை அவசர கதியில் நிகழ்ச்சிகளுக்காகத் தயார் செய்யும் நிலைக்குக் கட்டாயப் படுத்தப்பட்டார் மைக். 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மேடையில் தோன்றவிருக்கும் பதற்றத்தில் மைக் இரவு பகலாக ஒத்திகையில் ஈடுபட்டார். அவருடைய உடல் சோர்ந்தே இருந்தது. தூக்கம் இன்றிச் சிரமப்பட்டவருக்கு 'புரோபோஃ போல்' தேவைப்பட்டது. அதுவே அவர் உயிரைப் பறித்து விட்டது. ஒரு கலைஞன் மரித்துப் போனான். 'புரோபோஃபோல்' என்கிற மருந்து மட்டுமா மைக்கேல் ஜாக்சனின் மரணத்துக்குக் காரணம்? **நன்றி: ஆனந்த விகடன்**

# மீன் பா

## பண்பாட்டு அ



இந்து சமுத்திரத்தின் (INDIAN
அழைக்கப்படுகின்ற இலங்கை
(SMALL ISLAND) எமது தா
LAND) ஆகும். இங்கு வடக்கு, கி
இலங்கைத் தமிழரும் மத்திய ம
வம்சாவளித் தமிழரும் கணிசமான
வருகின்றனர் என்பதை நாமறி
மொழியைப் பேசுவோர் அதிகமா
பிரதேசங்களிலொன்றான மட்டக்
பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக
இங்கு உசிதமாகும்.

இலங்கை தீவின் கிழக்கு கரை
அமைந்துள்ள மட்டக்களப்பு ஏரியு
LAGOON) இயற்கையாகவே ஒ
காட்சியளிப்பதே மட்டு நகராகும்.
புளியந்தீவு என்றே அழைத்து வந்தனர். அதேவேளை இன்றைய காலகட்டத்தில் கூட மட்டக்களப்புக்கு மீன்பாடும் தேன் நாடு! என்ற சிறப்புப்பெயர் நிலவி வருவதையும் காணக்கூடியதாகவுமுள்ளது.

ஆகவே மட்டக்களப்பு மக்களின் சமூகம் தொழி, கலை, வேலை வாய்ப்பு, புவியியல், கலாசார விழுமியங்கள் பற்றியும் சிறிது நோக்குவோம்.

மட்டக்களப்பு மக்களின் கவிதை, இசைப்பாடல், அம்மானைப் பாடல், குழந்தைப் பாடல், சிறுவர்விளையாட்டுப் பாடல், பண்டைத்தமிழரின் கூத்து, சங்க இலக்கியங்கள் கூறும் கூத்து என்பவை தொடர்பாகவும் மேலதிக விவரங்களை ஆராய்வது உத்தமம்.

மட்டக்களப்பு மக்களின் கவிதை, இசைப்பாடல், அம்மானைப் பாடல், குழந்தைப் பாடல்,
சிறுவர் விளையாட்டுப் பாடல், பண்
சங்க இலக்கியங்கள் கூறும் கூத்
பாகவும் மேலதிக விவரங்களை ஆ

மட்டக்களப்பு தமிழ் மக்கள் சித்
வெகுவிமர்சையாக கொண்டாவார்
நெல் மணிகள் இல்லங்களுக்கு வந்
எல்லோர்கையிலும் பணப்புழக்கம்
புத்தாண்டு பிறக்கின்றது.

மட்டக்களப்பு மாரியம்மன்
கரகாட்டத்தின் போது கோயில் பூ
குடுமியை விரித்துப் பேட்டு சிலம்
வேப்பிலைக் கொத்தையும் மறுகை
சிறுபிரம்பையும் பிடித்தபடி தலை
ஆடுவார். இது பொதுவாக வெ

# பாடும் தேன் நாட்டின்

## ட்டு அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு?



■ அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.

(INDIAN OCEAN) முத்தென
இலங்கையெனும் சிறு தீவே
எமது தாய்நாடு (MOTHER
வடக்கு, கிழக்கு பிரதேசங்களில்
மத்திய மலை நாட்டில் இந்திய
ணிசமான தொகையினர் வாழ்ந்து
நாமறிவோம். ஏலவே தமிழ்
அதிகமாகக் காணப்படுகின்ற
ன மட்டக்களப்பு நாட்டாரியல்
தொடர்பாக விரிவாக ஆராய்வது

ழக்கு கரையோரம் நீள் வடிவில்
ப்பு ஏரியுடன் (BATTICALO -
பாகவே ஒன்றிணைந்து அழகுறக்
நகராகும். ஆதியில் இதனைப்
ழைத்து
இன்றைய
டக்களப்
நாடு!
நிலவி
டியதாக

பு மக்க
வேலை
ஸாசார
சிறிது

கவிதை
பாடல்,
ர்விளை
டைத்தமி
லக்கியங்
தொடர்
ங்களை

க்களின்
அம்மா
பாடல்,
பாடல், பண்டைத்தமிழரின் கூத்து,
கூறும் கூத்து என்பவை தொடர்
ங்களை ஆராய்வது உத்தமம்.
மக்கள் சித்திரை வருடப்பிறப்பை
ண்டாவார்கள். அறுவடைக்குப்பின்
ளுக்கு வந்து சேர்ந்து விடுகின்றன.
ணப்புழக்கம் நிறைந்த வேளையில்

ரியம்மன் கோயில் நிகழுகின்ற
கோயில் பூசாரி சேலை உடுத்து
ட்டு சிலம்பு அணிந்து ஒருகையில்
ம் மறுகையில் வெள்ளிப்பூணிட்ட
படி தலையில் கரகத்தை வைத்து
வாக வெள்ளிக்கிழமையிலே தான்

நடைபெறும். கரகாட்டக் காரருக்கு பணம், அரிசி, தேங்காய் என்பன காணிக்கையாக வழங்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கண்ணகை அம்மன் கோயில்கள் அனைத்திலும் பிரதிவருடமும் வருகின்ற வைகாசித் திங்களில் சடங்குகள் நடைபெறும் ஆலயங்களில் நிகழுகின்ற கிரியைகளைக் கண்டு பக்தர்கள் பீதியும், மகிழ்ச்சியும் அடைவார்கள். சிலம்பணிந்து கையில் கொத்துக் கொத்தாக வேப்பிலை களை இறுகப்பற்றிக் கொண்டு தெய்வமுற்று ஆடுவார்கள். அவர்களை ஆட்டுவிக்கும் மந்திரவாதிகளின் மந்திர உட்சாடனம், சாட்டையடி, பலி ஆகியவை வியப்பையும் பீதியையும் ஏற்படுத்துகின்றன.

கண்ணகி அம்மன் சடங்குகளில் பாடப்பெறும் இசைப்பாடல்கள் காவியம், குளுத்திப்பாடல்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான இசை வடிவங்கள் உண்டு. காவியங்களின் இரங்கலிசையும் குளித்திப் பாடல்களில் நான்கு வித இசை வேறுபாடுகளும் பக்தர்களை பெரிதும் கவரும். கண்ணகி வழக்குரை பாடல்களும் தனியான இசை வடிவத்துடன் கூடியது.

> மட்டக்களப்பு நாட்டாரிடையே பிரபலமாக விளங்கிய இன்னொரு கலை நாட்டுக்கூத்து. நாடகங்கள் அரங்கேறிய அந்தக்கால கட்டத்தில் அந்தக் கலையுடன் கலக்காமல் இது நாட்டிற்குரிய பிரத்தியேகக் கலை என்பதை உணர்த்தவும், நாட்டுக்கூத்து என்று விஷேடமாக அழைக்கப்பட்டது.

மழை பொய்த்து விட்டால் அல்லது ஊரெங்கும் அம்மை நோய் பரவினால் அம்மனை எழுந்தருளச் செய்து ஊரைச் சுற்றி உலாவருவார்கள். அந்த வேளையில் மழைக்காவியம் பாடப்படும். ஊரார் அனைவரும் வீதிவாசலின் மருங்கில் கம்புளிகளால் சுமார் மூன்று அடி உயரத்துக்கு சிறு மேடை அமைத்து அதனை மூன்று புறமும் மறைத்து மேலே கிடுகினால் வேய்வார்கள். உள்ளே குடத்தில் வேப்பிலையைச் செருகி கமுகம் பாலையினாலும் அலங்கரித்து, தூபமிட்டு வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அம்மனை வரவேற்பார்கள்.

மட்டக்களப்பு நாட்டாரிடையே பிரபலமாக விளங்கிய இன்னொரு கலை நாட்டுக்கூத்து. நாடகங்கள் அரங்கேறிய அந்தக்கால கட்டத்தில் அந்தக் கலையுடன் கலக்காமல் இது நாட்டிற்குரிய பிரத்தியேகக் கலை என்பதை உணர்த்தவும், நாட்டுக்கூத்து என்று விஷேடமாக அழைக்கப்பட்டது. கிராமங்களில் வாழ்ந்து வந்த கலைக்குடும்பங்கள் சில பிரத்தியேகமாகப் பயின்று பாதுகாத்தும் வந்தனர். 1930ஆம் ஆண்டளவில் கோளாவில் என்ற ஊரிலுள்ள நாட்டுக்கூத்து கலைஞர்கள் இந்தக் கலையில் பிரசித்தி பெற்றிருந்தனர். சித்திரை வருடப்பிறப்பு ஆரம்பித்ததும் ஆண்டு தோறும் கலைஞர்கள் மட்டு நகருக்கு பயணம் மேற்கொண்டு இரண்டு மூன்று மாதங்கள் தங்கி நின்று கூத்துக்களை ஆடிக் காட்டுவார்கள். வழக்கமாக இவர்கள் அண்ணாவியார் உடுகர் சீனித்தம்பியின் வீட்டில் தங்கி நிற்பார்கள்.

(தொடரும்)

# தபால்காரன்



கொட்டும் மழையிலும்
சுட்டெரிக்கும் வெயிலிலும்
கட்டுக்கட்டாய் கடிதம்
கையிலே சுமந்து கொண்டு

சாலை வளைவுகளும்
சந்துகள் தெருக்களெல்லாம்
விட்டுவிடாமல் சுற்றி
வீட்டுப்படலை தட்டி

மிதிவண்டிச் சக்கரங்கள்
வேகமாய் சுழன்று வர
அடிமனதின் துயரங்கள்
அலையலையாய் மிதந்துவர

நெற்றியில் வழியும் வியர்வை
நிலத்திலே விழுந்து சிந்த
தாகத்தால் நாவரண்டு - உடல்
தள்ளாடி சோர்ந்து விட

கையில் உள்ள பாரங்கள்
மெல்லக்குறைந்து வர
நெஞ்சில் படபடப்பு
மீண்டும் அதிகரிக்க

கந்தோரின் வாசலுக்கு
காலடி எடுத்து வைக்க
அரைமணி லேட் என்று
அதிகாரி கடுகடுக்க

ஐயா! தபால்காரன் - அவன்
துயரம் யார் நினைப்பார்
விடியல் அவன் வாழ்வில்
விடியாத விடியல்களா?

பொலிகை, யோகராஜா (உஷா)
ஒதியடித் தெரு

# அறிவென்பது அனைத்திலும் உண்டு!

## தோற்றம்



விதியின் அறிவு விதைத்தவை
அடிப்படையான அணுக்கள்
மாற்றங்கள் உருவாக்க
தாக்கங்கள் புரிந்து
தீயாய் ஒளிரும் சூரியன்
சிந்திய சிதறல்களே- பூமியின்
கோள்களும் படைப்புக்கள் எல்லாம்!

## மாற்றம்

மண்ணிலும் மணமுண்டு
நீரிலும் சுவையுண்டு
காற்றிலும் இசையுண்டு
தீயில் ஒளியுண்டு
ஆகாயமே உணர்வு
ஐந்து பூதமும், ஐந்து
புலனும், ஐந்து அறிவு!

## இயக்கம் (வினை)



முரண்பாடே வாழ்வுச்
சக்கரத்தின் சுழற்சிமுள்
(உணவுச் சங்கிலி) பேதமைகளே
இதை இழுத்துச் செல்லும்
குதிரைகள் (ஆண், பெண்)
பாசமும் பரிவும் பரம்பரை
எண்ணக் கருவும் பரம்பலின் விதி!

## அதிசயம்

நீண்ட விதியில் இயற்கை
வைத்த படைப்புக்களை மனிதனே
கண்டு சாதனை செய்தாலும்
அந்த மனிதன் உணரும் வண்ணம்
இயற்கை செய்யும் அதிசயம்
அவ்வப்போது ஏற்படும் படைப்பில்
புதுமைகள் பல பத்திரிகை வாயிலாக!

இ.ஜெயபாலன்,
தொட்டிலடி.

## இயல்பு (அறிவு)



ஒன்றையொன்று
உண்பதே உணவுச் சங்கிலி
ஒன்றிலிருந்து, மற்றதைக் காக்க,
இயற்கை வைத்த

இயல்பு பல்வகை வடிவில்
பல்வேறு உயிர்களிடம்
தாவரம் அடங்கலாக உண்டு!



# புத்தகசாலை

## நந்தன வருஷ வாக்கிய பஞ்சாங்கம்




புதுவருடம் பிறக்கப்போகிறது என்றதுமே ஒவ்வொருவரும் புதியதோர் வாழ்க்கைக்குள் பிரவேசிப்பதான உணர்வுக்குள் தம்மை ஆழ்த்தி விடுவதுண்டு.

புது வாழ்வும் புதிய புதிய நிகழ்வுகளும் எமது எதிர்காலத்தை மகிழ்வுடையதாக்க வேண்டும் என்ற கனவுகளும் எமக்கு உற்சாகம் தருவதுண்டு. அனைத்தையும் முன் கூட்டியே அறிந்து கொள்ளவும் வாழ்வை வளமாக அமைப்பதற்கான திட்டமிடலுக்கும் பஞ்சாங்கம் பல வழிகளிலும் உதவி நிற்பதை அனைவருமே அறிந்திருக்கின்றனர்.

அந்த வகையில் எதிர்வரும் தமிழர் புதுவருடமான நந்தன வருஷத்தை நோக்கிய விளக்கங்களோடும் கணிப்புகளோடும் யாழ்ப்பாணம், கொக்குவில் இ.சி.இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

வழமை போல் உள்ளடக்கம் பஞ்சாங்கத்துக்கே உரியதான முழுமையான அம்சங்களோடும் 155 ஆம் வருடப் பதிப்பாக அச்சாகியுள்ளது. இதனை யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்தினரால் இரகுநாதையர் வழி வந்த வெங்கடேச ஐயர் வெளியிட்டுள்ளார்.

கன்டா வாழ் எம்மவரின் பயன்கருதி, 1998/99 முதல் அங்கேயும் இந்தப் பஞ்சாங்கம் கணிப்பீட்டுடன் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நன்மை தீமை யாவுக்கும் எமது வாழ்க்கை முறையிலும் வழிபாட்டு நிலைகளிலும் ஒழுங்கான திட்டமிடலுக்கும் வழிப்படுத்தலுக்கும் பஞ்சாங்கம் அவசியமாகும்.

## அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும்




ஈழத்துச் சிறுகதை இலக்கிய வேகத்தைப் பெண் எழுத்தாளர்கள் பலர் தமது விடுதலைக்கான ஆயுதமாகக் கொண்டு முன்னணியில் திகழ்கிறார்கள். மொழியின் வலிமையையும் இனத்தின் மேம்பாட்டையும் வெளிப்படுத்தும் அவர்களின் எழுத்துக்கு மேலும் ஓர் ஆதாரமாக ''அங்கயற்கண்ணியும் அவள் அழகிய உலகமும்'' எனும் சிறுகதை நூல் வெளிவந்துள்ளது. அவர் முன்னர் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்புகள் மூலமும், பரிசுக் கதைகள் பலவற்றை எழுதியதன் மூலமும் சிறுகதைப் புலத்தில் அறிமுகமானவர் தனது நான்காவது சிறுகதைத் தொகுப்பின் மூலம் மேலும் முன்னேறி இலக்கிய உலகில் பவனிவருபவர்.

வார்த்தைகள் எழுத்துக்களாகி உயிர்ப்புடன் மனந்தொடும் மதிப்புள்ளவைகளாகத் தாட்சாயணியின் சிறுகதைகள் வாசிக்கவும் சிந்திக்கவும் தூண்டுகின்றன.

பெண் படைப்பாளியான பிறேமினி சபாரத்தினம் இங்கு தாட்சாயணி என்ற புனைபெயர் தாங்கி எழுதி வெளியிட்டுள்ள பதினாறு சிறுகதைகளும், பெண்களுக்கே உரிய பிரச்சினைகளையும் அவர்களது மன உணர்வுகளையும் அதிகமாகவே பேசுகின்றன. பெண்கள் தமக்கே உரியதெனக் கொண்டு, உணர்வு ததும்பச் சொல்லுகின்ற சிறுகதைகளின் வகை அவரது எழுத்தாற்றலுக்கு மதிப்புயர்வு தருகின்றன.

காலம் காட்டும் காட்சிகளானாலும் அதிற் காண்பவற்றைக் கதைகளாக்கத் தகுந்த கருத்தேர்ந்து எழுதியுள்ள சிறப்புப் பாராட்டுக்குரியதாகும்.

தமது தரமான படைப்புக்கள் மூலம் ஒளிரும் பெண் எழுத்தாளர் வரிசையில் தாட்சாயணியின் எழுத்துக்களுக்கும் தரமான உயர்ந்த இடமுண்டு என்பதை இத்தொகுப்பிலுள்ள கதைகள் வலியுறுத்துகின்றன. முதன்மையாய் ஒளிரும் பெண் சிறுகதை எழுத்தாளரான தாமரைச்செல்வியின் முன்னுரை, நூலின் மாண்புக்கு மேலும் சிறப்புரைக்கின்றன.

## உயிர்ச்சமர்




கவிதையை ஈழத்தில் எல்லோரும் எழுதுவார்கள். ஆனால், கவிதையாக எழுதிக் கொள்வதில்லை என்ற குறையுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற கவிஞர்களின் கவிதைப் புத்தகங்களை படிக்காததுதான் இதற்கு ஒரு காரணமாக உள்ளது. கவிதை எழுதத் தொடங்கும் முன் என்னத்தைப் பற்றி எழுதப் போகிறோம் என்று முதலில் தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்குப் பிறகு மரபுக் கவிதையா, புதுக் கவிதையா, கைக்கூ கவிதையா என முடிவு எடுக்க வேண்டும். அதன் பிறகு எழுத வேண்டும்.

ஆனால் இன்றைய இளைஞர்கள் புதுக் கவிதை என்று கவிதையை வசன நடையில் எழுதி, அதன் அர்த்தத்தையே இல்லாமல் செய்கின்றனர். ஆகவே புதுக் கவிதை எழுதுபவர்கள் இதை நன்கு சிந்திக்க வேண்டும். ''உயிர்ச்சமர்'' என்ற புதுக் கவிதைத் தொகுப்பினை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் ஜே.எஸ். ராஜ் எழுதி வெளியிட்டுள்ளார். இந்தக் கவிதைகள் அனைத்தும் ஊடகங்களில் வெளிவந்த கவிதைகளாக உள்ளன. பாதுகாவலன், மித்திரன், உதயன், தினக்குரல், வலம்புரி போன்ற பத்திரிகைகளில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. கண்ணீர்க் கல்லறை என்ற தலைப்பில் உள்ள கவிதையில்

''நிலம்
தொடும் பார்வைகள்
எழுந்து வந்து
உன்
மௌனத்தை எப்போது
மொழி பெயர்க்கும்'' என்ற கவிதை இவர் எழுதிய கவிதைகளில் புதுக் கவிதையாக சிறப்பாக உள்ளது. கவிதை நானும் எழுதுவேன் என்று நிருபித்திருக்கிறார். தாய்த்தீவு, பெண்ணியம், புது வசந்தம், முதுமையின் முகவரி, காதல்கற்கள், நட்புக்காக, ஏமாற்றம், அநாதைப் பிணங்கள், தொலைபேசி, பொறுமை, இறுதித் தீர்ப்பு, சிதையாத கனவு, முகவரிதேடல், நரகப் பிரபஞ்சம், தாய்முகம், நியாயம், அதிர்ஷ்டம் என்ற தலைப்புகளில் கவிதைகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு கருத்துக்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



சுன்னாகம் மயிலணிக் கந்தசாமிக் கோயில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அமரர்கள் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள், ஸ்ரீமதி மனோன்மணி அம்மா ஆகியோரது நினைவாக வெளியிடப்பட்ட ''வைதீக ஆபஸ் தம்ப சபிண்டீகரண சிரார்த்தப் பிரயோகம்'' நூல் வெளியீட்டு விழாவின் நூலாசிரியர் சிவஸ்ரீ ஷ. சோமாஸ்கந்தக் குருக்களிடமிருந்து பேராசிரியர் பிரமஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் நூலைப் பெற்றுக் கொள்கிறார்.

## சேவையால் உயர்ந்தவர் பண்டிதர் ச.க.தம்பு



குருக்கள் மாவடி என்னும் திருவூர் வடக்கு மிருசுவில் கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கிய வளமான கிராமம். நீர்வளம், நிலவளம், கல்வி வளம் நிரம்பிய இக்கிராம மக்கள் சைவ பாரம்பரிய மரபுகளின்படி வாழ்ந்து, தமது வாழ்வை வளமாக்கியவர்கள். புராண படனம் செய்வதில் கைதேர்ந்த பலர் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெருமைமிக்க இக்கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தவர் தான் பண்டிதர் ச.க.தம்பு. அன்பும், பண்பும், பரிவும் இயல்பாகக் கொண்ட இவர் நல்மாணாக்கனாக இருந்து ஆரம்ப, இடைநிலைக் கல்வியை மிருசுவில் அரசினர் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் பெற்றார்.

1945 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய கலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் சித்திபெற்று, பரமேஸ்வராக் கல்லூரியில் மூன்றாண்டு ஆசிரிய பயிற்சியைப் பெற்றதோடு, மதுரைப் பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றார். இதே காலப் பகுதியில் சித்திர ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த சிலரில் இவரும் ஒருவராவார்.

### நீத்தார் நயப்புரை

சேர்.பொன் இராமநாதன் அவர்களின் முகாமையில் இருந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆசிரியராகவும், உப அதிபராகவும் இரு பதாண்டுகள் தெளிவு, துணிவு, அர்ப்பணிப்பு ஆகிய தாரக மந்திரங்களைக் கைக்கொண்டு, பல ஆயிரக்கணக்கான மாணவர்களை வளமாக்கி, நல்வாழ்வுக்கு அத்திவாரமிட்டவர். இவர் உயர்தர வகுப்புகளுக்கு எந்த ஒரு பாடத்தையும் கற்பிப்பதில் வல்லவர். இலங்கை அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைச் சுவீகரித்த காரணத்தால் இவர் அதிபர் பதவியில் உயர்வு பெற்று, நாவலப்பிட்டி கதிரேசன், புசல்லாவை சரஸ்வதி, கண்டி மாளிகாவை, கண்டி இந்து ஆகிய கல்லூரிகளில் புகழ்பூத்த அதிபராக இருந்து மலையகப்பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றினார். மீண்டும் இடமாற்றம் பெற்று, சொந்த கிராமப் பாடசாலையாகிய மிருசுவில் அரசினர் வித்தியாலயத்தில் அதிபர் பொறுப்பை ஏற்று, இப்பாடசாலையின் பௌதிக வளங்களைப் பெருக்கியதோடு, மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளையும் உயர்த்தினார். தமது சேவையில் இருந்து 1984 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஒருவரிடம் ஒரு துறைசார்ந்த ஆற்றல்கள் அதிகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இவரிடமோ பல்துறை சார்ந்த ஆற்றல்களும், அனுபவங்களும் இருப்பதால் எல்லோரும் இவரை சகலகலாவல்லவன் பண்டிதர் தம்பு என அன்பாக அழைப்பார்கள்.

நல்லாசானாக புகழ்பூத்த அதிபராக, கல்விமானாக, எழுத்தாளனாக, கலைஞராக, கவிஞராக, நாடக ஆசிரியராக, சமூக சேவையாளனாக, நல்ல குடும்பத் தலைவனாக, சிறந்த விவசாயியாகத் திகழ்ந்த மூதறிஞர் பண்டிதர் ச.க. தம்பு அவர்கள் தமது எண்பத்தெட்டாவது அகவையில் 22.02.2012 ஆம் திகதி சிவராத்திரி சிவவிரத தினத்தில் சிவபதம் அடைந்து விட்டார். மனிதப் பிறப்பின் மாண்பை அறிந்து, தமது வாழ்வை வளமாக்கியதுடன் பலரையும் நல்வாழ்வு வாழச் செய்து சேவையால் உயர்ந்து நிற்கும் மூதறிஞர் பண்டிதர் தம்பு அவர்கள் என்றென்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

**க.பேரம்பலம்,**
**ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்.**

# நல்லவன்.... எனக்கு நானே நல்லவன்

ஒருவர் நீதிபதியாவது என்பது மிகவும் சிரமமான ஒன்று. அதிகமாகப் படித்திருக்க வேண்டும். குணத்தில் பெரிய மனிதப் பண்புகள் வேண்டும். வாழ்வில் நேர்மை வேண்டும். அவருக்குத் தோற்றத்தில் கூட ஒரு தோரணை வேண்டும் என்றெல்லாம் கருதப்பட்டது. நாளாக நாளாக இவை எல்லாம் அவசியமே இல்லை. பட்டப்படிப்பும், சட்டப்படிப்பும் இருந்து அதற்கான வயதும் இருந்தால் போதாதா என்று ஒரு ஜனநாயக எண்ணம் உலகெங்கும் பிறந்துவிட்டது.

ஜனநாயக நாட்டில் எல்லோருமே இந்நாட்டு மன்னர் என்று ஆகி விட்டது போன்று எல்லோருமே இப்போது நீதிபதிகள் ஆகி விட்டோம். நாம் குற்றவாளியே இல்லை என்று நாமே அறிவிக்கிறோம். நம்முடைய எந்தத் தவறும் தவறே அல்ல என்று நாமே தீர்மானிக்கிறோம். சமூகம் நம் மீது சுமத்தும் எந்தக் குற்றத்திலிருந்தும் நாமே நம்மை உடனே விடுவித்து விடுகிறோம். வெறும் பிணையில் விடவில்லை. குற்றமற்றவர் என்றே விடுதலை செய்கிறோம். நம்முடைய எல்லா அயோக்கித்தனங்களையும் ஏதோ ஒரு காரணம் சொல்லி நாமே நியாயப்படுத்தி விடுகிறோம். எல்லோருமே இப்போது நீதிபதிகள் ஆகி விட்டோம். இனி யாரையும் யாரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவே முடியாது. எல்லோரும் அவரவர் தீர்ப்பின்படி உத்தமர்கள்... '' நல்லவன்.... எனக்கு நானே நல்லவன்'' என்ற சினிமாப் பாட்டுதான் இனி நமது தேசிய கீதம்.

மகாபாரதத்தில் ஓர் இடம். பேராசை பிடித்த துரியோதனனிடம் நாட்டை இழந்த தருமர் யுத்தம் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று முடிவு செய்வார். அப்போது துரியோதனனின் தகப்பனான திருதராட்டிரன் ஒரு நியாயத்தைத் தருமருக்கு எடுத்துச் சொல்லுகிறான். '' மகனே நீ மிகவும் நல்லவன். என் தம்பி மகன் என்றாலும் என்னைத் தகப்பனாகவே மதித்து என் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவன்; என் வார்த்தைகளை மீறாதவன்.எனவே நீ போருக்கு வராதே. காட்டிலேயே எஞ்சிய வாழ்நாளைக் கழித்து விடு. நான் பெற்ற பிள்ளைகள் மாபாவிகள். பேராசை பிடித்தவர்கள். என் பேச்சை மதிக்க மாட்டார்கள். எனவே அவர்களே இந்த நாட்டை ஆளட்டும். நீ என் நல்ல மகன் அல்லவா'' என்று செய்தி அனுப்புகிறான். எப்படிப்பட்ட நியாயம் பாருங்கள்.

சில பேர் சொல்லும் நியாயங்களைக் கேட்டால் நமக்குத் தலையே வெடித்துவிடும் போல் இருக்கிறது. இவர்கள் புரிந்து பேசுகிறார்களா? அல்லது வேண்டுமென்றே இப்படிப் பேசுகிறார்களா என்பது நமக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

ஒரு பூங்காவில் மூன்று வயதான பெரியவர்கள் உட்கார்ந்து கதையளப்பது வழக்கம். அதில் ஒருவர் மிகவும் விசித்திரமானவர். யார் எது சொன்னாலும் அதை மறுத்துவிடுவார். அப்படியொரு சாமார்த்தியம். ஒரு நாள் மற்ற இரண்டு கிழவர்களும் முதுமையின் கொடுமை பற்றியும், இயலாமை பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். '' வயதாக வயதாக எல்லாம் சிரமமாக இருக்கும். முன்னர் போன்று எதுவுமே முடிய வில்லை'' என்றார் ஒருவர்.

'' இளமைக்கும் முதுமைக்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா. இளமையில் இருந்ததைப் போன்று இப்போதும் இருக்க முடியுமா? வயதாக வயதாக நம்ம சக்தி குறையும் நாம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் '' என்றார் இரண்டாவது பெரியவர்.

உடனே விசித்திரக் கிழவர், '' உளறாதீர்கள் ... நான் இதை நம்ப மாட்டேன்.. இளமைக்கும் முதுமைக்கும் ஒரு மாற்றமும் இல்லை. அப்போது எப்படி இருந்தோமோ அப்படியே தான் இப்போதும் நான் இருக்கிறேன். வயதாகி விட்டது என்பது எமது கற்பனை'' என்றார். முதல் கிழவர் கோபத்துடன் பக்கத்தில் இருந்த ஒரு பெரிய கல்லைக் காட்டி '' நாற்பது வயதில் நான் அந்தக் கல்லைத் தூக்கிப் பார்த்தேன்... அப்போதும் தூக்க முடியவில்லை. இப்போதும் தூக்க முடியவில்லை. அதே போன்றுதான் இருக்கிறேன். வயதால எந்த மாற்றமும் இல்லை.'' என்று போட்டாரே ஒரு போடு.

குடிக்கிறவன், சூதாடுகிறவன், கற்பழிக்கிறவன், திருடுபவன்,கட்சி மாறுபவன், லஞ்சம் வாங்குபவன், ஊரை ஏமாற்றுபவன், மத , இன மொழி வெறியைத் தூண்டுபவன் இப்படி யாரை வேண்டுமானாலும் கேளுங்கள்...யாரோடு வேண்டுமானாலும் பேசிப் பாருங்கள். எல்லோரும் ஏதோ ஓர் அருமையான நியாயத்தை முன் வைக்கிறார்கள். இன்று எம்முடைய எல்லாத் தவறுகளையும் நம்முடைய அறிவு நியாயப்படுத்த தயாராக இருக்கிறது. கொலைகாரன் கூட கொலை உணர்வுக்கு மரபணு வழி வருகிறது என்று விஞ்ஞானத்தை மேற்கோள் காட்டி விடுகிறான். திருடுபவன் கூட சமூகப் பங்கீட்டின் பிழை திருட்டை உண்டாக்கிவிடுகிறது என்று மார்க்ஸியத்தைச் சொல்லத் தொடங்குகிறான். அக்கிரமத்திற்கும் அநியாயத்திற்கும் ஆதரவாக நியாயம் பேச அறிவு ஜீவிகள் தொண்டையைக் கனைத்துக் கொண்டு தயாராக வந்து விடுகிறார்கள். அப்படி அடுத்தவர் உதவி இல்லாவிட்டாலும், தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளும் நீதிபதியாக நம் மக்கள் தங்களை நியமித்துக் கொள்ளுகிறார்கள்.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## கல்யாண மண்டபம் கலா மண்டபமாகலாம்...

நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மூன்று நாள் இசைவிழா ஒன்று கடந்த வார இறுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வைக் கண்டு களிக்கும் ஆசையுடன் சென்ற நான் இம்மன்றத்தின் கலாமண்டபத்தில் ஏற்பட்டிருந்த திடீர் மாற்றங்களைக் கண்டு அதிர்ந்து போனேன்.

கலாமண்டபத்தின் உள்ளே வடமேற்கு மூலையில் பார்வையாளர்கள் அமர வேண்டிய இடத்தில் புதிதாக அலுவலக அறை ஒன்று பெரிதாக அமைக்கப்பட்டுள்ளது. பிரதான நுழைவாயில் வடக்குப் பக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் இம்மண்டபத்தின் நடுவே மணவறையானது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட நிலையில் கிழக்கு முகமாக வைக்கப்பட்டுள்ளது.

இசைவிழா நடைபெற்ற மூன்று நாள்களும்கூட இது அகற்றப்பட்டிருக்கவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இக்கலா மண்டபத்தின் கிழக்குச் சுவரானது இடிக்கப்பட்டு பெரிய வாசல் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த மனவேதனையை என்னுள் ஏற்படுத்தியதுடன் மன்றத்தின் மீதிருந்த நம்பிக்கையையும் சிதறடித்து விட்டது. இந்த வாசல் மணவறையை நோக்கியதாக இருப்பதால் இந்தக் கலாசார மண்டபமானது நிரந்தரமாகக் கல்யாண மண்டபமாக மாற்றப்பட்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் பொன்.சுந்தரலிங்கம், சி.பத்மலிங்கம் போன்றோரின் நிர்வாகத்தில் இருந்தபோது குடாநாட்டையே அதிர வைத்த பலநாள் இசைவிழாக்களை இம்மன்றமானது ஆண்டுதோறும் நடத்தியதை எவராலும் மறக்க முடியாது. அத்தகைய ஒரு மண்டபம் இன்று கல் யாண மண்டமாகக் காலமாற்றம் பெற்றுள்ளதைக் காண்கையில் உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

திடீர் இசைவிழாக்கள் வெறும் மண்டபங்களில் நடத்தப்படுவதும் குறித்த நேரத்திலிருந்து ஒரு மணிநேரம் தாமதமாக நிகழ்வுகள் தொடங்குவதும் அழைப்பிதழில் இருக்கும் நிகழ்வுகள் நடைபெறாமல் போவதும் சீரற்ற ஒலியமைப்பும் பொருத்தமற்ற தெளிவில்லாத அறிவித்தல்களும் என்று வேறுபல விடயங்களையும்கூட அவதானிக்க முடிந்தது.

மண்டபப் பராமரிப்பு வருமானம் என்பவற்றுக்காக இந்தக் கலாசார மண்டபத்தில் திருமணங்களை நடத்த இடம் வழங்கப்படுவது புரிந்து கொள்ளக்கூடியது என்றாலும், இசைக் கலைஞர்களுக்கு என்று இருக்கக்கூடிய முக்கியமான ஒரு கலா மண்டபத்தை முற்றிலும் திருமண மண்டபமாக்கலாமா என்ற எண்ணம் இதயத்தை நெருடுவதையும் தவிர்க்க முடியவில்லை.

காலச் சூழல் கலைகளைப் பழகவும் வளர்க்கவும் ஏதுவான நிலையை ஏற்படுத்தி இருக்கையில் இந்தக் கலா மண்டபத்தையும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே கலாபிமானிகளின் உருக்கமான வேண்டுதலாகும். ஒரு கல்யாண மண்டபம் கலாசார மண்டபமாக மாற்றம் பெறலாம். ஆனால் கலாசார மண்டபம் ஒன்று கல்யாண மண்டபமாக மாற்றப்படக்கூடாது.

**ரொ.த.நாதன்**
**யாழ்ப்பாணம்**

## கவனிப்பார் இல்லாத வீதியின் அவலம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குள் வண்ணார் பண்ணை என்னும் பகுதியில் அமைந்துள்ள ஓடை ஒழுங்கை கடந்த 20 வருடங்களாக கவனிப்பார்ரின்றி இருக்கிறது. குன்றும் குழியுமாக காணப்படும் இந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியூடாக தினமும் 250 பேர் வரையில் போக்குவரத்து செய்கின்றனர் .600 மீற்றர் நீளம் கொண்டது. இந்த வீதியில் உள்ள காட்டுத்துறை விநாயகர் ,மாரி அம்மன் கோயில் · அடியார்களது உதவியினால் குறிப்பிட்ட அளவு தூரம் மணல் ,கல் போட்டுப் புனரமைப்புச் செய்யப்பட் டுள்ளது. வீதியின் அவல நிலையால் அடிக்கடி விபத் துகள் நிகழ்கின்றன .

மாநகர சபையிடம் பல தடவை முறையிட்டும் கவனிக்கப்படாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கின்றது. இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**இ.குமாரசாமி சர்மா**
**இ.சந்தானகோபால சர்மா**

## குஞ்சுக்கோடாலிக்கல்லுக் குளம் புனரமைக்கப்படாதது ஏன்?

வன்னிப்பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒரு கிராமம்தான் குஞ்சுக்கோடாலிக்கல்லு.

இந்தக் கிராமமானது 1950 ஆம் ஆண்டளவில் அப்போது வவுனியா மாவட்டமாக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கிராமமாகும் இங்கே குடியிருப்பதற்கு மேட்டு நிலக்காணிகள் வழங்கப்பட்ட போதிலும் அங்கே அடிப்படை வசதிகள் எதுவும் அமைத்துக் கொடுக்கபடாததால் அன்றைய நாளில் இருந்தே அங்கே வயல் காணிகள் வழங்கப்பட்ட அனைவரும் அயல் கிராமமான முள்ளியவளையிலேயே வசித்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் நெல் செய்கைக்கென சுமார் 200 ஏக்கர் வரையான நிலங்கள் வழங்கப்பட்டு அதற்கென அக்கால கட்டத்தில் நீர்பாசனம் செய்வதற்கு வசதியாக ஒரு குளமும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் குளமானது இந்த மாவட்டத்தில் ஏனைய குளங்களுடன் ஒப்பிடும் போது எந்தவிதமான புனரமைப்பும் செய்யப்படாது சீரற்ற நிலையிலேயே இருக்கின்றது.

மாவட்டம் மாறினால் என்ன?அரசு மாறினால் என்ன? அரச அதிகாரிகள் மாறினால் என்ன? இந்தக் குளத்துக்கு எந்த விதமான விமோசனம் ஏற்படப் போவ தில்லை. இந்தக்குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் அனைவரும் அயல் கிரமமான முல்லியவளையைச் சேர்ந்தவர்கள் காலாகலமாக இவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இம் மக்களுக்கான குறிப்பிட்ட குளம் புனரமைப்புச் செய்வதில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. குறித்த குளமும் அதன் வாய்க்கால்களும் பாதைகளும் சொல்ல முடியாதவாறு சீரற்ற நிலையிலேயே உள்ளது.

இந்த மாவட்டத்தில் ஏனைய குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளைப் போன்று சகல நீர்பாசன வசதிகளுடன் குஞ்சுக்கோடாரிக் கல்லு குள விவசாயிகள் அனுபவிக்காது புறக்கணிக்கப்படுவது ஏன் என்பது இன்று வரை தெரியாமலே உள்ளன.

இந்த விவசாயிகள் தங்கள் நிலங்களுக்குரிய நீர்ப்பாசன வரிகளையெல்லாம் ஒட்டிசுட்டான் கமநலசேவைகள் திணைக்களத்திலேயே செலுத்தி வந்தார்கள். ஆகவே இனியாவது இந்தக் குளத்தினை பற்றி அதிகாரிகள் கவனம் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்பாக வேண்டுகின்றேன்.

**வே.ம.இந்திரநாதன்,**
**முள்ளியவளை**

# நடுத்தர வயதுப் பெண்களின் அழகுப் பராமரிப்புக்கு



அழகு குறித்த தெளிவான நிலை, கட்டுக்கோப்பான உடல், தாய்மை மற்றும் பூரிப்பு என ஒரு பெண், 35 வயதில் அழகின் முழுமையை அடைந்து விடுகின்றனர்.

வயது மற்றும் பல்வேறு நிலைகளைக் கடந்து உயர்ந்த நிலைக்கு வருதல், மகிழ்ச்சியான வாழ்க்கை, ஒன்றோ இரண்டோ குழந்தைகளை வளர்த்தல் மற்றும் பிரசவம் என்று பல்வேறு நிலைகளை கடந்த நிலையில் தெளிவான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஆனாலும், 35 வயதுக்கு பின்னர், சருமபாதுகாப்பு அவசியம் என்கின்றனர் அழகுக்கலை நிபுணர்கள். ஏனென்றால் சருமத்தின் செயல்பாடுகள் மெதுவாக குறைய ஆரம்பிக்கின்றன. இதனால் தோலில் படை, தேமல் போன்ற சரும சிக்கல்கள் தோன்றும். மேலும் சருமத்தின் மினுமினுப்பும், பளபளப்பும் குறைய ஆரம்பிக்கும். கண்களைச் சுற்றி கருப்பாக தோன்ற ஆரம்பிக்கும்.

சருமத்தில் வருவதுபோல் கூந்தலிலும் மாற்றங்கள் ஏற்படும். முடி உதிர்தல், முடி முறிதல், பொடுகுத் தொல்லை, கூந்தல் மினுமினுப்பு மற்றும் ஜொலிப்பு குறைதல் ஆகியவை ஏற்படும். 35 வயது கடந்தவர்கள் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை பேஷியல் செய்து கொள்வது நல்லது.

சிலருக்கு சரும சுருக்கங்கள் இருக்கும். இதனால் இளமை குறைய ஆரம்பிக்கும். இதற்கு ''தெர்மோ ஹெர்பல் மாஸ்க்'' போடலாம். இதனால் சருமம் இறுக்கமாகி சுருக்கம் நீங்கும். வயதை குறைத்துக் காட்ட நிறைய பேஷியல் உள்ளது. சருமத்துக்கு தகுந்த பேஷியலை தேர்ந்தெடுத்து பயன்படுத்தினால் இளமை உங்கள் வசமாகிவிடும்.

வயதை சரியாக வெளிக்காட்டுவதில் முக்கிய பங்கு வகிப்பது கண்கள்தான். கண்களின் ஓரத்தில்... கீழ் பகுதியில் கரட் சாற்றில் நனைத்த பஞ்சை, ஒத்தி எடுத்தால் சுருக்கம் மறையும். சிலருக்கு கண்களின் கீழ் பகுதியில் நீர்க்கட்டு போன்று வீங்கி இருக்கும். இதற்கு காரணம் கொழுப்பு. இதை நீக்க முக் கிய மசாஜ் உள்ளது. சிறந்த பியூட்டி பார்லருக்கு சென்று மசாஜ் செய்து அதை நீக்கிவிடுவது நல்லது.

35 வயதைக் கடக்கும்போது, ஓமோன்களில் சில மாற்றங்கள் நிகழும். இதனால் கழுத்து பகுதியில் கறுப்பு நிறத்தில் திட்டுக்கள் போன்று பரவும். குறிப்பாக பல பெண்கள் தங்களுடைய வசதியை... செல்வாக்கை வெளியில் காட்டுவதற்காக தங்கச் சங்கிலியை தடிப்பாக அணிவார்கள். தங்கச் சங்கிலியின் உராய்வால் கறுப்பு நிறம் போன்று ஏற்படும். இதற்கு பயறு தூள், எலுமிச்சை சாறு, சர்க்கரை ஆகியவற்றை கலந்த கலவையை அந்த இடத்தில் பூசி மசாஜ் செய்து கழுவினால் கறுப்பு நிறம் நீங்கும்.

குறிப்பிட்ட வயதுக்கு பிறகு சருமத்தில் உள்ள செபேஷியல் சுரப்பிகள் செயல்பாடு குறையும். மினுமினுப்பு குறையும். இதனால் வறட்சி தோன்றி... முதுமை எட்டிப் பார்க்கும். 35 வயதை கடப்பதால் ரத்த அழுத்தம், நீரிழிவு ஆகியவை ஏற்படுவதால் மருந்து சாப்பிடுவோம். இதில் உள்ள இரசாயனங்கள் உடலில் கலப்பதாலும் வறட்சி ஏற்படும். வாரத்துக்கு ஒருமுறை எண்ணை தேய்த்து குளித்து வந்தால் வறட்சியை கட்டுப்படுத்தும். படை மற்றும் கரும் புள்ளிகள் இருந்தால் பியூட்டி பார்லருக்கு சென்று மாற்றி சருமத்தை பாதுகாக்கலாம்.

வயது செல்லச்செல்ல கால்களின் மென்மை குறைந்து கரடுமுரடு தன்மைக்கு மாறி வரும். இதற்கு இரவில் தூங்குவதற்கு முன்பாக லேசான சுடுநீரில் எலுமிச்சை சாறு கலந்து கால்களை மூழ்க வைக்கவும். கால்மணி நேரம் கழித்து கால்களை எடுத்து பாதங்களை தேய்த்துக் கழுவினால் மென்மையாகி அழகாக மாறும். மேலும் உடம்பும் புத்துணர்ச்சி பெறும்.

அதேபோல், கைகளில் சருமம் வரண்டு நரம்புகள் வெளியே தெரிந்தால் இளமையாக தோற்றமளிக்காது. நகம் கூட நிறம்மாறி காணப்படும். இதற்கு தினமும் காலை, இரவு வேளைகளில் 'அன்டி ஏஜிங் கிறீம்' அல்லது பேபி லோஷன்களை பயன்படுத்தி மசாஜ் செய்தால் இரத்த ஓட்டம் அதிகரித்து கைகள் இளமையாகும்.

35 வயதில் தலைமுடிக்கு டை போடுவது அவ்வளவு நல்லதல்ல. இப்படி 35 வயதிலேயே கூந்த லுக்கு டை போடும் பழக்கம் உள்ளவர்கள், கிட்டத்தட்ட 5 வருடங்கள் கழித்து டை போடமாட்டார்கள். அதுமட்டுமின்றி, தலைமுடியும் செம்படை நிறத்துக்கு மாறிவிடும்.

ஹேர் டையில் இருக்கும் அமோனியா தலைக்கு அலர்ஜியை ஏற்படுத்தும். ஆதலால் அமோனியா இல்லாத ஹேர்டையை பயன்படுத்துவது நல்லது. அமோனியா இல்லாத ஹேர் டை தற்போது மார்க்கெட்டில் அதிகமாக கிடைக்கின்றன.

ஹேர் டை தொடர்ந்து பயன்படுத்துபவர்களுக்கு படை தோன்றும் வாய்ப்பு அதிகம். ஹேர் டை பயன்படுத்துபவர்கள் மாதம் ஒருமுறை 'ஹேர் ஸ்பா' செய்து கொள்ளவும். மாய்சரைசர், காம்பெக்ட், பவுண்டேஷன் ஆகிய மூன்றும் கலந்த கிரீம் பயன்படுத்துவது நல்லது. கண்களுக்கு காஜல் பென்சிலை பயன்படுத்திய பிறகு, பீலிகளுக்கு கிறீம் நிறத்தில் ஐ ஷடோ கொடுக்க வேண்டும்.

உதடுகளுக்கு இளநிறத்தில் லிப்ஸ்டிக் போட வேண்டும். இயற்கையாக இருக்கும் நிறம் கெட்டுப் போகாமல் இருக்க 'லிப் பாம்' பூசிவிட்டு லிப்ஸ்டிக் போடுவது நல்லது.

# வெயிலால் கறுக்கும் சருமத்துக்கு ஹோம் பேஷியல்



வெயிலிருந்து உங்கள் சருமத்தை பாதுகாத்து, புதுப்பொலிவு பெறச் செய்ய எளிய ஹோம் ஃபேஷியல்ஸ்...

✱ சூரியனில் இருக்கும் அல்ரா வைலட் கதிர்கள் முகத்தில் படுவதால்தான் தோல் பாதிக்கப்பட்டு கருமை நிறமாகிறது. இதைத் தடுக்க கடல்பாசி, சந்தன எண்ணெய், பன்னீர் மூன்றையும் சில துளிகள் கலந்து தடவினால் தோல் அழகு பெறும். ஜாதிக்காயும், சந்தன பவுடரும் கூடக் கலந்து போடலாம். அல்லது கசகசாவில் எலுமிச்சைச் சாறு கலந்து போடலாம்.

✱ பாலுடன் எலுமிச்சை சாறு கலந்து, அதனுடன் சிறிதளவு சர்க்கரையை சேர்த்து, முகத்தில் பூசவும். அரைமணி நேரம் கழித்து, வெந்நீரில் கழுவினால் முகம் பளபளக்கும்.

✱ கசகசாவை ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.

✱ பப்பாளிச் சாற்றை முகத்தில் தடவினால், வியர்குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.

✱ கொத்தமல்லி இலையை அரைத்து பூசினால் முகம் வசீகரமாக மாறும்.

✱ எல்லாவித பழங்களும் முகத்திற்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனுக்குடன் சுத்தமடைந்து பளபளப்பாய் காட்சி தரும்.

✱ தக்காளி சாறு தடவி வந்தால் சருமத்தை மிருதுவாக்கி ஒளிரச் செய்யும்.

✱ கசகசாவை மூன்று அல்லது நான்கு ஸ்பூன் எடுத்து அரைத்து வடித்த கஞ்சி அல்லது தயிரில் போட்டுக் கலக்கி உடம்பில் தேய்த்துக் குளித்துவர, சரும அரிப்பு, உடல் வெப்பம் போன்ற தொல்லைகள் தீரும்.

# மெலிந்த மற்றும் குண்டான உடல் உள்ளவர்களுக்கு



அழகு விடயத்தில் பிரச்சினை இல்லாதவர்களே இல்லை. அதற்காக விலை உயர்ந்த அழகு சாதனங்களை முகத்தில் உடலில் வைத்து தேய்க்க வேண்டிய அவசியமில்லை. முதலில் அழகு என்பது மனசை பொறுத்ததுதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மனசு நன்றாக இருந்தால் புன்னகை முகமாக - எல்லோரையும் வசீகரிக்கும் முகமாக - அழகாக மாறிவிடும். அழகுக்கு எதிராக இருப்பது மன அழுத்தம் மட்டுமே. மன அழுத்தம் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். எப்போதுமே மனதும், உடலும் குளிர்ச்சியாகும் விதத்தில் நன்றாக குளிப்பது நல்லது.

உடம்பில் எண்ணெய் தேய்த்து குளித்தாலும் உடலும், மனதும் குளிர்ச்சியடையும். தினமும் எண்ணை தேய்த்து குளிப்பது இளநரையைத் தடுக்கும். மேலும் வாத நோய்களை போக்கும். உடம்புக்கும் புத்துணர்வு கிடைக்கும். சருமத்துக்கும் மெருகு கூடும். உடலுக்கு ஆரோக்கியமும் ஏற்படும்.

அதுமட்டுமின்றி நமது உடம்பில் சேரும் விஷத் தன்மைகளையும் நீக்கும். ஒவ்வொருவரின் உடல் வாகுக்கு ஏற்றால்போல் எந்த எண்ணையை தேய்த்துக் குளிக்கலாம் என்பதை ஆயுள்வேதம் கூறுகிறது. அதை அறிந்து உங்களுக்கேற்ற எண்ணையைத் தேய்த்துக் குளிக்கலாம்.

இன்றைக்கு சவர்க்காரம் போட்டு குளிக்காத மனிதர்களே இல்லை என்று சொல்லலாம். சவர்க்காரம் இல்லை என்றாலும் அந்த தன்மை உடைய ஷம்புவோ அல்லது பவுடரோ தேய்த்தும் குளிக்கின்றனர். அதற்கு பதிலாக தேன், பால், கற்றாழைச்சாறு கலந்த கலவையை உடலில் தேய்த்துக் குளிக்கலாம்.

இது அழகு தருவதோடு உடம்பில் உள்ள அழுக்கையும் நீக்கிவிடும். இந்தக் கலவையை பயன்படுத்த முடியாதவர்கள், சிறுபயறு, கடலை மாவு, தேன் பயன்படுத்தியும் குளித்தால் சருமம் மெருகேறும். அழகு என்றால் அதில் தலைமுடிதான் மிக முக்கியமாக கருதப்படுகிறது. அதற்காக இப்போதெல்லாம் டை அடிக்கின்றனர் பலர்.

டை அடிப்பதற்கு பதிலாக 100 கிராம் மருதாணி தூள், 20 கிராம் நெல்லிக்காய் தூள் ஆகியவற்றுடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து ஊறவைக்கவும். காலையில் முடியில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து கழுவினால் அல்லது குளித்தால் நரையை போக்க இது உதவும்.

கண்ணுக்குத் தெரியாத உயிருள்ள பொருள்தான் பொடுகுக்கு காரணம். சீப்பு, துவாய் ஆகியவற்றை அடிக்கடி சுடுநீரில் கழுவி பயன்படுத்தவும். அடிக்கடி எண்ணை தேய்த்து தலைமுடியை அலசவும். ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடவும்.

நிறைய காய்கறிகள் சாப்பிடுவோருக்கு சருமம் பளபளப்பாக இருக்கும். இதனால் அவர்கள் எப்போதும் அழகாக இருப்பார்கள். கரட், கருணைக்கிழங்கு, வெங்காயம், கீரை, புடலங்காய் இதெல்லாம் சாப்பிட்டால் உடல் வனப்பு கூடும்.

மெலிந்த மற்றும் குண்டானவர்களுக்கு

உடல் மெலிந்தவர்கள் குண்டாக மாறுவதற்கு பல முயற்சிகளை எடுப்பதற்கு பதில் 101 நாளில் எளிதாக குண்டாகலாம்.

50 கிராம் வெந்தயத்தை வேக வைத்து அதனுடன் ஒரு மேசைக்கரண்டி நெய், வெல்லம் சேர்த்து 101 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் ஈஸ்ட்ரோஜன் அதிகரித்து உடம்பு குண்டாகிவிடும். ஈஸ்ட்ரோஜனை அதிகரிக்கும் சக்தி வெந்தயத்துக்கு உண்டு.

குண்டான உடம்புடன் கஷ்டப்படுபவர்கள், உடல் மெலிய 50 கிராம் கொள்ளை வறுத்து பொடியாக்கி தினமும் சாப்பிடவும். இது உடலில் உள்ள தண்ணீரை நீக்கி உடல் எடையை குறைத்துவிடும். உங்களுடைய உடல் சரியான நிலைக்கு வந்தவுடன் கொள்ளு சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளலாம். அல்லது தொடர்ந்து சாப்பிட்டாலும் உடலுக்கு நல்லதே.